உ

சிவமயம்.

ம்ருகேந்த்ர

சவ்யாக்யாநம்.



ம-௱-௱-ஸ்ரீ

கொ - ஷண்முகசுந்தர முதலியாரவர்களால்

சென்னை- சிந்தாதிரிப்பேட்டை

சிவஞானபோத யந்த்ரசாலையில்

அச்சிடப்பட்டது.



விரோதிவருஷம் மாசிமீ

சிவமயம்.

ம்ருகேந்திரோத்பத்தி.

—————

க—மிருகேந்த்ரம் என்பது சிம்ஹரூபமாய் நின் றுணர்த்தியதோர் உபாகமம். (மிருகேந்த்ரம்—சிம் ஹம்.)

உ—இது சைவமூலாகம மிருபத்தெட்டினுள் கா மிகத்தின் வழியாய்ச் சிவபேதமான ப்ரணவர் பரம்ப ரையி லுபதேசிக்கப்பெற்ற நரசிம்ம மூர்த்தியால் இந் திரனுக் குபதேசிக்கப்பட்டது.

* காமிகம்-கக- நட-பக்கங்களிற் காண்க.

ங—ம்ருகரூபமாயிருந்து இந்திரனுக் குபதேசித் தலெதனி னுமாம்.

ச—இதனைப் பதரிகாஸ்ரமவாசிகள் பாத்வாஜருஷி யை முன்னிட்டுத் தேவேந்திரனை ப்ரஸ்னைசெய்வித்து அவரால் உத்தர மளிக்கப்பெற்றதோர் சிவஞானபோ தமாய்ப் பின் அவர்களின் சந்தான பரம்பரையா யநுக் ரஹித்து வந்தனர். (பதரி - இலந்தை.)

ரு—இதில் முதலாவது ஞானபாதம், இரண்டாவ து க்ரியாபாதம், மூன்றாவது யோகபாதம், நான்காவது சரியாபாதமாகக் கூறப்பட்டது. (இவ்வா றுரைப்பது சைவாகமமுணர்ந்தோர் சாம்ப்ரதாயமாக அவ்வவ்வாக மங்களிற் கண்டுணர்க.)

சிவமயம்.

ம்ருகேந்திரோத்பத்தி.

க—மிருகேந்த்ரம் என்பது சிம்ஹரூபமாய் நின்றுணர்த்தியதோர் உபாகமம். (மிருகேந்த்ரம்—சிம்ஹம்.)

உ—இது சைவமூலாகம மிருபத்தெட்டினுள் காமிகத்தின் வழியாய்ச் சிவபேதமான ப்ரணவர் பரம்பரையி லுபதேசிக்கப்பெற்ற நரசிம்ம மூர்த்தியால் இந்திரனுக் குபதேசிக்கப்பட்டது.

* காமிகம்-கக- ௩௩-பக்கங்களிற் காண்க.

௩—ம்ருகரூபமாயிருந்து இந்திரனுக் குபதேசித்ததெனினுமாம்.

ச—இதனைப் பதரிகா ஶ்ரமவாசிகள் பரத்வாஜருஷியை முன்னிட்டுத் தேவேந்திரனை ப்ரஶ்னைசெய்வித்து அவரால் உத்தர மளிக்கப்பெற்றதோர் சிவஞானபோதமாய்ப் பின் அவர்களின் சந்தான பரம்பரையா யநுக்ரஹித்து வந்தனர். (பதரி - இலந்தை.)

ரு—இதில் முதலாவது ஞானபாதம், இரண்டாவது க்ரியாபாதம், மூன்றாவது யோகபாதம், நான்காவது சரியாபாதமாகக் கூறப்பட்டது. (இவ்வா றுரைப்பது சைவாகமமுணர்ந்தோர் சாம்ப்ரதாயமாக அவ்வவ்வாகமங்களிற் கண்டுணர்க.)

இந்நூலின் பயன் முதலியன :—

௬—அம் ம்ருகேந்த்ரத்துள் முதலாவது (வித்யா பாதம்) ஞானபாதம், உபோத்காதத்தை யுள்ளிட்டுப் பதின்மூன்று ப்ரகரண மடங்கியுள்ளது. காமிகாகமத்தி லாங்காங்கு விவகரித்திருக்கும் ஞானார்த்தங்களைத் தொகுத்துக் கூறியுள்ளது. ஏனைய ஞானநூல்களுக் கெடுத்துக்காட்டும் ப்ரமாண நூல்.

௭—இந்நூலிற்குச் சமஸ்கிருத வ்ருத்தியுரை யியற்றியவர் சங்கரகண்டர் பௌத்திரர், பட்டவித்யாகண்டர் புத்ரர், பட்டநாராயண கண்டரென்னும் பெயருடையவர். இவர் இந்நூற்கன்றி யேனைய சிவாகமங்களிற் சிலவற்றிற்கு முரை யியற்றி யிருக்கின்றனர்.

௮—இந்நூல்போன்ற அரிய பெரிய விவருரை வடநூற் பயின்றோர்க்கன்றித் தமிழ்ப்பாஷா வல்லவர்களிற் சைவ சமயாசாரம் பூண்டொழுகுவோர்க்கும் பயன்படுமாறு தமிழ் மொழிபெயர்ப் பச்சிடப்பட்டது. இந்நூலின்கருத்தே அருணந்தி சிவாசாரியர் ரௌரவாகம சிவஞானபோத சூத்திரத்திற்கு ஏது திருஷ்டாந்தமாக வெடுத்துக்காட்டிச் சிவஞானசித்தியி லமைத்திருப்பதை உரையாசிரியர் சிவாக்ரயோகிகள் முதலியோர் ஆங்காங்கு குறிப்பித் திருப்பதையும் சிவஞானயோகிகள் சிவஞானபோத த்ராவிட பாஷ்யத்திற் குறிப்பித்திருப்பதையும் வாசித்துக் கேட்டுந் தெளிக.

௯—இவ்வியந்த்ரசாலை மேற்கொண்ட சிவஞான


போதத்தை மிக்கவாவினோர்க்கு அச்சிவஞான மேலு
மேலு மபிவிருத்தியாம் பொருட்டு இதுபோன்ற நூல்
களை அச்சிட்டு வருகின்றேன். இதனைப் பெற்று வாசி
ப்போர் மேலு மேலு மஞ்ஞான வழிப்படாது மெய்ஞ்
ஞானத்தைப் பிரகாசிப்பிக்கச் செய்தலே யாமடையும்
பெரும்பயன், ஆதலால் அன்பர்கள் யாவரும் நன்குப
யின்று அன்புமிகுந்து சிவஞானம் பெற்று வாழ்தல்
வேண்டும். சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்

கொ - ஷண்முகசுந்தர முதலியார்.

சிவமயம்.

ப்ரதி யுபகரித்தோர்



ஸ்ரீமத் - வடலூர் - பார்வதிபுரம்,
சபாபதி சிவாசாரியர் - அவர்கள்,
ம - ள-ஸ்ரீ, திருவொற்றியூர்-சுப்ராயதேசிகர் அவர்கள்,
சிவபத நீழலுற்றுச் சைவகுல தீபகர்களாய் வா
ழ்க! வாழ்க!!

சிவமயம்.

ம்ருகேந்த்ரம் வித்யாபாத விஷயதீபிகை.



பக்கம் - ஸ்லோகம்.

---

௮. வித்யாபாத படலம் - ௧௩-இ


ஸ்லோகம் ௪௪௫ ற.

சிவமயம்.

ஸ்ரீமத் காமிகாகமோபபேத

ம்ருகேந்த்ர

சவ்யாக்யாநம்.



க—வது, உபோத்காத ப்ரகரணம்.

[illegible]

[illegible] க

(இதன்பொருள்.)

சதாசார சம்பன்னரான மஹாருஷிகளே! நீங்கள் பரமேஸ்வரரை நமஸ்கரித்துப் பிறகு பாரத்வாஜ மஹாருஷியை நமஸ்கரித்துச் சர்வ பாபங்களையும் ஹரிக்கச்செய்யும் பரமசிவத்தில் நின்றும் இந்திராதி வழித்தாய் வந்து தெரிவிக்கும் இந்த ஞானசாஸ்திரத்தைக் கேளுங்கள் - என்பது. (க)

[illegible] உ

பரிசுத்தமாகிய பதரிகாசிரமத்தில் பாரத்வாஜர் முதலாகிய மஹாருஷிகள் லோக பாண லிங்காதி ஆதாரத்

தில் பரமசிவனை பிரதிஷ்டைசெய்து அவரிடத்திலே யே யேகாக்ரமான சித்தமுள்ளவராய்த் தபசு செய்து கொண் டிருந்தார்கள். எ-து. (உ)

[illegible]

[illegible]

[illegible] ॥ ங

பின் பொருகாலத்தில் அந்த மஹாருஷிகள் ஆகமத்தில் மிகவும் சிரத்தை யுள்ளவர்களென் றறிந்து, தேவேந்திரன் தான் ருஷிவேஷங்கொண்டு அவர்களாசிரமத்திற்கு வந்தார். எ - து. (ங)

[illegible]

[illegible]

[illegible] ॥ ச

பின்பு இந்திரன் அம் மஹாருஷிகளாற் பூஜிக்கப்பட்டவராய் அவர்களைக் குசலப் பிரஸ்நம் செய்து விதிவிகிதமாகிய தர்மத்தை யேனநுஷ்டிக்க வில்லை யென்று கேட்டனர். விதிவிகிதம்-யாகாதிகள். எ - து. (ச)

[illegible]

[illegible]

[illegible] ॥ ரு

அம் மஹாருஷிகள், மஹாருஷியே! நாங்கள் தபசினால் அபீஷ்டசித்தியின் பொருட்டுச் செய்யும் இஷ்டதே

வதையாகிய பரமேஸ்வர ஆராதன ரூபமான இத்கரு
மம் விதிவிகித தர்மமே யென்று சொன்னார்கள். எ-து.

ருஷிவேஷங் கொண்டபடியால் இந்திரனை மஹா
ருஷியேயென் றழைத்தது. (௫)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௬

பின்னும் ருக்கு யஜுஸ் ஸாமம் அதர்வணமெ
னும் நான்கு வேதங்களிலும் ருத்ரனையே முக்ய தேவ
தையாக விதித்திருக்கின்றது. கற்பத்திலும் ருத்ரதே
வதா சாந்நித்யத்தின் பொருட்டு விதி விதிக்கபட்டி
ருக்கின்றது. எ-து. (௬)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௭

இவ்வாறு அவர்கள் கூறியபோதிலும் அவர்களின்
மனோபாவத்தை அறியவிரும்பிய தேவேந்திரன் நகை
த்துச் சொல்லுகின்றார். உங்கட்குண்டாகிய லிங்கார்ச்
சனாதி சிவபூஜையை விதிக்கும் ஞானசாஸ்திரமானது
பொய்யாயிருக்கின்றது, ஏனெனில்? அதையுண்டாக்
கின தேவதையென்பது சப்தத்தைவிட வேறில்லாத
படியால். எ-து. (௭)

[illegible]
[illegible]
[illegible] அ

அல்லாமலும் சப்தத்தைவிட வேருகத் தேவதை யுருப்பட் டிருப்பதாகச் சொன்னல் ஓரேகாலத்திற் பல தேசங்களில் யாகஞ்செய்யு மவர்களிடத்திற்போய் பாகம் வாங்கிக்கொள்ள மாட்டாது; நம்மைப்போ லுருப்பட்டிருக்கிறபடியால். எ-து. (அ)

[illegible]
[illegible]
[illegible]

இவ்வாறு இந்திரனுகிய சமுத்திரத்தினுடைய, தேவதை யில்லையென்னுஞ் சொல்லாகிய அலைகளினுலே அலைக்கப்பட்டபோதிலும், அந்த ருஷிகளினது புத்தியாகிய மலையானது உறுதியா யிருந்தமையால் அசைக்கப்படவில்லை. எ-து. (கூ)

[illegible]
[illegible]
[illegible] ௧௦

நினைத்தமாத்திரத்தில் நமது சரீராதிகளை யுண்டாக்கவுங் காக்கவு மழிக்கவும் வல்லமையுள்ள ஸர்வஞ்ஞத்வ ஸர்வகர்த்ருத்வாதி சக்திகளினலே நிறை

ந்த ஈஸ்வர மூர்த்தியானது, கன்மத்திற் பலவித சுக
துக்கமான நமது மூர்த்திகளைப்போ லொருபோது மாக
மாட்டா தாகையால்; இது திருஷ்டாந்தமாகாது. எ-து.

[illegible]
[illegible]
[illegible] ௧௧

அல்லது இவ்விந்திராதி சப்தத்திற்குப் பொரு
ளாக வேறொரு தேவதை யில்லையென்னும் நியாயம்
கட சந்திராதி சப்தங்கட்கும் வருமாகையால் கட என்
னும் சப்தம் ஜலத்தைக் கொண்டுவரமாட்டுமோ சந்தி
ர என்னும் சப்தம் பிரகாசிக்க மாட்டுமோ. எ-து. (௧௧)

[illegible]
[illegible]
[illegible] ௧௨

இவ்வாறு விவாதப் பிரஸ்தாபத்தால் ஈச்வரப்
பிரசம்சையிலே மிகச் சந்தோஷ முள்ளவர்களாய் ஆந
ந்த பாஷ்பத்திற் கண்டஸ்தம்பித வாக்குள்ள அந்த
ருஷிகளைப் பார்த்துத் தேவேந்திரன் ப்ரீதி யடைந்
தான். எ-து. (௧௨)

[illegible]
[illegible]
[illegible] ௧௩

பின் இந்திரன் வஜ்ராயுதபாணியாய் தேவசமூகங்களினால் ஸ்தோத்ரஞ் செய்யப்பட்டு இளஞ்சூரியனுக்கொப்பாய்ப் பிரகாசமுள்ள தனது ரூபத்தைக் காண்பித்தான். எ-து. (கங)

தேதம்ருக்பிர் யஜுர்பிஸ்ச ஸாமபிஸ்ச
ஸ்துவந்த: | ஸோப்யேஷாம் உச்சைஸ்தாம
காமோ ஜகத்ஸ்வப்ய வசோஹ்ருதய: || கச

அம்மஹாருஷிகளந்த இந்திரனை நமஸ்கரித்து ருக்கு யஜுஸ் சாம வேதங்களினாலே ஸ்தோத்ரஞ்செய்தார்கள். இந்திரன் ருஷிகளைப்பார்த்து உலகத்திலுயர்ந்த வார்த்தையைக் கேட்டுக்கொள்ளுங்களென்று கூறினர். எ-து. (கச)

தேவவ்ருத சிவஜ்ஞாநம் ஶ்ருண்யதா
இதிஸோப்யுவாச | கிந்த்வேகோத்ர ஸமஸ்
தா நிகில ப்ரஷ்டாஸ்த: || கரு

அவர்கள் சிவஞான சாஸ்திரத்தை வரித்துக்கொண்டார்கள். யாவரும் கேளுங்கள், ஆனால் யாவர்க்கும் சமாதானப்பட்டவரா யொருவர் பிரஸ்னை செய்யவேண்டுமென்றார். எ-து. (கரு)

அயதேஷாம் ஸாம்ஸாத ஸமவாந்ம
ணீரஸம்| வாக்மிப்யுஷ்ச வப்த்வா ந்யா
யதஸ்ஸம்ரஞ்ஜித: || கசு

பின்பு அவர்கட்குத் தலைவராய் பண்டிதராய் வாசாலகரா யிருக்கின்ற பாரத்வாஜ மகாருஷி இந்திரனை நியாயமாகப் பிரஸ்னை செய்கிறார். எ-து. (கசு)

[illegible]
[illegible] கஎ

நிஷ்கள சிவனிடத்திருந்து உத்தமமான விந்த ஞானசாத்திர மெவ்விதமாக வெளிப்பட்டது. அந்த பகவானிதை யென்னை நினைத்துச் செய்தார். எ-து. (கஎ)

[illegible]
[illegible] கஅ

சிருஷ்டியாரம்ப காலத்திலே பரமேஸ்வரன் போகமோக்ஷ ரூப புருஷார்த்த சித்தியின்பொருட்டு முன்னம் நாதரூபமாய் நின்மலமாகவும் பின்பு சதாசிவரூபத்தால் ஊர்த்வ கிழக்கு தெற்கு மேற்கு வடக்குமுகங்கள் வழியாக ஐந்து மார்க்கத்தால் பிரகாசரூபமாகவு மதைச் செய்கிறார். எ-து. (கஅ)

[illegible]
[illegible] ககூ

பின்னும் மந்திரோத்தாரத்திற் சொல்லப்போகிற ஞானமத்யத்தி லிருக்கின்ற மந்திர கணத்திற்குப் பொருளாகிய அஷ்டவித்யேஸ்வரர்களையும் சுத்த மார்கத்தில் ஏழுகோடி மகா மந்திரங்களையும் பரமேஸ்வரன் செய்கிறார். எ-து. (க௯)

[illegible]
[illegible]
[illegible] ௨0

பின்னும் மாயையி லதிகாரமுள்ள மேலான சுத்தமார்க்கத்தி லிருக்கும் வித்யேஸ்வரர்களுக்குச் சரியான தேஜசுள்ள மண்டலேஸ்வரர் குரோதாதிகள் ஸ்ரீகண்ட வீரபத்ரனென்னும் நூற்றுப் பதினெட்டு மந்திரேஸ்வரர்களையு முண்டாக்குகிறார். எ - து. (உ0)

[illegible]
[illegible]
[illegible] ‖ உக

அந்த மந்திரமகேஸ்வர மந்திரேஸ்வரர்களிடத்தில் அபிவியக்த்தராய்ப் பரிபக்குவமலர்களாய்ச் சிரேயஸை யடைய விரும்பினவர்கட்கு போகமோக்ஷத்தின் பொருட்டு இந்த ஞானசாத்திரத்தையும் அபரிபக்குவ மலங்களான பசுக்களுக்குத் தகுந்த காபிலாதி பசுசாத்திரத்தையுஞ் செய்கிறார். எ-து. (உக)

[illegible]
[illegible]
[illegible] ௨௨

முன்சொன்னவழியே பரமசிவனிடத்திருந்து வந்ததாயும் தேவி சுப்ரமணியர் முதலானவர்கட்கு அநேக பேதமாக வுபதேசிக்கப்பட்டும் சர்வ கர்மங்களையுங் கொடுக்கின்றபடியால் காமிகமென்று சொல்லப்பட்டிருக்கிற இந்த ஞானசாத்திரம் அனந்தாதி யஷ்டவித்யேஶ்வரர்களாலே பிரகாசமாக வுபதேசிக்கப் பட்டது. எ-து. (௨௨)

[illegible]
[illegible]
[illegible] ௨௩

நேத்ராக்நியால் மன்மதனை யெரித்த உமாபதி தேவர் அந்த அனந்தாதிகளிடத்தில் இதை யுபதேசம் பெற்றுக்கொண்டு பதினாயிரங் கிரந்தமாகச் சுருக்கி யெனக் குபதேசித்தார். எ-து. (௨௩)

[illegible]
[illegible]
[illegible] ௨௪

அதிலும் நான் அர்த்தவாத விஸ்தாரத்தைச் சாராம்சம் விடாமற் சுருக்கமான சொற்களாலே பெரும்பாலு மவர்களின் சொற்படியே சிலது என்சொல்லையும் கலந்து இந்த ஞானசாஸ்திரத்தைச் சந்தேகமற உங்கட்குச் சொல்லுகிறேன் என்று இந்திரன் சொன்னதை ஆரிதமுனி சொல்லுகிறார். எ-து. (உசு)

முதலாவது, உபோத்காதப் பிரகரணம்

முற்றிற்று.

சிவமயம்.

உ - வது, பரமோக்ஷ நிராஸப்ரகரணம்.

பதிலக்ஷணம்.

ஸ்வாநாதி மலோபேத ஸர்வக்ருத் ஸர்வ
வித்விபு: । பந்தவ்யாப்த்யா விதத்யா
அணோ: பாசஜாலம் ஸமோஹதி ॥ க

ஸ்வபாவ நின்மலனாய் சர்வகர்த்தாவாய் சர்வஞ்ஞனாயிருக்கிற பரமேஸ்வரன், அநாதியான மல கன்ம மாயைகளினாலே சர்வஞ்ஞத்வ சர்வகர்த்ருத்வம் மாறியிருக்கின்ற விஞ்ஞானகல பிரளயாகல சகலரென்னும் மூவிதமான அணுவிற்கும் பாசங்களின் கூட்டத்தைப் போக்குகின்றார். எ-து. (க)

த்ரிபதார்த்தம் சதுஷ்பாதம் மஹாதந்த்ரம்
ஜகத்குரு: । ஸூத்ரேணைகேந ஸம்
க்ஷிப்ய ப்ராஹ விஸ்தரஶ: புந: ॥ உ

லோகநாதனாகிய ஸ்ரீகண்டபரமேஸ்வரர், பதி பசு பாச மென்னு மூன்று பதார்த்த முள்ளதாயும் வித்யா சரியா கிரியா யோகமென்னு நான்கு பாதமுள்ளதாயுமிருக்கிற விந்த வுயர்ந்த சாத்திரத்தை, முன் ஒரு சூத்ரத்தாலே சுருக்கிச்சொல்லி, பின்பு விஸ்தரித்துச் சொல்லுகிறார். எ-து. (உ)

[illegible] || ௩

ஸர்வலோகங்களி னுற்பத்தியும் ஸ்திதியும் நாசமும் மறைப்பும் அநுக்ரகமு மாகிய பஞ்சகிருத்யமும், கருவிகளான சத்திகளோடும் பலமாகிய போகமோக்ஷங்களோடுங்கூடிய விந்த பரமேஶ்வரன் றொழிலா யிருக்கின்றது எ-து. (௩.)

[illegible] || ௪

பசுக்கள் மலத்தினாலே தடுக்கப்பட்ட ஞானகிரியை யுள்ளவர்களாயும் பாசங்கள் ஜடமாயு மிருப்பதால், சர்வகர்த்தாவான பரமேஶ்வரன் றனக்கொரு காரணமின்றி ஸ்வபாவசித்தரா யிருக்கவேண்டும். அவருக்குங் காரணமுண்டென்றால் அநவஸ்தையென்னுங் குற்றம்வரும். அல்லது மோக்ஷம், ஏதுவின்றியே யுண்டாகவேண்டும். ஏனெனில்! யாவருஞ் சமமாய்ப்போனபடியால் யாவரும் முத்தராகவேண்டும். அல்லது ஒருவருக்கும் முத்தியில்லாமற் போகவேண்டும். ஆகையால் ஸ்வபாவசித்தமாய் நித்யமாய் மேலானதாய் நின்மலமான சர்வஞ்ஞத்வ சர்வகர்த்ருத்வ முள்ளவர், பதியென்று பதிலக்ஷணஞ் சொல்லப்பட்டது. எ-து. (௪)

இனி பசுலக்ஷணம்.

சைதந்யம் த்ருக்க்ரியாரூபம் தத³ஸ்த்யா
த்மநி ஸர்வதா³ । ஸர்வதஶ்ச யதோ மு
க்தௌ ஶ்ரூயதே ஸர்வதோமுக²ம் ॥ ரு
ஸர்வம் ஹ்யாவஶாநகாத்து நிர்வாணம் ப்ர
தீயதே । ஸம்ஸாராவஸ்த விஷயம் ஸர்வ
ஹோதகணவாவிம்ஶாக்ஷணாத் ॥ ௬

சைதன்ய மென்பது ஞான க்ரியாரூபமா யிருக்கின்றது. அது ஆத்மாவினிடத்தில் எப்போது மெங்கு மிருக்கின்றது. மோக்ஷத்தி லெங்கும் வியாபகமாகத் தோற்றுகிறபடியால் இந்தச் சைதன்யம் சரீரதருமமென்றும், முத்தியி லுண்டாகிறதென்றும், தேகப் பிரமாணமென்றும், சொல்லும் வாதிகளின் மதமெல்லாம் பின்னால் தள்ளப்படப் போகிறது. ஆயினிந்தச் சைதன்யம் வியாபகமா யிருந்தபோதிலும் தோற்றமலிருப்பதால் ஒன்றினாலே தடுக்கப்பட்டதாகத் தோற்றுகின்றது. ஆகையா லந்தத் தடை விடுகிறவரையில் அப்படித் தடைபடாத ஞானக் கிரியாசத்தியுள்ள ஈசுவரனுக்கு ஆன்மா வசப்பட்டிருக்கிறான். எ - து. (ரு—சா)

இனி பாசலக்ஷணம்.

ப்ராவ்ருதீஶவசேதஸ்ஸாமர்த்²யா...

[illegible]

[illegible] ॥ ௭

ஆன்மாக்களின் சைதன்யத்தை ஆவரிக்கையால் ஆவரணமென்று சொல்லப்பட்ட ஆணவமலம் ஆன்மாக்களை மறைத்து விஷயத்தைப் புசிக்கச் செய்யும். ஈஸ்வரனது திரோதானசத்தி பலத்தை விரும்பிச் செய்யப்படுகிற படியால் கன்மமென்று சொல்லப்பட்ட சரீராரம்பமாய்ப் பிரவாகாநாதியான புண்யபாப ரூபமான கன்மம், பிரளயத்திற் சகல ஜகத்தும் சத்ரூபமா யிதி லடங்குகிறபடியால் மா வென்றும், சிருஷ்டியில் வியத்ரூபமா யிதிலிருந்து வெளிப்படுகிற படியால் யா வென்றும் கூடி, மாயா என்று சொல்லப்பட்ட தன்காரியமாகிய கலாதியோடு கூடிய மாயை ஆகிய இந்நான்கும் ஆன்மாக்களின் ஸ்வபாவ சாமர்த்யத்தைத் தடுத்துக் கூட்டுகிறபடியால் பாசஜாலமென்று சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இவைகளின் செய்கைகள் அவ்வவற்றின் பேர்களாலேயே சொல்லப்பட் டிருக்கின்றன. அந்த விஸ்தாரம் பின்னாலே தெரிவிக்கப்படும். இது பாசபதார்த்த லக்ஷணம். எ - து. (எ)

இனி, மூன்று பாதார்த்தத்தையும் கூட்டி முடிக்கின்றார்.

[illegible]

[illegible]

[illegible] ॥ அ

இவ்விதமிம்மூன்று பதார்த்தமும் முதலாவது ஞானபாதத்திலிருக்கின்றது. இதையே மற்றச் சரியை முதலான மூன்று பாதத்திலும் பிரித்துக் கூட்டவேண்டுமென்று பின்னாற் சொல்லப்போகிறது. எ - து.

பாதந்தோறும் பதியானவர் பாசத்தைப் போக்கிப் பசுக்களை யநுக்ரகிக்கிறாரென்றறிக என்பது கருத்து(அ

அதற்குப் பிரயோசனஞ் சொல்லுகிறார்.

> விதித்வைவம் பதார்த்தாம்ஸ்த்ரீந்
> ஜ்ஞாத: | பராபரவிபாகேந ஸித்திமேதி
> தமோநகயா ||　　௯

இவ்வாறிதைப் பார்ப்பதற்குப் பயன் மோக்ஷமாகும். போகமும் ஆநுஷங்கிகமாகக் கிடைக்கும். அந்த போகமோக்ஷமிரண்டும் பரம் அபரம் என்று சொல்லப்பட்டு அந்தந்த புவனாதிகளுக்குத் தக்கபடி உயர்வும் தாழ்வுமுள்ளதாய் பலபேதப்படும். அது பின்னாற் சொல்லப்படும். எ - து.

ஆநுஷங்கிகமாவது நினையாமல் நேரிடுகிறது. (௯)

இனி, மற்றச் சித்தாந்தங்களை விட இந்தச் சைவசித்தாந்தத்திற்கு யாது விசேஷமென்று ருஷி கேட்கிறார்.

> ஶைவாகமாநாம் ஸர்வஸ்வம்
> க்ஷேத்ராதிஷு | ஸர்வாய்நா ஶ்ருதிஸித்தோ
> விஶேஷஸ்ஸ்வாமிநே ||　　௧௦

உபநிஷத்து முதலான வேதாந்த சாஸ்திரங்களி லும் அறுபத்து நான்கு தந்திரமுதலான சாங்கிய மதங்களிலும் ஸத்து அஸத்து என்று வாதிக்கிற ஆருகதமதங்களிலும் திரவியாதி பதார்த்தவாதிகளான கணாதாதி மதங்களிலும் சாதனத்தோடு முத்திசொல்லியிருக்க இச்சைவாகமத்தில் யாது விசேஷம்? (கo)

இவ்விஷயத்திற் சித்தாந்தம்.

ப்ரணேதா ஸர்வவித்தத்ர ஸர்வ-
தோஷோத்கர்ஷஸம்ப்ருத: । உபாயாஸ்ஸர்வ-
ஸத்த்வே ஸம்பூர்ணம் ஸாத்ய ॥ கக

அவ் வேதாந்தாதி சாஸ்திரங்களைச் செய்த இரண்ய கர்ப்ப கணாத பதஞ்சலி கபிலர் முதலானவர்களெல்லாம் சர்வஞ்ஞரா எல்லாதபடியால் தாழ்ந்தவர்களாகையால் தங்களறிவிற் கெட்டாத ஆகமத்திற் சொன்ன வஸ்துநிச்சயமவர்கட்குத் தெரியாதபடியால் அவர்கள் செய்த சாஸ்திரங்களில் வஸ்துநிச்சயமும் சாதனமும் பயனும் ஸ்பஷ்டமா யிருக்கமாட்டாது. இச்சைவ சாஸ்திரம் பசுபாசங்கட் கெட்டாத சர்வார்த்தவிஷயக ஞானக்கிரியா சக்தியுள்ள பரமேஸ்வரனாற் செய்யப்பட்டபடியால் இதிற்சொல்லிய சர்வவிஷயமும் மேலானதாயிருக்கும். எ-து. (கக)

ஆனால் மற்றமதங்களில் அஸ்பஷ்டமா யிருப்பதெப்படியென்னில்; அதனை விரிக்கின்றார்.



[illegible]
[illegible]
[illegible] ௧௨

பரமான்மா ஒருவனே சேதநாசேதன ரூபமாகக் காணப்பட்டிருக்கிறான், காணப்படும் ஸ்தாவர சங்கமரூபப் பிரபஞ்சமியாவு மான்மாவே, பரமன்றி வேறொரு வஸ்து இடையாது, என்று வேதாந்திகள் சொல்லுகிறார்கள், இது யுக்தமன்று. எ-து. (௧௨)

[illegible]
[illegible]
[illegible] ௧௩

இவ்வாறு சொல்வதை உபபத்தி யநுபபத்தி யாலோசனையின்றி யொப்புக்கொண்டா லொப்புக்கொள்ளலாமேதவிர ஏது திருஷ்டாந்தங்களாலே யிதை நிச்சயிக்க என்ன ப்ரமாண மிருக்கிறது. அல்லது, சப்தப்ரமாணமாகிய வேதமிருக்கிறதெனில்? அதுவும் ஆன்மாவா வேறு? வேறானால் அசத்யமானபடியால் ப்ரமாணமாகாது. ஆன்மாவேயானால் தானே ப்ரமேயமு மாக வேண்டிவரும். எ-து. (௧௩)

ஆனாலென்னவெனில்?

[illegible]

உபிஷ்டிதழ | கூமெதஷாமி ஸெவஹஸ்ர
ஸ்ஷோணகதாநயா || கசு

எவ்விடத்தி லிந்தப்ரமாணம் பிரமேய மிரண்டு மி ருக்கிறதோ அவ்விடத்தில் ப்ரமாதா ப்ரமிதியென்று மிரண்டு மவசிய மிருக்கவேண்டும். அவ்வாறுவரி லென்னவெனில் ? நீர் சொல்லிய அத்வைதஹானிவரும். இல்லாவிடில் ப்ரமாணமே இல்லாமற்போம். எ-து. (கசு)

ப்ரமாதா - அறிகிறவன், ப்ரமிதி-அறிவு, ப்ரமேயம் - அறியப்படும் விஷயம், ப்ரமாணம் - அறிவுக்குக் கருவி.

ஹொமலாஜ்ா விமொக்ஷள வ யளமெந
ஷாவாத்வாஜிஹ் | கசுஉ

மேலும் பலவிதமான பலங்கொடுக்க ப்ராணிகள் தோறும் தனித்தனியே ஏற்பட்ட புண்ணியபாவ கன்மமென்பது வேருக இல்லாமற் போனபடியால் எல்லோர்க்கும் போகஞ் சரியாகவே யிருக்கவேண்டும். காரணமாகிய பரமான்மாவில் லயிப்பது மோக்ஷமென்னில் ? மறுபடி அங்கிருந் துதிக்கிறபடியால் மோக்ஷமே யில்லாமற் போகவேண்டும். மோக்ஷமில்லாமற் போனல் அதற்குச் சாதகமான ப்ரவண மனந நிதித்யாசனங்களும் வியர்த்தமாய்ப் போகவேண்டும். சேதநசேதன ரூபப் பிரபஞ்சத்திற்குப் பரமாத்மாவை உபாதான காரணமாகச் சொன்னுற் காரியங் காரணத்தின் ஸ்வபா

வ முள்ளதாயிருக்கு மென்னும் நியாயத்தாற் பரமான்மாவும் சேதனுசேதனரூப மாகவேண்டும். ஆனால் இருளும் வெளிச்சமும்போற் சைதன்யமும் அசைதன்யமு மோரிடத்தில் ஒருகாலத்தி லிருப்பது யுக்தமன்று. இது முதலான பலவித தோஷமுண்டாகிறபடியால் ஆன்ம த்வைத மொருபோதும் ஒவ்வாது. ஆகையால் வேதாந்திமத நிராகரிக்கப்பட்டது. எ-து. (கச௨)

வேதாந்தி மதத்தை நிராகரித்துப் பின் சாங்கிய மதத்தைத் நிராகரிக்கின்றார்.

ஸாங்க்ய ஜ்ஞானே அபி ஸூக்ஷ்மம் காரிய-
காரண வர்ஜிதம் । கரு

சாங்கியர் சொல்லிய ஞானமு மிதைப்போலவே பொய்யென் றறியவேண்டும். அவர்கள் மூலப்பிரகிருதி விகார மற்றதென்றும் மாயாகாரியமான கலையிலுண்டான முக்குண ரூபமாய்க் காரியமாயிருக்கிற பிரகிருதியை முதற் காரணமென்றும் சொல்லுகிறபடியால், கலை முதலான தத்வங்கள் தனித்தனியே காணப்பட்ட பிரயோசனமுள்ளதா யேற்பட் டிருக்கிறபடியால், அவைகட்கெல்லாம் பரமகாரணமான மாயையை அவர்களறியவில்லை. அவர்க ளொப்புக்கொண்ட பிரகிருதி, சத்துவ ரஜஸ் தமஸ் என்னு முக்குணந் தவிர வேறாக வொன்றில்லாததா லதை யநேகமென்று சொல்லவேண்டும். எது ஜடமா யநேகமா யிருக்கிறதோ அது, காரி

யமென்னும் நியாயத்தாற் காரியமாகிய பிரகிருதியை ப் பரமகாரணமாக ஒருபோதுஞ் சொல்லக் கூடாது.

[illegible] கரு

பின்னும் போக்தாவான புருஷனைக் கர்த்தாவல்லவென்றும், அசேதனமான பிரகிருதியை ஸ்வதந்திரமென்றுஞ் சொல்லுகிறபடியால், அவர்கள் மதம் சரியன்று. சைதன்ய மென்பதே ஞானக் கிரியா ஸ்வரூபமாகையாற் செய்கை யில்லையென்றால் அறிவுமில்லாமற் போம்; ஆகையாற் போகமுங்கூடாது. ஜடமாகிய பிரகிருதியும் சேதனப் பிரேரணையின்றி ஸ்வதந்திரமாக வொருகாரியஞ் செய்யமாட்டாது. ஆகையா லவர்கள் ஞானமு மெய்யன்று. (கரு)

இனி, சதசத்வாதி யென்னு மநேகாந்தவாதி மதத்தைத் நிராகரிக்கின்றார்.

[illegible] கசு

அநேகாந்த வாதிகள் பதார்த்த மேழென் றேற்புக்கொண் டிருக்கிறார்கள். அவையாவன? சித்தன் முத்தன் பத்தன் என்னு மூன்றுபேதமுள்ள ஜீவபதார்த்தம்-க. பிருத்வியாதி பூதங்களாகிய அஜீவ பதார்த்த

ம்-உ. சக்ஷுராதி இந்திரியங்களாகிய ஆச்ரவ பதார்த்
தம்-௩. இந்த்ரியங்களை யடக்கிச்செய்யுந் தவங்களாகிய
சம்வர என்னும் பதார்த்தம்-௪, அநுபவத்தாற் சீர்ண
மாகுஞ் சக்தியுள்ள கன்மமாகிய நிர்ஜர பதார்த்தம்-௫,
இருப்புக்கூடு தனக்குள் வைக்கப்பட்ட சுரைக்காயை
யெப்படித் தண்ணீரிலழுத்திவிடுமோ அப்படிப்போல்
மோகமுதலான எண் குணங்களும் தமக்குள் ளகப்ப
ட்ட ஆன்மாவை சம்சாரநதி லழுத்துகிறபடியால் பந்
தமென்று சொல்லப்பட்ட பதார்த்தம்-௬, அவ் விரு
ப்புக்கூடு விட்டமாத்திரத்திற் சுரைக்கா யெப்படி உய
ரக் கிளம்புகிறதோ அப்படிப்போல் இந்த மோகாதி
குணங்களாகிய பந்தத்தை விட்டு ஆன்மா உயரக்கிளம்
புகையாகிய மோக்ஷமென்னும் பதார்த்தம் - ௭. இவ்
வா றேழுபதார்த்தஞ் சொல்லுகிறார்கள். (௧௬௯)

[illegible]
[illegible]
[illegible] ‖ ௧௭௰

இந்த ஜீவாதி பதார்த்தங்கள் தேகாதி சம்பந்தத்
திற்கு முன்னுள்ளதோ இல்லாததோ என்னுங் கேள்
விக்கு, அவர்கள் மதம் சதசத் வாதமாகையால், ஒரு நி
யமமா யுள்ளதென்றும் இல்லாததென்றும் சொல்லக்
கூடவில்லை. எது எவ்விடத்தி லெக்காலத்தி லுள்ளதோ
அது அவ்விடத்தி லக்காலத்தி லில்லையென்று எவன்
ஒப்புவான். (௧௭௰)

[illegible] ௧௮

தேகாதி சம்பந்தத்திற்குமுன் ஜீவரூபமாகச் சத்தென்றும் தேகிரூபமாக அசத்தென்றும் சொன்னால் நமது சித்தாந்தத்தைச் சேர்ந்துபோனபடியால் சித்தத்தையே சாதிக்கவேண்டி வருகிறது. அல்லது எவ்விதத்திலாவது சதசத்பாவம் யுக்தமானபோதிலும் அவர்களிடத்தில் வேறு குற்றமாகாது? (௧௮)

[illegible] ௧௯

ஆன்மாக்களை வியாபகமாக வொப்புக்கொண்டால் காலதேசங்களினால் தூரத்திலிருக்குங் கன்மங்களை யொருக்காலே செய்யவேண்டி வருகிறபடியால் அவ்யாபகமென்று சொல்லுகிறார்கள். அதற்கு நியாயம் அநாதியே மலசம்பந்தத்தினாலே அது தடுக்கப்பட்டதென்றும் முத்தியில் அது விடுகிறபடியால் அந்த வியாபகத்துவந் தோற்றுகிற தென்றும் இந்த ஞானமில்லாததால் அவர்கள் விவேகமில்லாதவர்கள் ஆகையா லிந்த சதசத்வாதிமத மொருபோதும் ஸ்தாபிக்கக்கூடாது.

இனி திரவியமுதலான ஆறுபதார்த்த ஞானத்

தால் முத்தியென்று சொல்லுகிற கணாதமதத்தை நிரா
கரிக்கிறார்.

𑌷𑌟𑍍𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾
𑌨𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 [illegible]
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌷𑍍𑌟𑍇 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌃 ॥ உ௦௯

𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌾𑌦𑌿 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌦𑍇𑌹𑌸𑌂
[illegible] । [illegible]
[illegible] ॥ உ௧௯

திரவியம் குணம் கன்மம் சாமான்யம் விசேஷம் சமவாயம் என்னு மாறுபதார்த்தங்களையு மறிதலால் அஞ்ஞானம் போகிறது. பின்பு இராகத்வேஷங்கள் அகங்கார மமகாரங்கள் நீங்குகின்றன. புத்தி சுக துக்க இச்சா த்வேஷ பிரயத்ன தர்ம அதர்ம சம்ஸ்காரங்களென்னும் ஆன்மகுணங்கள் ஒன்பதும் தேக சம்பந்தத்தால்வருகிறபடியால் தேக நீங்கினவுடனே எல்லா நீங்குகிறபடியால் அதுவே முத்தியென்கிறார்கள். இந்தமுத்தி புத்திமுதலானவை யில்லாததென்கிறபடியால் ஜடமாயிற்று. ஆகையால் சவத்தோடு சரியாகச் சொல்லலாமாதலா லிந்தமுத்தி தள்ளப்பட்டது. (உ௦௯—உ௧௯)

இனி சௌகதர் சொல்லிய முத்தியை நிராகரிக்கிறார்.

[illegible]

[illegible] வ்யஜ்யதே ஜாயதே
நைவ க்ஷணிகேதி ததாபரே॥ ௨௨

சம்வேதன ரூபமாகிய சித்தானது தனக்குவியஞ்சகமாகிய நேத்திராதி வியாபாராதிகள் க்ஷணிகமாகையால் அடிக்கடி யுண்டாகிறதுபோலத் தோற்றுகிறது. அதையறியாமற் சித்தெல்லாம் க்ஷணிகமென்று சௌகதர் சொல்லுகிறார்கள். (௨௨)

[illegible]
[illegible]
[illegible]॥ ௨௩

அவ்வாறு சொல்வதுகூடாது. சித்தாகிய ஆன்மா க்ஷணத்துக்கு க்ஷணம் வேறுபடுகிறதாயிருக்குமானால் புண்ணியபாப கன்மபோகமும் பூர்வாநுபவ ஸ்மரணமுங் கூடாது. ஏனெனில்? ஒருக்ஷணத்தி லுண்டாகிய சித்து மற்றொரு க்ஷணத்தி லிறந்துபோகிறபடியால் ஒருவன் செய்தகன்மத்தை மற்றொருவனெப்படிப்புசிக்கலாம். ஒருவனநுபவித்ததை மற்றொருவனெப்படி நினைக்கலாம். கன்மபோகமும் ஸ்மரணமு முண்டாகக் கண்டிருக்கிறபடியால் ஒருவனே நித்யனாயிருக்கவேண்டியது. (௨௩)

இதுவுமல்லாமல் இன்னொரு தோஷமுண்டாகிறது.

விநாஶ க்ஷணிகே [illegible]

ஸ ஶுத்3த4ஸந்ததிர்வா । நசாஸ்த்ய நஶ்வர:
க்ஷிப்த ஸம்ஸாரஸ்ய வரந்தத: ॥ உசஉ

சுத்தமாகச் சித்து சந்ததியுண்டாவது மோக்ஷமென்னலாமா ஜ்வலித்த தீப மணைவதுபோல விஷயத்தை யறிந்த சித்து அடங்குவது மோக்ஷமென்னலாமா? முதற்பக்ஷத்தில் அவ்வாறுண்டாகிற் சிற்சந்ததி யடிக்கடி யறியுமென்பது மோக்ஷத்திலும் வருமே! இரண்டாவது பக்ஷத்தில் தீபம்போ லணைந்துபோனால் யாதொரு ஆனந்தானுபவமு மில்லாததால் அம்மூர்த்தியை விட சம்சாரியா யிருப்பதே மேலாயிருக்கிறது. ஆகையால் அவர்கள் சொல்வதுஞ் சரியன்று. (உசஉ)

இத்யாத்3யஜ்ஞாநமூடா4நாம் மதமாஶ்ரி-
த்ய து3ர்தி4ய: । மோக்ஷமிச்ச2ந்தி தே
க2த்3யோதாத் பாவகார்தி2ந: ॥ உ௫உ

இது முதலாக வஞ்ஞான மூடர்களுடைய மதத்தை யாச்ரயித்துப் புத்தியில்லாதவர்கள் மோக்ஷத்தை யிச்சிப்பது, மின்மினிப்பூச்சியிடத்தி லக்நியை விரும்புவதுபோ லிருக்கின்றது. (உ௫உ)

யத்கைவல்யம் பரம்ப்ரோக்தம் தைர்வி-
வேகாத்3யாஸம் ப்ருத2க்த்வா விரா
க3: । யாவாஞ்சி2ந்த்யக்ஷய: பாஷண்டா3
க்ஷாக்ஷா ஸஞ்ஜா ஸஹஸ்ராக்ஷி ஸ்ருஷ்டௌ ॥ உ௫௩

பிரகிருதி புருஷ விவேகத்தால் முத்தியென்பது ம், சர்வமும் பிரமமயமென்றறிந்து ஒழிவது முத்தி யென்பதும், பாசங்களாகிய கால மனமுதலானவையே பந்தமோக்ஷ ஏதுவென்றறிவது முத்தியென்பதும் இவைமுதலான முத்திகள்யாவும் சிருஷ்டியாரம்பத்தி லயிந்து வேறுபடும். (௨௯)

இவ்வாறு மற்றமதங்களின் முத்திகளியாவும் அசத்தியமென்றுதள்ளி தம்மதத்தின் முத்தி சிறந்தென்கிறார்.

[Grantha verse, 4 lines, ending ||௨௭||]

இச்சைவ மதத்திற் சித்தியடைந்தவன் மற்றப் புவனபதிகட்கெல்லா மேலாக அணிமாதி அஷ்டைஸ்வர்ய சம்பன்னனைப் பிரகாசிக்கின்றான். இதில் முத்தியடைந்தவன் சிருஷ்டி யாரம்பத்திலும் ஈஸ்வரனாகவே யிருக்கிறான். ஆனால் தனது தேஜசினாலே தனக்குச் சர்வஞ்ஞத்வ சர்வகர்த்ருத்வம் வந்திருந்தபோதிலும் தனக்குச் செய்யவேண்டிய கிருத்ய மொன்றில்லாததால் சர்வார்த்தங்களையு மடக்கிக்கொண்டு ஈஸ்வரனுக்குப் பிரேரியனாகாமற் சரியாகவே யெப்போதும் பிரகாசிக்கின்றான். (௨௭)

இரண்டாவது, பரமோக்ஷ நிராசப் பிரகரணம் முற்றிற்று.

ஆக ஸ்லோகம்—௫௪.

சிவமயம்.

௩—வது பதிலக்ஷண பரீக்ஷா ப்ரகரணம்.



[illegible]
[illegible]
[illegible] ॥ ௧

தநுகரண புவனமுதலானவை யாவும் அவயவ சந்நிவேச விசேஷங்களோடுகூடி யிருக்கிறபடியால் கடாதிகளைப்போற் காரியமென்றறிந்து அநுமானத்தால் இவை சிறந்த ஞானக்கிரியா சத்தியுள்ள கர்த்தாவை முன்னிட்டு வந்ததென் றறிகிறோம். (௧)

அத என்பது இனி பதிபதார்த்த பரீக்ஷாரம்பம் என்று அர்த்தம்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ௨

இவ்வாறு சர்வகாரணமாக வேற்பட்ட வஸ்து காலத்தி லடங்காததினால் நித்தியமென்றும், தேசத்தி லடங்காததினால் விபு வியாபகமென்றும், தநுகரண புவனாதிகளைக் கிரமமாகவும் ஏககாலத்திலு முண்டாக்குகிறபடியால் அவ்வா றுண்டாக்கும்படியான விசித்ர சத்தியுள்ளதென்று மறியவேண்டியது. (௨)

தஸ்யாபி கரணம் யேந த்ருஷ்டா நகார
ணாக்ருதி: । அநாதிமிவ தத் ஸித்தம் கா
ர்யவந்நாதிஸம்ஸ்திதே: ॥ ௯

அவ்வா றுண்டாக்கும் சத்தி கிரியையாகையாற் கிரியையாவும் கரணமின்றிக் காணப்படாதபடியால் அக்கர்த்தாவிற்குக் கரணமுண்டென்றும், அக்கரணமும் காரியமு மநாதியா யுண்டாய் வருகிறபடியால் ஆகந்துகமின்றி ஸ்வபாவமாக எப்போது முண்டென் றறியவேண்டியது. (௯)

காரணஞ்ச ந ஸக்த்யந்ய ச்சக்திஸ்சைத
ந்யலக்ஷணா । விஷயாநேகதாநேகம் கா
ர்யே ஜ்ஞத்வே ச தத்ததா ॥ ௰

அவ்விதகரணமும் இச்சாரூபமாக மேற்சொல்லும் சக்தியன்றி வேறில்லை. அச்சக்தியும் சித்ரூபனான ஈஸ்வரனுடைய ஸ்வபாவ ரூபமாகையால் ஜடமாகமாட்டாது. அச் சத்திரூபமாகவுங் கரண மொன்றாயிருந்த போதிலும் அறியும் விஷயங்களும் செய்யும் விஷயங்களும் பலவாகையால் அறிகையிலும் செய்கையிலும் அவ்வாறே பலரூபமாகும். (௰)

கார்யஞ்ச வ்ருத்திபீஜாதி வீஜாத்பாக்
தோ ந சேதந: । ப்ரஸித்ஸா ந ச பஸ்வ
ர்த்தம் ஸ்வார்த்தம் வா ஸ்ருஷ்டி ரீஸிது: ॥ ௧௧

இச்சிருஷ்டியாதி காரியங்களைக் கன்ம மாயாதிக ளினபேக்ஷையின்றி யீஶ்வரன் செய்யாததனால் அவைகளையே ஜகத்காரணமென்று சொல்லலாகாதோ வெனில்? கன்ம மாயா ப்ராகிருதிகள் ஜடங்களாதலாலும் அணுவாகிய ஜீவன் அஸ்வதந்திரனாதலாலும் புத்திமானாகிய ஸ்வதந்திர சேதநாதிஷ்டானமன்றி செய்யாதூக ளானகையாற் பாரிசேஷாநுமானத்தால் ஈஶ்வரனே கர்த்தாவென் றறியவேண்டும். அப்பரமேஶ்வரன் முத்தான்மாக்களுக்கு ஜன்மாதியேதுவான கன்மமாயாதிகளின்மையால் அவர்களுக்குச் சம்சாரபோகாதி யேதுவாகாமற் சுத்தசிவஸ்வரூபமாகவே யிருக்கின்றார். (௫)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

௬

இவ்விடத்திற் சிருஷ்டியாதி காரியத்திற்கும் ஜகத்கர்த்தாவிற்கும் சம்பந்த மறியப்படாததினா லிவ்வநுமானத்திற்குப் பாதை ஒருவாதி சொல்வதாயிருக்குமானால் அந்த மகானச முதலான பலவிடங்களி லிருக்கும் புகைக்கும் மலையிலிருக்கும் நெருப்பிற்கும் சம்பந்தமறியாம லிருக்கையிலும் புகைமாத்திரத்திற்கும் நெருப்பு மாத்திரத்திற்கும் சம்பந்தமறிந்ததனா லநுமானத்திற்குப் பாதையில்லை யென்பதுபோல இவ்விடத்

திலும் காரியமாத்திரத்திற்குக் கர்த்தாவுண்டென் றறி தலால் அநுமானத்திற்குப் பாதையில்லை. அவ்வாறு குற்றஞ்சொல்லில் அவ்வாதிக்கு மிகக்குற்றமுண்டு. (௬)

இவ்விடத்திற் பூர்வபக்ஷம்.

> காய்யம் ஶரீரயுக்தேந கர்த்ரா
> த்ருஷ்டம் ஸதைவயத் । தேநாஸ்ய வபுஷா
> நேதா ஜுஷ்டம் கர்த்ருத்வம் ஸோபாத்ய ஸஜாதீ
> வத் ॥ ௭

ஈஸ்வரன் கர்த்தாவாக ஏற்பட்டபோதிலும் அவன் சரீரமில்லாதவனென்று சொல்லக்கூடாது. லோகத்திற் சரீரமுள்ளவனுக்கே செய்கை கண்டிருக்கிறபடியாற் காரியமெல்லாம் சரீரமுள்ள கர்த்தாவினாற் செய்யப்படவேண்டும். ஆகையா லந்தக் கர்த்தாவான வீஸ்வரனும் நம்மவர்போற் சரீரமுள்ளவனாதலாற் சரீர தருமங்களான துக்காதிகளோடுகூடி அற்பசக்தியுள்ளவனாய்ப் பரிச்சின்னனாய் அநீஸ்வரனாயிருக்கவேண்டும். (௭)

இதற்குச் சித்தாந்தம்.

> மலாத்யஸம்பவாச்சாக்தம் வபுர்நைதாத்ருஶம் ப்ரபோ: । ௭உ

ஈஸ்வரனுக்குச் சரீர முண்டாகும்படியான மலகன்மாதிக ளின்மையால் அவர் சரீரம் நமதுசரீரம்போலாகாது. ஆனாற் சத்தி மயமா யிருக்கும். (௭உ)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௮

வாங்களினால் தியானிக்குமவர்களைப் போஷிக்கிற படியால் வபு என்னுங் காரணப்பெயரையுடைய ஈஸ்வரசரீரமானது அநுக்கிரக திரோபவ சங்கார ஸ்திதி சிருஷ்டி என்னும் பஞ்ச கிருத்தியங்கட்குபயோகமாக ஈசான தத்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதம் என்னும் பஞ்சமந்திரங்களினாலே மூர்த்தாதி அவயவமுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (௮)

ஈசானதி மூர்த்தாதிகட்கு அர்த்தஞ் சொல்கிறார்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ௯

சர்வாநுக்கிரக வேதுவாயிருப்பதால் சர்வமார்க்கத்திற்கு மேலானவிடத்திலிருக்கிற வீசான மந்திரத்தாற்சர்வாநுக்கிரக வல்லவராகிற படியால் மூர்த்தாவிற்குச் சமானமாக வுயர்ந்திருப்பதால் ஈசான மூர்த்தாவாயிற்று. சரீராவயவமல்ல. (௯)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௦

தேவமநுஷ்யாதி சரீரங்களில் அதிஷ்டாதாவாக வசிக்கிறபடியாற் தத்புருஷ என்றும், அவர்கட்கு ஞானம் பிரகாசிக்கச்செய்து ஜநநாதி பயத்தை நீக்கிக் காக்கிறபடியால் வக்த்ர என்றும், காரணப்பெயரினால் தத்புருஷ வக்த்ரமாயிற்று. (௧௦௯)

हृदयं बोधपर्यायस्तस्याघोर
घोरशिवोऽयतः । परिशुद्धस्य
घोरत्वाद् घोरत्र-वचारतः ॥ ௧௧௯

இருதயமென்பது போதத்திற்குப் பரியாய நாமமாதலால் அப்போதமாகிய சிவஸ்வரூபம் கோரமாகாமற் சாந்தமாயிருப்பதால் அகோர ஹ்ருதய மென்னப்படும். ஆனாற் சிவனுக்குக் கோரரூபஞ் சொல்வது பரிக்கிரகமாகிய அசுத்தாத்வாதிகாரசக்தி கோரரூபமாகையா லுபசாரமாகச் சொல்லியது. (௧௧௯)

वामं शिवमिदं वामत्वात् नन्दस्य
सहायतः । वामं नाम यस्यास्य
देवस्य चारगम्यकः ॥ ௧௨௯

தர்ம அர்த்த காமமென்னும் திரிவர்க்கமும் தாழ்ந்த தாகையால் வாமமென்னப்படும். தேவ என்பது பிரகாசம்-தேஜஸ். குஹ்ய-ரகஸ்யம். ஆன்மாக்களை கன்மாநுகுணமாக த்ரிவர்க்கத்தைப் புசிக்கும்படிச் செய்யும்சிவதேஜஸ் வாமதேவ என்றும் ஸ்வபாவத்தில் ரகஸ்ய

மாகையாற் குஹ்ய என்னும் பெயரினால் வாமதேவ குஹ்யமாயிற்று. (௧௨)

ஸத்³யோऽணூநாம் மூர்த்யஸம்ப⁴வ
நிமித்தத்வேந ஸத்³யாஹ்வயாந: |
ஸத்³யோ மூர்த்திர்யதீநாம் வாபி
ச ஸத்³யோ மூர்த்தி: கர்மணோ
வ்யவஹாரமூர்த்தய: || ௧௩

இச்சாமாத்திரத்தினாலே அணுக்கட்குடனே மூர்த்திகளை யுண்டாக்குகிற படியாலும் யோகிகட்குத்தமக்கொத்த மந்திரமூர்த்திகளை யுண்டாக்குகிறபடியாலும் தொழிலினது வேகத்தாற் சத்யோஜாத ரென்னப்படுகின்றார். மூர்த்தியெடுக்கிறதினா லன்று. (௧௩ உ)

ஐஶம் ஶக்தி: ஶிவஶக்த்யா தே³ஹ
ஸாஹாயார்த்²யே தே³ஹஸம்ப⁴வ: |
தஸ்யா தே³ஹோ வாமாதி³ப்⁴யோ
விபா⁴கா: கர்மதே³ஹஸம்ஜ்ஞா: || ௧௪

வாஸ்தவமாக வீஸ்வரனுக்குச் சரீரமில்லாததினாலே சத்தியே சரீரகாரியத்தைச் செய்கிறபடியாற் சரீரமென் றுபசாரமாகச் சொல்லப்படும். அச்சத்தியு மொன்றாக விருந்தபோதிலும் தொழிலின் பேதத்தால் வாமாதிபேத முள்ளதென்று பெரியோர் சொல்கின்றார்கள். (௧௪ உ)

மூன்றாவது, பதிலக்ஷண பரீக்ஷாப்ரகரணம்
முற்றிற்று.

ஆ. ஶ்லோகம்—௪௪.

சிவமயம்.

௪-வது; பதிஸ்வரூபப்ரகரணம்.

இவ்வாறு பதிபதார்த்தத்தை லக்ஷணத்துடன் சாதித்து அவரது ஸ்வரூபத்தைக் கூறும் பொருட்டு மூலசூத்திரத்திற் கூறிய சர்வகர்த்தா என்னும் பதத்தினர்த்தத்தை விரித்துக் கூற வேறுபடல மாரம்பிக்கின்றார்.

[illegible] ॥ ௧

கூறிப்போந்தபடி மந்திரமய சரீரமுள்ள அவ்வீச்வரன் தடையற்ற வல்லமையுள்ள கீழ்ச்சொல்லிய கருவியாகிய சத்தியைக்கொடு சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத்தையும் யாது எச்சமயத்திற்குத் தக்கதோ அவ்வாறெப்போது மியற்றுகின்றார். (௧)

[illegible] ॥ ௨

இயற்றுமிடத்து முதலில் மாயா கன்ம பந்தமிரண்டு மேலிட்டு விஞ்ஞான கேவலர்களாய்ச் சிவபத யோக்

யானான எட்டு அணுக்களை வாமாதி நவசத்திகளுடன் கூடி சப்தகோடி மந்திரங்களைப் பரிவாரமா யுடையவர் களாகச் செய்கிறார். (உ)

தேஷாமநந்த: ஸூக்ஷ்மஶ்ச ததைவ ச
ஶிவோத்தம: | ஏகநேத்ரைக ரு-
த்ரௌ ச த்ரிமூர்த்திஶ்ச ததாபர: || ௩
ஶ்ரீகண்டஶ்ச ஶிகண்டீ ச ராஜராஜேஶ்வ
ரேஶ்வரா: | ஸர்வேஷாம் ருத்ரராஜோ ஶிகண்
டிராஜாம் ஸாக்ஷிணாம் || ௪

அம் மந்திரேஸ்வரர்கட்குள் அனந்தர் சூக்ஷ்மர் சிவோத்தமர் ஏகநேத்ரர் ஏகருத்ரர் திரிமூர்த்தி ஸ்ரீகண்டர் சிகண்டி என்னுமெண்மர்களும் ராஜர்களாகிய இந்திராதிகட்கும் ராஜர்களாகிய சதருத்ரர்கட்கும் ஈஸ்வரர்களான மண்டலி முதலானவர்கட்கு மீஸ்வரர்களென் றறிக. மந்திர மஹேஸ்வரரென் றர்த்தம்.

இவர்கள் அதிகாரமல மொன்றுள்ளவ ராதலாற் பரமேஸ்வர சமானபாவத்திற் சிறிதுகுறைந்து அவரால் நியமிக்கப்பட் டிருப்பார்கள். (௩—௪)

ஸர்வஜ்ஞதாதி யோகேபி நியோஜ்ய
த்வம் ஜகத்பதே: | மலஸ்ய ஶக்திஷ்வேதே
ஷ்வாமேவ ஜய: ஸ்ம்ருதா: || ௫

இவர்கள் யாவரும் சர்வஞ்ஞத்வாதி குணமுள்ளவர்களாகிலும் மலாம்சத்திற்குத் தக்கபடி நியமிக்கப்படு

மவர்களாய் ஒருவர்க்கொருவர் தாரதம்ய முள்ளவர்களா யிருக்கிறார்கள். இவர்கட்குக் கீழிருக்கு மந்திரங்களு மவ்வாறே பேதமுள்ளவையா யிருக்கின்றன. (௫)

தே சாஷ்டௌ ஸாப்ரவ்ருத்தா: ஶிவஶக்தி ப்ர
சோதிதா: | குர்வந்த்யநுக்ரஹம் பும்
ஸாம் யதாயோக்யம் ஸமந்தத: || ௬

அம்மந்திரங்களும் மந்திரேஶ்வர ரிடத்தில் அபி வியக்தமான சிவசத்தியா லேவப்பட்டவைகளாய் ஆத்மாக்கட்கு யோக்யதைக்குத் தக்கபடி அநுக்கிரகத்தைச் செய்கின்றன. (௬)

ப்ரயோக்த்ருதேஹஸாபேக்ஷம் தத்ஸப்த
கோடயோணவ: | க்ருத்வாதிகாரம் ஸ்தித்யந்தே
ஶிவம் விஶந்தி ஸேஶ்வரா: || ௭

அவ்வேழுகோடி மந்திரங்களிற் பிற்பாதி அநுக்ரக ஆசாரியமூர்த்தி (கர்த்தாக்களின்) சரீரத்தை யாச்ரயமாக அபேக்ஷித்துக்கொண்டு சமஸ்த மாயாத்வாவிலும் அநுக்ரகிக்க வேண்டியவர்களை யநுக்ரகிக்குந் தன்னதிகாரத்தை நிறைவேற்றி மாயாத்வா முடிவில் மந்திரேஶ்வரரோடுகூடிச் சிவனை யடைகின்றது. (௭)

விநாயக கணேநாத்ர ஸஹ ப்ராயாஸ்த வி
க்ருதாஸ்து | க்ருத்வாதிகாரம் ஸமஷ்டி
வைஶ்வி ஸ்வாய ஸம்ஹர்த்தா: || ௮

முதற்பாதி ஆசார்ய மூர்த்தி யாதாரமின்றியே பரமேஸ்வரனுக்கு அநுக்ரகிக்க இஷ்டமானவிடத்திற் சுத்தவித்தைக்குக் கீழ்ப்பட்ட மாயாத்வா முழுதிலும் அவரிச்சைப்படி அநுக்ரகாதிகாரத்தைச் செய்து தனது அநுக்ரகாத்வாவையடைகின்றார். (அ)

[illegible] || க

பின்பு பரமேஸ்வரன் அனந்தாதிகளிடத்தி லபிவியக்தராய் மாயாதத்வத்திலிருந்து மாயாகர்ப்பாதிகாரிகளான கலைமுதலானவற்றா லுண்டாக்கப்பட்ட சரீரமுள்ள மண்டலிமுதலான நூற்றுப்பதினெண் பதிகளைச் செய்கின்றார். (க)

[illegible] || க0

அம்மண்டலி முதலானவர்களையு மதிஷ்டித்துக் கொண்டு பரமேஸ்வரனவர் ஸ்தாவர ஜங்கம ரூபப் பிரபஞ்சத்தையெல்லா முண்டாக்காநின்றும் கன்மபாசத்தை யநுசரித்த சத்தியுள்ளவர்களாயும் மலத்தோடு கூடியுமிருக்கிற பிரமாதிகளை அந்தந்த லோகநாதர்களாய்ப் பிரகாசிக்கப்பட்ட ஞானக் கிரியா சத்தியுள்ளவர்களாகச் செய்கின்றார். (க0)

ப்ரணேத்ரூந் பஶுஶாஸ்த்ராணாம் ப
ஶூம்ஸ் தத்வ்ருத்திவர்த்திநஃ | ஸஸாத்யாந்
காலகோபாந்தாந் காமயானோ வ்யவஸ்த்தி
தாந் || ௧௧

பின்னும் ஆருகத சாங்கியாதி பசுசாஸ்திரங்களைச் செய்யும் அருக கபிலாதிகளையும், அந்த சாஸ்திராநுஷ்டானஞ் செய்யும் பசுக்களையும் தத்தஞ் சாஸ்திரத்திற் சொல்லிய பலத்தோடும் சாதனங்களோடுங் கூடினவர்களாக காலாக்நி ருத்ர புவனபரியந்த மிருப்பவர்களாகச் செய்கின்றார். (௧௧)

ஸ்த்திதாந் ஸ்வகாலகாலேந்தாந் ஸ்வபோகா
ந் ப்ரஸ்வதேஜஸா | யந்த்ரவாஹகவத்ஸர்வம்
ஸ்வயம் ஸம்ப்ரேர்ய நியமக்ஷமஃ || ௧௨

போக சாதனங்களாகிய தத்வ புவனாதிகளுடன் கூடிய விவர்களைத் தம திச்சாசத்தியா லதிஷ்டித்துக் கொண்டு தத்தம் புருஷார்த்த சித்தியின் பொருட்டுச் சர்வபூதங்களினாலு மறியப்படாதவராய் அவர்களை நியமிக்கின்றார். (௧௨)

ஹோமஸா யந்த்ராக்ஷிபத் க்ருத்ஸ்நாகார
ணஸம்ஸ்ப்ருஶ்யம் | தத்ஸாத்ம்யகாரகம் ப்ரவி
ஶ்ராயா வதிஷ்டதே || ௧௩

[illegible]
[illegible] கங

சம்சாரத்தில் வருத்தமடைந்த சம்சாரிகட்கு இளைப்பாற்றற் பொருட்டுச் சர்வபூத இதகர்த்தாவான பரமேஶ்வரன் போகசாதனங்களாகிய தநுகரணாதிகளையொடுக்கி ஆத்மாக்களுடன்கூட மாயையில் இலயிக்கச்செய்து அதையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார். (கஉ-கங)

[illegible]
[illegible] கச

மேற் சொல்லுங்கால் அளவுள்ள சுவாபத்தின்முடிவில் மறுபடியு முன்போலவே சிருஷ்டியிற் பிரவர்த்திக்கிறார். (கச)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கரு

சாக்ராவஸ்தையைப்போல ஸ்வபாவாவஸ்தையிலும் மலபரிபாக தாரதம்யத்திற்குத் தக்கபடி போதிக்க வேண்டியவர்களை போதித்துக்கொண்டும் ரோதசக்தியாற் றடுக்கவேண்டியவர்களைத் தடுத்துக்கொண்டும் கன்மிகளின் கன்மங்களைப் பக்குவமாகச் செய்துகொண்டும்

மாயாசத்திகளைப் பிரசவோன் முகங்களாகச் செய்து கொண்டும் சமஸ்த சிதசித் வர்க்கங்களையும் யதாவத்தாகப் பார்த்துக்கொண்டு மிருக்கிறார். (கரு)

நான்காவது, பதிஸ்வரூப ப்ரகரணம் முற்றிற்று.

ஆகப் ச்லோகம்—அக.

ரு—வது, பஞ்சக்ருத்ய பிரகரணம்.

மூலசூத்ரத்திற் சர்வகர்த்தாவென்று சொல்லிய பதத்தா லுண்டாகிய பஞ்சகிருத்யங்களில் அநுக்ரக திரோபாவமென்னு மிரண்டு கிருத்யங்களையுஞ் சொல்லத் துவக்குகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] || க

பலத்தினுடையவும் திரோதான சத்தியினுடையவு மதிகாரமாகிய நீசபாவமும்ஆவரணநீங்குதலால் அந்த மலசத்திகள் நீங்கும் சமயத்தில் லோகபந்துவான பரமசிவன் ஆன்மாவிற்குச் சர்வஞ்ஞத்வ சர்வகர்த்ருத்வந் தோற்றும்படிச் செய்கின்றார். (க)

[illegible]
[illegible]
[illegible] ௨

சங்காரத்திற்குப்பின் காலத்திற் சிவன் எவ்வனுக்களை யநுக்ரகிக்கிறரோ அவர்களெல்லா முடனே சிவத்வ வியக்தி யுள்ளவர்க ளாகிறார்கள். சங்காரகாலத்திலும் சிருஷ்டிகாலத்திலு மநுக்கிரகிக்கப்படுகிறவர்கள் மலபரிபாகத்திற்குத் தக்கபடி அதிகாரமற்ற முத்தியையாவது அதிகாரமுள்ள பதித்தன்மை யையாவது அடைவார்கள். (௨)

[illegible]
[illegible]
[illegible] ௩

ஸ்திதிகாலத்திற் பரமேஸ்வரன் குருமூர்த்தியை யதிஷ்டித்து எந்தச் சேதனர்களை யநுக்ரகிக்கிறரோ அவர்கள் மந்த இவ்ராதி சத்திபாத பேதத்தாற் பஞ்சாஷ்டகாதி ருத்ரர் சப்தகோடி மந்திரங்கள் மந்திரேஸ்வரர் ஈஸ்வர சதாசிவ சாந்தரொன்று மீசானர் இவர்களின்பதத்தை யடைகின்றார்கள். (௩)

மந்தாதி சத்திபாத மறியும்படி.

[illegible]
[illegible]
[illegible] ௪

[illegible] ரு

எந்தச் சரீரிகட்கு மறுபடி பிறவாமையின் பொருட்டுச் சத்திபாத முண்டாகின்றதோ அவர்கட்கு முத்தியில் விருப்பும் சம்சாரத்தில் வெறுப்பும் சிவபக்தரிடத்திற் பத்தியும் சிவசாஸ்திரத்திற் சிரத்தையும் அடையாளமாக விருக்கின்றன. இதைக்கொண்டு ஸ்தூலபுத்திகள்கூட சம்சார ஏதுவான பாசஜால நீங்கினதை யநுமானத்தா லறியக்கூடும். (ச—ரு)

[illegible] சு

[illegible] எ

உபகாராபகார கன்மங்களின் குறிப்பான சந்தோஷகோபங்க ளில்லாமற் சமமாயிருப்பது முத்திக் கடையாள மாகாதோ, சத்திபாதமென்ப தொன்றேனென்னில்? அது பசுஞானமாகிய காபிலாதி யோகத்திற் சித்திபெற்றவர்கட்குச் சரியே, இவ்விடத்தில் அதிகாரத்தோடுகூடிய முத்திகளில் தீக்ஷாதி சாதனங்களின் பே

தத்தாலும் அந்தந்த பதப்பிராப்தியிற் பிரீதியாதி யா
தாரபேதத்தாலும் மந்திர மஹேஸ்வராதி பதப்பிராப்
தியாகிய உத்தமபலத்திற் குரியவர்கட்கும் மந்திரேஸ்
வராதி பதப்பிராப்தியாகிய மத்யமபலத்திற் குரியவர்
கட்கும் பஞ்சாஷ்டகாதி ருத்ரபத ப்ராப்தியாகிய அத
மபலத்திற் குரியவர்கட்கும் தகுந்தபடி மூன்றுகுறியு
ம் வேண்டியதாக விருக்கின்றன, அவ்விரண்டையும்வி
ட இதில் வேறொரு விசேஷ மிருப்பதால் இந்தச் சத்
தியாதமென்னுங்குறி யவச்யம் வேண்டியதே! (௯-௭)

[illegible]
[illegible]
[illegible] ॥ அ

ஞானக்கிரியைகளை மறைக்கும் வாமதேவருடை
ய ரோதசத்தியானது சிறிது நீங்கினபோதும் பாதிநீங்
கினபோதும் சிறிது மீந்திருக்கும்போதும் சரீரிகட்
கிந்தக் குறிகளுண்டாகின்றன. (அ)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௯

இம் மூன்று யோக்யதையு மதிகாரத்திற்கு வே
ண்டியதாகையால் அதிகாரமற்ற ஸ்வாபகாலத்திற் பர
மேஸ்வர னிம்மூன்றையு மபேக்ஷியாமலே அணுக்களை
யநுக்ரகிக்கின்றார். (௯)

𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍌 𑌚 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌪𑌵𑌚𑍍
𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑌾 𑌗𑌤𑌾𑌃 । ௯½

வரப்போகிற சிருஷ்டியாரம்பத்திலும் மேற்சொல்லும் லக்ஷணமுள்ள மூன்ருவது பூதசங்காரத்திலும் அநுக்ரகிக்கப்படுமவர்கள் ஸ்வாபகாலத்திற்போல உடனே சிவத்வம் பெறுகிருர்கள். (௯½)

𑌸 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌵𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌥𑍍𑌯𑍋
𑌯𑍋𑌽𑌣𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । ௧௦

இவ்வாறு மூக்காலத்திலு மநுக்ரகிக்கத் தகுந்தவன் எத்தன்மையைத் தள்ளி அவ்வித சிவத்வ முள்ளவனுகச் செய்யப்படுகிருனே அத்தன்மையுள்ளவன் அணுவென்று சொல்லப்படுகிருன். (௧௦)

𑌤𑌥𑌾 𑌬𑍀𑌜𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑍇𑌃 𑌪𑌾𑌚𑌯𑌤𑍍𑌯𑌾
𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌾𑌤𑍍 । ௧௦½

அவ்வாறே ஸ்வாபகாலத்திற் சரீராதிகட்குக் காரணமாகிய கன்மத்தை மீட்டுஞ் சரீராது யுண்டாகிறவரையிற் பலத்தை யுண்டாக்கும்படி பரிபக்குவமாகச் செய்கின்ருர். (௧௦½)

𑌨 𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌤𑌾𑌮𑌸𑌜𑌂 𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌰𑌾
𑌔𑌷𑌧𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । ௧௧

கன்மம் பரிபாகத்தை யடையாவிட்டாற் பக்குவமாகாத ஔஷதாதியைப்போ லுடனே பலங்கொடுக்க மாட்டாது. (௧௧)

பாகார்ஹஸ்யாபி தத் கர்ம நேஷ்டம் ஸ்வாத்
ஸ்வாத்மனாத்மனா । ௧௧ உ

பாகயோக்யமான அந்தக் கன்மமும் தன்னைத்தா
னே பரிபக்குவமாக்கமாட்டாது. ஆகையால் ஈஸ்வரன்
வேண்டுமென்பது கருத்து. (௧௧ ம)

இவ்வாறு ஈஸ்வரன் சர்வகர்த்தாவெனக்கூறி இனி
ச் சர்வஞ்ஞனென்று கூறுகின்றார்.

ஸர்வஜ்ஞஸ் ஸர்வகர்த்ருத்வாத் ஸாத
நாங்க ஃபலைஸ்ஸஹ। யோ யஜ்ஜாநாதி
குருதே ஸ ததேவேதி ஸுஸ்திதம்॥௧௨ உ

ஈஸ்வரன் சர்வகர்த்தாவானபடியாற் சர்வஞ்ஞனு
மாவன். எவன் எதைச் சாதனம் அங்கம் பலன் இவைக
ளோடறிகின்றானோ அவனதைச் செய்கின்றானென்று
நிச்சயிக்கப்பட்டிருக்கிறபடியால் அறிந்தவனே செய்
யவேண்டும். (௧௨ ம)

தச்சாஸ்ய வ்ருத்திஸம்ரோதக்யாவ்ரு
த்யக்ஞ கலாம்வ்யபேக்ஷதே। நஹ்யஸாம்ஶயிகஜ்ஞஸ்ய
விபரீத ஜ்ஞாதா க்வசித்। ௧௩ உ

அந்தச் சர்வஞ்ஞத்வமு மிவருக்கு மலாதி ஆவர
ணமில்லாததால் கலாதி வியஞ்சகத்தை யபேக்ஷிக்கிற
தில்லை. மேலது சம்சாரி ஞானத்தைப்போற் சம்சய

திதோஷ முள்ளதுமன்று. ஆதலா லொருபோதும் விபரீதமாகாது. (கக.ம)

யாநிவ்ருத்யக தீக்ஷேதே வ்ருதகாநி ச
ஸக்திபி꞉ । வ்யஞ்ஜக வ்யக்தாநாமோயேந
தாநிஸர்வாணி வ்யஞ்ஜகாத்மவி ॥ கஉ

மலா திரோதான சத்திகளால் மறைக்கப்பட்ட ஞானங்களெல்லாம் வியஞ்சகத்தை யபேக்ஷிக்கிறபடியால் வியஞ்சகத்திற்குத் தக்கபடி மாறிப்போகும் (கஉ.ம)

நாப்ரத்யக்ஷம் நாநுமேயம் நஸாப்த
மவிஸங்கடம் । ஜ்ஞாந மைஸ்வர்யஜம் ஸர்வ
தா ஸர்வவஸ்துஷு ॥ கங

ஆகையா லீஸ்வரஞானமானது பிரத்யக்ஷானுமானாகமப் பிரமாணங்கட் கெட்டாதது. எப்போது மெல்லாவஸ்துக்களிலு நின்மலமாகப் பிரகாசிக்கும். (கங.ம)

இவ் வாறீஸ்வரன் சர்வஞ்ஞன் சர்வகர்த்தாவென்றுசாதித்துக்கூறிப்போந்த அர்த்தத்தை முடிக்கும்பொருட்டு ம்மேற்கூறு மர்த்தத்தைக் குறிப்பாகக் காட்டும் பொருட்டும் மேற் சுலோகங் கூறுகின்றார்.

ஸகர்த்தா ஸர்வகரணாயேத்தி விஷய ।
ஊர்த்வமேஸோதி தாத்விகிய விஷ்டபீ
ஸாதகஸ்ய தேஸோ சயந்தி ஸலிலோஸவ

[illegible]
[illegible] || கசூ௨

இவ்வாறு சுருக்கமாகக் கூறி ஈஸ்வர னுண்டென்னும் சத்தையும் நித்யத்வாதி ஸ்வரூபமும் சத்தியாகிய காரணமும் போகமோக்ஷமாகிய பிரயோசனமும் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியமும் சர்வவிஷயக ஞானமும் ஆகிய இவைகளாலீஸ்வர தத்வத்தை யறிந்த ஞானிகள், சம்சாரமாகிய சேற்றில் முழுகினவர்களைக் கரையேற்றிவைக்கின்றார்கள். சர்வமும் ஆத்ம ஸ்வரூபமென்று பசுரூபமாகப் பரமாத்மாவையறிபவர்களும் காலகன்மவியக்தாதி பாசங்களே கர்த்தாவென்று பாசரூபமாக பரமாத்மாவை யறிபவர்களும் எவ்வளவு தூர மறிந்திருந்தபோதிலும் தாங்களுங் கரையேற மாட்டார்கள், மற்றவர்களையு மேற்றிவைக்கமாட்டார்கள். (கசூ௨)

ஐந்தாவது,
பஞ்சக்ருத்யப் ப்ரகரணம்
முற்றிற்று.

ஆம் ஸ்லோகம்—கஎ௨.

மும் க்ஷிதிமுதலானவையும் அந்ய நிமித்தமானதால் அந்ய னாத்மாவென்று யுத்தியா லேற்படுகிறான். (கூ.ம)

𑌚𑍇𑌤𑌨 [illegible] 𑌵𑌿𑌕𑌾𑌰𑌿

𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑌾 [illegible] । [illegible] 𑌵𑌿𑌕𑌾𑌰𑌿

𑌣𑍋 [illegible] 𑌵𑌿𑌹𑍀𑌨𑌾𑌃 𑌘𑌟𑌾𑌦𑌯𑌃 ॥ சஉ

பிருதிவிமுதலான நான்கு பூதங்களின் சேர்க்கையிற் சைதன்னிய முண்டாகிறபடியால் தேகமே சேதனனென்று சொல்வாயேயானால், தேகம் போக்யமாகவும் விகாரத்தை யுடையதாகவு மிருக்கிறபடியாற் சேதனமாகமாட்டாது; அவ்வாறு போக்யமாகவும் விகாரத்தை யுடையதாகவு மிருக்கிற படாதிகளை ஜடமாகக் கண்டிருக்கிறபடியால். (ச.ற)

[illegible]

[illegible] । [illegible]

[illegible] 𑌚𑍇𑌤𑌨𑌃 ॥ ருஉ

பின்னும் பிருதிவியாதி நான்குபூதமுஞ் சேர்ந்தாலறிவுண்டாகவு மில்லாவிடி னில்லாமற்போகவுங் கண்டிருக்கிறபடியால் தேகத்திற்கே சைதன்ய முண்டென்று சொல்வாயேயானால், பிரேதமான தேகத்தி லறிவில்லாமையைக் கண்டிருக்கிறபடியால் தேகம் சேதனமாகமாட்டாது. (ரு.ம)

வரிணாமெஷு ஶெவஶிஷ்ா ஊஷிசெ
ஞுஹஸ ஜகிஷுஹா। கூ

பூதங்கள் பால்யமுதல் அடிக்கடி வெவ்வேருகப் பரிணமிக்கிறபடியால் பிரோத பரிணாமந் தவிர மற்றப் பரிணாமங்களி லுயிருண்டென்று சொல்வாயாளுல், அப்போது அடிக்கடி தேகம் வேறுபட்டுப் போனபடியால் முன்னநுபவித்ததை ஸ்மரிக்கக் கூடாது; ஒருவனநுபவித்ததை மற்ருருவன் ஸ்மரிக்கமாட்டா னுதலால். (கூ)

நாவெவம் ஸஹ தீதகவாக ஸ
தாகாயெ தமொஸ்ஹ தஃ। கூ௨

பின்னும் ஸ்மரணமில்லாமலே ஆத்மா விருக்கட்டுமென்னக் கூடாது; சர்வலோகப் பிரசித்தமாக யாவர்க்கும் ஸ்மரண முண்டாகிறபடியால். ஆகையாற் சரீரத்திற்கு வேருக ஸ்மரிப்பவனுத்மா ஒருவ னிருக்கிருனென்று ஒப்புக் கொள்ளவேண்டும். (கூ௨)

இவ்வா ருத்மாவுண்டென்று சாதித்து அவனுடைய விசேஷ ஸ்வரூபத்தைச் சொல்கிருர்.

நாவ ாவ கொநக்ஷணிகொ ஓெந
கொநா விஜயாதகஃ। நாகதா ஹிஞுஹி
ஜெ்ாமீ வாஶாஜெ ஶிவதாஶுதெஃ॥ எ௨

ஆத்மா தேசகாலாநவச்சின்னனாகையால் அவ்யாபகனுமல்ல க்ஷணிகனுமல்ல ஒருவனுமல்ல ஜடனுமல்ல கிரியையில்லாதவனுமல்ல, பரிபூரண சைதன்யமுள்ளவன்; பாசமுடிவிற் சிவத்தன்மை வருகிறதாகப் பிரமாணமிருக்கிறபடியால். (எ.ற)

ஆறுவது, பசுலக்ஷண ப்ரகரணம் முற்றிற்று.

அடிப்லோகம்—கOரு.

சிவமயம்.

௭-வது பாசலக்ஷண ப்ரகரணம்.

[illegible] || ௧

பசுபதார்த்த நிருபித்தபின், ஆணவ முதலாகிய பாசங்கள் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. இப்பாசங்கள் நீங்கினபின்பு அணுக்கள் லோகபதிகளாய் முத்திபடைகின்றன. (௧)

[illegible] || ௨

இப் பாசங்களில்லாவிடில் புருடனுக்குப் பாரதந்திர மொருவனுக்கு வசப்பட் டிருக்குந் தன்மை யெதினால் வந்ததென்று சொல்லலாம்? ஸ்வபாவமாக வுண்டெனில் முக்தாத்மாக்களிடத்தில் முக்தனென்னும்பேர் வரமாட்டாது. பந்தம் விட்டா லல்லவோ முக்தனாவான், பந்தம் ஸ்வபாவமானால் விடமாட்டாதே! (௨)

[illegible]

ஸ்வதந்த்ரஸ்யாஸ்வதந்த்ரதா | ஏதாவதீதி பேத
ஸ்ய முக்தஸ்ய பத்தமுக்தயோ: ॥ ௩

கட்டில்லாதவன் ஸ்வாதீனனாகவும் கட்டுப்பட்டவன் வசப்பட்டு மிருக்கக் கண்டிருக்கிறபடியால், பத்தனுக்கும் முத்தனுக்கும் இவ்வளவே பேதம். அதாவது, வசப்பட்டவன் பத்தன், ஸ்வாதீனனானவன் முத்தன். (௩)

தஸ்மாத் தந்த்ரம் பந்தத்வம் தந்நித்
யம் சேத் ஜ்ஞாநாதிவத் | முக்திஸாதநஸம்பா
ரோ வ்யர்த்த: ஸ்யாதுபாயஸம்பா ॥ ௪

ஆகையா லந்த வசப்பட்டிருக்குந் தன்மையே பந்தமென்று சொல்லப்படும். அந்தப் பந்தத்தை ஞானக்கிரியைகளைப்போல் ஆத்மாவிற்கு நித்யமென்றால் முத்திக்காக வேற்பட்ட ஞானாதி யுபாயங்களெல்லாம் வியர்த்தங்களாகும்; பந்தம் நீங்காததினாலே. ஆதலாற் போதும்; இதுவரையிற் சொல்லிய சம்சாரத்தை நீக்கமாட்டாத புத்தி. (௪)

நித்யத்வாத் பந்தவிச்சித்தி நிர்பந்த்ர வ்யாஹ
திஸம்பவ | பாபஸம்ஸாரஹேதோ வா ஸதா
நிஷ்ப்ரத்யூஹம் ॥ ௫

அணுவாகிய ஆத்மாவானவன் அநாதியான மலத்தாற் கட்டுப்படாவிட்டால் அவன் நித்யமாகவும் வியாபகமாகவு மிருக்கிற சிற்சத்திக் கிடமா யிருக்கையிலும்

தனக்குப் போகசித்திக்காக கலாதி யாத்ம பலத்தையும் மோக்ஷத்திற்காகச் சிவனுடைய பலத்தையும் தேட வேண்டுவதென். (௫)

[illegible] ॥ ௬

இவ்வாத்மாவிற் காவரணமாகிய வந்த மலமானது சைவசாஸ்திரத்தில் அநேக பரியாயநாம முள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பசுசாஸ்திரஞ் செய்தவர்கட்குத் தெரியாது. (௬)

[illegible] ॥ ௭

பசுத்வ பசுநீஹார மிருத்யு மூர்ச்சா மல அஞ்சன அவித்யா ஆவ்ருதி ருக்கு கிலானி பாப மூல க்ஷய முதலாகிய பேர்களுள்ளது மலம். (௭)

[illegible] ॥ ௮

அம் மலமானது சர்வப் பிராணிகட்கு மொன்றே அநாதியாயும் கனமாய்ப் பேதிக்கக் கூடாததாயும் மக

த்தாயும் ஆத்மாக்கள்தோறும் தத்தம் பரிணாமகாலத்தி லழிகின்ற அநேக சத்தியுள்ளதாயு மிருக்கும். (௮)

[illegible] ॥ ௯

அம் மல மாத்மாக்கட் கநாதிகாலத்திலேயே யிருக்கிறதென்று சொல்லவேண்டும். நடுவில் வந்ததென்றால் வந்ததற்கு நிமித்தஞ் சொல்லவேண்டும். நிமித்தமில்லாமல் வருமென்றால் ஸ்வபாவமானபடியால் முத்தாத்மாக்களையு மறைக்கும். ஆனா லென்னவெனில் மோக்ஷப் பிரயத்தினம் வீணாகப் போய்விடும். (௯)

[illegible] ॥ ௧௦

அம் மல மநேகமென்றால் அவ்வாறு ஜடமாகவு மநேகமாகவு மிருப்பது பிறப்புள்ளதாகையால் அநாதியான விம்மல மேகமே யாகவேண்டும். ஆனால் ஒரேகாலத்தில் எல்லோருக்கும் முத்தி காணப்படாததினாலே அவ்வாத்மாக்கடோறு மறைக்கின்ற வநேக அநித்தியசத்திக ளுள்ளதென்று சொல்லவேண்டும். (௧௦)

[illegible]

ரோதிகா ஶிவா | யைஷாநுவர்த்தநாதேவ
பாஶத்வேநோபசர்யதே || ௧௧

முன் னீஸ்வரனது திரோதான சத்தியையும் மலத்திற் சேர்த்துச் சொன்னபடியா லதைச் சொல்லுகிறார். ஸ்வபாவத்திற் சர்வாத்மாக்களையு மநுக்ரஹித்து மங்களப் பிரதமான வீஸ்வர திரோதான சத்தியானது மறைக்கின்ற மலசத்திகளை யதிஷ்டித்து அநுவர்த்திக்கிறபடியால் பாசமென் றுபசாரமாகச் சொல்லப்படுகிறது. (௧௧)

பரிணாமயதீ தாஸ்து ரோதயாவத் ஸகா
சித்விகாஸிநீ | யதா ஜ்ஞாநாயதே த
தாநுக்ராஹிகோச்யதே || ௧௨

ஈஸ்வர சத்தியானது திரோதானதிகார மிருக்கும் வரையி லந்த மலசத்திகளை பரிணமிக்கச் செய்துகொண்டு அநுக்ரஹரூபமான ஞானமந்திரமாகிற சூரியனுடைய சித்பிரகாசத்தாலே யெப்போ தாத்மாக்கட்கு ஞானவிகாசத்தைச் செய்கிறதோ அப்போது அநுக்ரஹசக்தியென்று சொல்லப்படுகிறது. (௧௨)

பிரச்னை.

ஸம்ஸோஸ்து ஶிவாஜ்ஞாநுக்ராஹ்யதே ஜிரோ
யிதயாதிமம் | யதாமப ரக்ஷாஸ்தம் ஸோ
வதாநுக்ராஹிகாபதம் || ௧௩

ஈஸ்வரன் சேதனா சேதன வர்க்க மெல்லாவற்றையு மநுக்ரஹிக்க வேண்டியது கடமை, அவைகள் ஒன்றுக்கொன்று விரோதியாகையால் ஈஸ்வரசக்தி யேககாலத்தி லநுக்ரகிக்க மாட்டாது. ஆதலாற் சர்வாநுக்கிரகிகையென் றெப்படிச் சொல்லலாம். (௧௩)

நவஶீ தோபகாராய ஸ்யும் ப்ரவ்ரு
த்தஸ்ய ஜகத: ப்ரபோ: | அபகாரக ரா
விஸ்ய யுஜ்யதே கிந்நு தோஷநம் || ௧௪

பின்னும் சர்வபூதங்கட்கு முபகாரஞ்செய்யவே பிரவர்த்தித்த லோகப்பிரபுவான வீஸ்வரன் அபகாரஞ்செய்யும் ஆணவாதி பாசங்களை யநுக்ரகித்தும் ஆத்மாக்களைபந்தித்து வருத்துவது யுக்தமாகமாட்டாது. (௧௪)

உத்தரம்.

ந தோஷ நாயகஸ்யைதே வைஶ்வரூ
ப்யோ ரநாஹதம் | கிந்துயத் க்ரிய
தே கிஞ்சித் தோபாயேந நாமயா || ௧௫

ஈஸ்வரசக்தி சர்வாநுக்ராகிகையென்பது மெய்யே! சேதனசேதனங்களை யொருக்காலே யநுக்ரகிப்பதில் விரோதமு மில்லை; அணுவை வருத்துகிறதற்காக மலத்தை யநுக்ரகிக்கிறதில்லை. ஆனல் அவர்செய்கிற துபாயமாகச் செய்கிற செய்கையேயல்லாமல் வேறில்லை. (௧௫)

நஹ்யஸதி காரணேஸ்மிந் முக்திர் பவதி

கஸ்யசித் | அதிகாரோபி தத்வ்ருத்தே: ப

ரிணாமாத் விநச்யதி || கசு

உபாயமாவதென்னவெனில் மலத்திற் கதிகாரமிருக்கும்வரையி லொருவனுக்கு முத்தியுண்டாகிறதில்லை; மலநீங்குகலே முத்தியென்னப்படுகையால். மலாதிகாரமும் மலசத்தி பரிணமித்தபின்தான் நீங்கும். (கசு)

ஸ்வாவிந ஸ்வதனவஸ்த்ரா ஊவியோ

ஸ்த்ரஸ்ய வஸ்துந: | ஸமயா ஸமஞ்ஜா

டஸ்ய ச்ஸ்ப்ரயோஜ்ய ஈசேதநம் || கஎ

அம் மலபரிணாமமும் அது பரிணாம யோக்யமான போதிலும் தனக்குத்தா னுண்டாகாது; எப்போதும் எவ்விதத்திலும் ஜடமெல்லாஞ் சித்தினாலே யசைவிக்கப்படக் காண்கையாலே.

ஆகையா லநுக்ரகமும் அதுநிமித்தஞ் செய்யும் மலபரிணாமமும் ஒன்றுக்கொன்று விரோதியலலவென்று கருத்து. (கஎ)

இதற்கு திருஷ்டாந்தம்.

யதா க்ஷாராதிநா வஸ்த்ரம் ஸ்த்ரஞ ந

விநச்யதி | கோடாவிஷா ஸமயா

யிக்யா ஞா: வர்ஷகா: ப்ரதீயதே || கஅ

எவ்வாறு வைத்யன் ரோகியைப் புண்முதலானவ ற்றிற் காரமுதலானவை வைத்து வருத்தினபோதிலும் முடிவில் நன்மைசெய்கிறபடியா லவ்வாறு வருத்துகிற வனாகத் தோற்றவில்லையோ, அவ்வாறே யீஸ்வரனு ம லநீங்கும்பொருட்டுச் செய்யுந் துக்கானுபவத்தை வருத் தமென்னக்கூடாது. (௧௮)

சுத்தஸ்வரூபரான யீஸ்வரன் பாசத்தையநுசரித் துச் செய்யவேண்டுவ தென்னவென்னுங்கேள்விக் குத் தரம்.

[illegible]
[illegible]
[illegible] ௧௯

ஈஸ்வரன் சர்வவியாபியாகையால் யாவையும் அ திஷ்டிக்காம லிருக்கமாட்டார். ஆனால் எங்கே செய்ய வேண்டிய செய்கையில்லையோ அங்கே செய்கையின்றி உதாசீனரா யிருப்பார். (௧௯)

[illegible]
[illegible]
[illegible] ௨௦

ஈஸ்வரன் தருமிகளான சேதநாசேதனங்களை அ நுக்ரஹிப்பதாவது அவைகளின் தருமத்தை யநுசரிப்ப துதான். அவ ரநுசரிக்காத தருமமொருபதார்த்தத் திற்கு மொருபோதும் கிடைக்கமாட்டாது. (௨௦)

[illegible]
[illegible]
[illegible] ॥ உக

ஞானக்கிரியைகளைத் தடுக்கும் மலசக்தி நீங்கின பசுவினிடத்தில் ஈச்வரசக்தி யநுக்ரக ரூபமாக வளருகிறது, அப்போது பாசத்தினிடத்தில் அதின்சக்திகளைப் பரிணமிக்கச் செய்வதே அநுக்ரகமாகிறது. (உக)

[illegible]
[illegible]
[illegible] ॥ உஉ

ஆதலா லென்ன வேற்பட்டதெனில்? அதிகாரத்துடன் மலசத்திநீங்கும்போது திரோதானசத்தியும் நீங்குகிறபடியால் சேதனனுடைய அறியுந்தன்மையையும் ஜடத்தினுடைய பரிணமிக்குந்தன்மையையும் அநுசரிப்பதே அநுக்ரகமென் றறிக. (உஉ)

[illegible]
[illegible]
[illegible] ॥ உங

இவ்வா றேககாலத்திற் சம்பவிக்குமிடத்தி லநுக்ரக ஸ்வரூப மறியவேண்டியது. கிரமமாக வருமிடத்திற் சுலபமே. இவ்வாறே அதிகாரத்துடன் கூடிய மாயா

கன்மங்கட்குஞ் சொல்லியதென் றறிக; ஜடமெல்லாஞ் சித்தினாலே அசைவிக்கப் பட்டதென்று முன்னமே பொதுப்படச் சொல்லியபடியால். (உக)

ஏழாவது, பாசலக்ஷண ப்ரகரணம்

முற்றிற்று.

ஆ. ச்லோகம் — கஉஅ.

சிவமயம்.

அ—வது, கன்மவிசாரப்ரகரணம்



[illegible]
[illegible]
[illegible] ॥ க

கன்மேந்திரிய ஞானேந்திரிய சரீரவிஷயங்களோடு சேர்க்கை யாத்மாவிற் குண்டானதற்கு நிமித்தமுண்டென்று அநுமிக்கப்படுகிறது, உற்பத்தியுள்ளதாகையால்; உற்பத்தி யுள்ளதெல்லாம் காரணமில்லாம லிருக்கக் கண்டதில்லை யாகையால். (க)

[illegible]
[illegible]
[illegible] ॥ உ

இந்திரியாதிகளுட னாத்மாவிற் குண்டாகிய சேர்க்கையானது ஸ்வர்க்காதி தேசநியமமுள்ளதாலும் பிராணிகள்தோறும் சரீராதிகள் வெவ்வேறுபட் டிருப்பதாலும் அநித்யமா யிருப்பதாலும் புருஷன் றோறும் தனித்தனியே ஏற்பட் டிருப்பதாலும் ஜன்மாந்தரத் தொடர்ச்சி யுள்ளதா யிருப்பதாலும் அதற்குண்டாகிய காரணமு மவ்விதகுணமுள்ளதென்று சொல்லவேண்டும்; காரணத்தைப்போற் காரிய முண்டாகு மாதலால்.

ஸம்ஸாரிணாம் த்³ருவபேக்ஷிதாத் ஸஹ
காரி தது³ச்யதே । க்ரியத்வாத் கர்ம
ஸூக்ஷ்மத்வாத³த்³ருஷ்டம் ஸம்ப⁴வத: ॥ ௧

மேலு மந்தக்காரணமானது பலங்கொடுக்க அப்பொழு திரோதான சத்தியையும் ஆணவ மலமுதலானவைகளையு மபேக்ஷிக்கிறபடியால் ஸ்வதந்திரமாகாமற் சககாரியாயிருப்பதென்றும் செய்கையா லுண்டாகிறபடியாற் கிரியாரூபமான கன்மமென்று பேருள்ளதென்றும் சூக்ஷுமமாய்ப் பிரத்யக்ஷமா யிருக்கிறபடியா லதிருஷ்டமென்று பேருள்ளதென்றும் சொல்லப்படுகிறது. (௧)

ஜநக தா⁴ரகம் போ⁴க்³யம் வாங்மநஸ்காய
ஸம்ப⁴வம் । தத்ஸத்யாந்ருதமூலத்வாத்
த⁴ர்மாத⁴ர்மாத்மகம் ஸ்ம்ருதம் ॥ ௨

அந்தக் கன்மமானது நிமித்தமாய்ச் சரீராதிகளையுண்டாக்குவதாயும் சரீரரூபமாய்த் தரிப்பதாயும் விஷயரூபமாய்ப் போக்யமாகவு மனோவாக்குக் காயங்களினா லுண்டானதாயும் மெய் பொய்களைக் காரணமாகக் கொண்டிருப்பதால் தர்மாதர்மரூபமென்றும் சொல்லப்படும். (௨)

ஸாத்வி விபாகஜந்யஸ்தி தத்ஸ
ஷ்டா வர்ணவ்யஞ்ஜநேதி । ஜாயாயாம் வக்த்ரு
தேஹாதே நாலக்ஷ்யம் யதே²ஜ்யத ॥ ௩

அந்தக் கன்மமானது பிரளயத்திற் பரிணமத்தை யடைகின்றது, சிருஷ்டிகாலத்திற் போகத்திற் குபயோகமாகிறது, சங்காரகாலத்தில் மாயையிற் சம்ஸ்கார ரூபமாக விருக்கிறது, புசிக்காம லழிகின்றதில்லை. (௫)

[illegible]
[illegible]
[illegible] ‖ ௬

இவ்வாறு சொல்லப்பட்ட கன்மமானது மாயை முதற் காலமீறான அத்வாவி லுண்டாகிய சரீராதிகளை யுண்டாக்குகிறதாயும் பிரவாகாநாதியாகவு மிருக்கும். இது அநித்தமா யிருந்தபோதிலும் பாதகமாகவே யாகும், எனெனில்? கன்ம மிருக்கும்போது முத்தியில்லை யாதலால். (௬)

எட்டாவது, கன்மவிசார ப்ரகரணம்

முற்றிற்று.

ஸ்ரீ ஶ்லோகம்—௧௩௪.

சிவமயம்.

௯-வது மாயா ப்ரகரணம்.

[illegible] க

இனி, உத்தேச சூத்ரத்திற் சொல்லப்பட்ட மாயா பாசத்தின் லக்ஷணம், ப்ரமாணத்தாலும் யுக்தியாலும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. (க)

[illegible] ௨

அம்மாயையானது ஒன்றாகவும் மயக்குவதாற் சிவமாகவும் பிரபஞ்சத்திற் குபாதானமாகவும் பலவேறுபட்ட சத்தியுள்ளதாகவும் சககாரிகளான கன்மங்களினதிகாரவசாயி லாத்மாக்களை மறைப்பதாகவும் வியாபகமாகவும் நித்தியமாகவு மிருக்கும். (௨)

சில யுக்திகளாலும் மாயை யுண்டென்கிறார்.

[illegible] ௩

ஜகத்து உற்பத்தி யுள்ளதென்னும் யாதொரு வ துவினாலே கர்த்தா அநுமிக்கப்படுகிறாரோ அவ்வேது வினாலேயே அதற் குபாதானமாகிய மாயையு முண் டென்று சொல்லவேண்டும்; தந்துமுதலான வுபாதா ன காரணமன்னியில் படமுதலான காரியம் பிறவாதா தலால். (௫)

ததை²வ தஜ்ஜட³ஸ்யாஸ்ய கார்யஸ்யா
விஶ்வஸ்யாநாஸ் | ப்ராப்த꞉ ஸர்வஸ்யாபி
தோ³ஷ꞉ காரணா நியமோத்³யா || ௬

பின்னு மம் மாயையின் காரியங்களெல்லாம் ஜட ங்களாகையா லதுவும் ஜடமென்றே சொல்லல்வேண் டும். அவ்வாறு சொல்லாவிடிற் காரியகாரண நியமப ங்கமென்னும் பெருங்குற்றம் வரும். (௬)

யத்³ய்ருத்ரி ஶீம் கார்யம் க்ஷோபா⁴ந்தவ
த்ரிக வாந꞉ | ஸர்வ்ராவிவேஶ் கா¹த
ஸ்ஸ ஸ்ராஸ் ஸவேஷாம் ஸவாதா
ஜாவ்யேஷ || ௭

இம்மாயை பிரளயத்திலழியுமென்றால் மீட்டும்பிர பஞ்ச மெதிலிருந் துண்டாகும்; ஆதலால் நித்யமே. இ து, அவ்யாபகமானால் சர்வதோமுகமாகக் காரியமெங் கு முண்டாகக் கூடாதாகையால், இதை வியாபகமாகவு ம் அவச்ய மொப்புக்கொள்ளல் வேண்டும். (௭)

[illegible] ॥ ௫

ஜடமாயு மநேகமாயு மிருப்பதெல்லா முற்பத்தியுள்ளதாகக் கண்டிருக்கிறபடியால் இம்மாயைக் குற்பத்தி யில்லாதபடியால் இதை யொன்றென் றொப்புக்கொள்ளவேண்டும். அநேகமாகிற் பரமகாரண மாகமாட்டாது. (௫)

சங்கை.

[illegible] ॥ ௬

உபாதானகாரணமான அநேக தந்துக்களி லிருந்து ஒருபட முண்டாகக் காண்கிற படியால் இவ்வாறே சர்வகாரியமு மநேகோபாதானத்திருந் துண்டாகிறது. ஆதலால் மாயை அநேகமே யென்னில்? (௬)

உத்தரம்.

[illegible] ॥ ௭

அவ்வா றநேகமான தந்துமுதலானவையும் ஒன்றாகிய பஞ்சுமுதலான வுபாதானத்திருந் துண்டாகின்றதாகையால், ஒன்றாகிய பரமகாரணமான மாயையினி

ருந்து சர்வப்பிரபஞ்சமு முண்டாகிறதென்பதற்கு யா தொரு குற்றமுமில்லை. (௭)

யேஷாம் விஸத்ருசாத்ஸதோ ஹ்யஸத்ருசம்

ப்ரஜாயதே । தேஷாம் ஜலாத்ஸஹ தூமோ

ந ஜலம் கிந்நாநுமீயதே ॥ ௮

சிலர் சேதனனை ஆத்மாவிலிருந்தே அசேதனமாகிய பிரபஞ்ச முண்டாகிறதென்கிறார்கள். அவ்வாறு விருத்த காரணத்திலிருந்து விருத்தகாரிய முண்டாகில் ஜலத்திலிருந்து புகையுண்டானதென்று புகையைக்கொ டு ஜலத்தை அவர்கள் அநுமிக்கலாம்; ஏனநுமிக்க வில்லை. (௮)

ஸாங்க்யாதயஸ்ஸமேஷாம் காரணம் ப

ரமாணவ꞉ । தேஷாம் ஷட்பதார்த்தஜ்ஞா

நேநைவ ஜ்ஞாநலக்ஷணம் ॥ ௯

இன்னுஞ்சில தார்க்கிகர்முதலானவர்கள் ப்ருதிவியாதி பூதம் வரையிற் பிரபஞ்சமென்றும் பரமாணுக்களே பரமகாரணமென்றுஞ் சொல்கிறார்கள்; அவர்கள் திரவ்யாதி ஷட்பதார்த்த ஞானம் அல்லது ஷோடசபதார்த்த ஞானத்தால் மோக்ஷமென்கிறார்களென்று முன்சொல்லிய வேதுவினாலேயே அவர்களின் ஞானசூக்ஷ்மம் தெரியப்படுகிறதல்லவா.

பரமாணுக்கள் அசேதனமாயனேகங்க ளாகையா ல் அநித்யமாகும்; பரமகாரண மாகமாட்டாது. மாயை யே காரணமென்பது கருத்து. (௯)

ஶரீராணீஹ ஶரீராதி³ஜநிதாநி விநாத்⁴ருவா
யேந காரணதாத்³ருஷ்டா நிர்விஶேஷம் ஸோঽநவஸ்தி²தே
ஜ்ஞோ ஶரீரவஶேஷக: ॥ ௧௦

பிரத்யக்ஷமாகத் தாய்தந்தைகளின் சரீராதிகளைப் போற் புத்ராதிகளின் சரீராதிக ளுண்டாகக் காண்கை யால் தேகாதிக்குக் காரணம் மாத்ரு பித்ரு தேகாதியே, மாயையென்ப தொன்று வேண்டுவ தில்லையென்னில்? சர்வசங்காரமானபின் சிருஷ்டியாதி காலத்தில் தேகா திக்குக் காரணமாக வெந்தச் சரீராதி யிருந்தது. ஏககா லத்திற் சர்வசங்கார மில்லை தனித்தனியே சங்காரமாகி றதென்னில்? வேதாகமங்களிற் கூறிய சர்வசங்காரமாகி ய மகாப்பிரளயம் பொய்யாகும்போது சர்வஞ்ஞனா னீஸ்வரன் பொய்யனாகவேண்டி வரும்; ஆகையா லப்ப டிச் சொல்லப்படாது. (௧0)

ஏகதே³ஶேঽபி யோ த⁴ர்ம: ப்ருத²கே³கா
யஸ்ய த்³ருஷ்ட: ஸ தஸ்யைவ ஸர்வதஸ்தே
ந ஜாயதே நோ நிவர்தேத ॥ ௧௧

அஃதெவ்வாறெனில்; ஓர் வஸ்துவினது ஒரு தரும ம் ஓரிடத்தி லறியப்படுமாயின் அதற் கந்தத் தரும மெவ்விடத்திலு முண்டாகு மென்பதற்குத் தடையு

ன்ன; அக்நி முதலானவற்றிற்கு ஓரிடத்திற் காணப்ப
ட்ட புகையும் பிரகாசமுமெங்கு முண்டாயிருக்கிறதல்
லவா. (௧௧)

அதுபோல்

கோடிஶோ ஜந்தவ: ஸ்ருஷ்டா: ஸம்ஹதா
நாம் ஶரீரிணாம் | ஶோபாவி வ்ருத்தீயதே
காலோ யத்ராஶேஷ ஜநக்ஷய: || ௧௨

சர்வப்பிராணி சரீரங்களுக்கும் தனித்தனியே அ
வாந்தர மரணாதிகள் கண்டிருப்பதாற் சர்வ சங்காரமா
குங்காலமு மாகமாதிகளா லறியப்படும். (௧௨)

ததாயாஶாணிகாயஸ்தாணி ஸூக்ஷ்மரூபா
ணி ஸம்ஹ்ருதாநி | விக்ருதாநி வ்யக்தரூபா
ணி வ்யாப்ய திஷ்டந்தி ஸர்வத: || ௧௩

இவ்வாறு கூறிய யுக்தியுபபத்திகளால் நிச்சயி
க்கப்பட்ட மாயையென்னு முபாதான காரணத்தையா
தாரமாகக்கொண்ட சர்வகாரியங்களும் சங்காரத்திற் சத்
திரூபங்களா யதிலடங்கி யிருக்கின்றன. சிருஷ்டிகாலத்
தில் தநுகரணாதியானவை தத்தம் பிரயோசனஞ் சித்
திக்கும் பொருட்டாக அம்மாயையிலிருந்து வியக்திரூ
பங்களாய் வியாபரிக்கின்றன. (௧௩)

சங்கை.

[illegible] கச

[illegible] கச௨

படம் வேண்டியவன் படமில்லாவிடில் தந்துமுதலிய கருவிகளைத் தேடுகிறான். படமுண்டானபின் தந்துவென்னும் பெயரேயில்லை. ஆகையாற் பிரபஞ்சம் அசத்தே! அசத்தான காரியத்தை யுண்டாக்குவதே காரகமாகிய வஸ்துவிற்குப் பிரயோசனமாகும். (கச-கச௨)

உத்தரம்.

[illegible] கரு

அவ்வாறில்லாதகாரிய மொன்றி லுண்டாகுமானால் எல்லாக் காரணங்களிலும் எல்லாக் காரியங்களையும் எல்லாரு முண்டாக்கவேண்டி வரும். (கரு)

[illegible] கசு

அவ்வக் காரணங்களி லிருந்து அவ்வக்காரியங்களுண்டாகக் காண்கையால் எல்லாவற்றையு முண்டாக்க மு

டியாதென்னில்? ஒரு காரணம் தன்காரியத்தை மாத்திர முண்டாக்கவும் மற்றதை யுண்டாக்காம லிருக்கவும் நியாமகமொன்றுங் காணப்படவில்லை. அந்தக் காரியத்தைமாத்திர முண்டாக்க வந்தக் காரணத்தி லோர்சத்தி யிருக்கிறதென்னிற் காரியங்கள் காரணத்திற் சத்திரூபமா யடங்கி யிருக்குமென்று நாம் சொல்லியதைச் சாதித்ததா யிருக்கிறது. (கசு)

[illegible] கஎ

இல்லாத காரிய முண்டாகுமென்னில்? மலடியின் பிள்ளையை யுண்டாக்கக் கருவிகளால் முடியாததாற் காரியங்கட்குக் கருவிகள் வேண்டுமென்னுஞ் சொல்லும் அவைகளைக் கொண்டுவருகையும் செய்கையும் ஒன்று மில்லாமற்போய் ஜகத்தே யில்லாமற் போகவேண்டிவரும். (கஎ)

[illegible] கஅ

அவ்வக் காரணங்களி லவ்வக் காரியங்க ளுண்டாகும்படி யோர்சத்தி யிருக்கிறது. காரியமே சத்திரூபமாக இருக்கவில்லை யென்னில்? இவ்வா றந்தச் சத்திகட்கு

விசேஷணஞ் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்வதி ல் ஒரு விசேஷத்தையுங் காணோம். (௧௮)

தஸ்மா ச்சக்த்யாத்மகாஜ்ஜந்ம ஶக்தே: காரகவ
ஸ்துந: । ஸாந்வய வ்யதிரேகாப்யாம் ஸி
த்தா வாவஸீயதே ॥ ௧௯

ஆகையாற் காரகமாகிய வஸ்துவினிடத்தில் அவ்வ க் காரிய சத்தி நியாமிகையா யிருக்கிறது. அது உண் டானாற் காரியமுண்டு; இல்லாவிடி லில்லையென்னும் அ ந்வய வியதிரேகங்களா லாவது லோகப்பிரசித்தியா லாவது அறியத்தக்கது. (௧௯)

தத்வ்யக்திர் ஜந்ம தஜ்ஜந்ம தஸ்யா: காரக ஸம்
ஶ்ரயாத் । தேந தஸ்யா மஹாகாரம் படா
காராவரோதகம் ॥ ௨௦

வேமாதி நாபநீயாய படவ்யக்தி: ப்ர
காஶ்யதே । ௨௦௧

அந்தக் காரணத்திற் சத்திரூபமாக விருந்த காரி யம் கருவிகளின் சகாயத்தால் வியக்தமாகப் பிரகாசிப் பதே யுற்பத்தியென்னப்படும். எவ்வாறென்னில்? கார ணமான நூலின்ரூபமானது படரூபத்தை மறைத்துக் கொண் டிருக்கிறது. துரீ வேமாதி கருவிகளா லதைப் போக்கிப் படரூபம் வியக்தமாகப் பிரகாசிக்கச் செய்ய ப்படுகிறது. அவ்வாறென் றறிக. (௨௦ - ௨௦,௧)

𑌯𑌥𑌾 𑌘𑌟𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌛𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌪𑌟𑌾𑌦𑍇𑌸𑍍𑌤𑍁
𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌵𑍃𑌤𑌃 । 𑌨𑌾𑌵𑍃𑌤𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌵𑍍𑌯
𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌲𑌾𑌦𑍇𑌃 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾 ॥ ௨௧௯

கடமுதலானதால் மறைக்கப்பட்ட படமுதலானது மறைப்பு நீக்கினமாத்திரத்தி லெவ்வாறு பிரகாசிக்கிறதோ அவ்வாறே மாயையிற் சத்திருபமாய் மறைந்திருந்த கலாதி தத்துவமானது அநந்தேஸ்வர வியாபாரத்தால் மறைப்புநீக்கி வியக்தமாகப் பிரகாசிக்கச் செய்யப்படுகிறது. இல்லாததொருபோது முண்டாகாது.

ஒன்பதாவது, மாயா ப்ரகரணம்
முற்றிற்று.

ஆஸ்லோகம் - கருரு.

சிவமயம்.

௧௦—வது கலாதி ப்ரகரணம்.



[illegible] ௧

மாயாதத்வத்திலிருந்து முதலிற் கலை நியதி காலம் புருடன் இந்நான்கும், கலையிலிருந்து வித்தை ராகம் அவ்யத்தம் இம்மூன்றும், அவ்யத்தத்திலிருந்து முக்குணங்கள் அவற்றிலிருந்து புத்தி அதிலிருந்து ஆங்காரம் தைஜஸாங்காரத்திருந்து ஞானேந்திரியங்களும் மனமும், வைகாரிகத்திருந்து கன்மேந்திரியங்களும், பூதாதியிலிருந்து தன்மாத்திரைகளும் அவைகளிலிருந்து பூதங்களும் இவ்வாறு கிரமமாகத் தோற்றுகின்றன. (௧)

[illegible] ௨

அசுத்தாத்துவாவி லதிகாரியான அநந்தேச்வரர் ஆத்மாக்கட்குத் தேகாதி சித்திநிமித்தம் மாயாதத்வத்திலிருந்து நேரிடவும் கலாதிதத்வ வழியாகவும் எதை எந்தக் காரணத்திற்காக எவ்விதமாகக் கூட்டிவைக்கிறாரோ அது அவ்விதமாகவே யிப்போது சொல்லப்படுகிறது. (௨)

[illegible]
[illegible]
[illegible] ௩

ஆத்மாவினது கர்த்ருசத்தியானது சிவசத்தியை ப்போலவே நித்யமாயும் வியாபகமாயு மிருக்கின்றது. ஆனால் மலத்தினாலே மறைக்கப்பட் டிருப்பதாற் செ ய்யவேண்டிய காரியங்களி லீச்வராநுக்கிரகமின்றி பிர வர்த்திக்கிற தில்லை, (௩)

[illegible]
[illegible]
[illegible] ௪

ஆகையா லாத்மாநுக்கிரக நிமித்தம் அநந்தேச்வர ர்முதற் பிரவிருத்திஹேதுவாய்ப் பிரகாசரூபமான கலை யென்னும் தத்வத்தை மாயையைக்ஷோபித்துத் தோற் றுவிக்கிறார். (௪)

[illegible]
[illegible]
[illegible] ௫

இயத்தை யொத்த வந்தக் கலையாலே அநந்தே ச்வரர் மலத்தால் மறைக்கப்பட்ட சைதன்யமுள்ளவாத் மாவிற்குக் கன்மமான விருத்திக்கு யேகதேசம் பிரகா சிக்கச் செய்கிறார். (௫)

கலைதஸ்யோபயோகாய ஸம்வ்ருத்ய
நிரோதநேந ஸ: | ப்ரஸ்தாரணம்
வ்யாரணம் ஸா கலா வ்ருத்திரஸ்ய கலா || ௬

கலை என்னும்முதனிலைக்கு நீக்கலும் நியமித்தலும் அர்த்தமாகையால் அந்தக்கலையே இருளைநீக்கி நியதிரூபமாய் போகநியமனத்தையுஞ் செய்யும், நியமிக்கும் போது நியதிதத்வ மாகும், இதனுல் நியதிதத்வமும் சொன்னதாயிற்று. (௬)

ஐக்யதத்வாத்மகம் விப்ர ஸம்யோக
நத்தவத் ஸ்தித: | போக க்ரியாவிதௌ
ஐக்யாதிஜாத: கர்த்ருகாரக: || ௭

இவ்வா றிந்தக் கலையு மாத்மாவும் பேதமற்றது போ லொன்ருகச் சேர்ந்து போகக்கிரியைகளிற் கர்த்தாவாயுங் காரகமாயு மிருக்குமென்பர். (௭)

ஏவம் வ்யக்தக்ரியாசக்திர்த்ருச்ய
விஷயஸ்ய ஸ: | அஜத்ரநாத் ஸா
வேக்ஷாம் ஸ்வயம்ஜ்ஞாநஸக்தவது || ௮

இவ்வாறு வ்யக்தமான கிரியாசத்தியுள்ள வாத்மாவானவன் விஷய தரிசனத்திற் காகத்தானே கரணசத்தியில்லாதபடியால் ஞானத்திற் கீச்வரானுக்ரஹத்தை யபேக்ஷிக்கிருன். (௮)

[illegible] ௯

அவனிமித்தம் அநந்தேஸ்வரர் தத்வமுண்டாக்க யோக்யமான கலையை க்ஷோபிக்கச் செய்து ஆத்மாவிற்கு முக்யகருவியான வித்தையென்னுந் தத்வத்தை சிருஷ்டித்தார். (௯)

[illegible] ௧0

ஞானசத்தியைப் பிரகாசிக்கச் செய்யாநின்ற பிரகாசரூபமான அந்த வித்யாதத்வத்தாலே இந்திரியாதி சர்வ காரகங்களாலு மறியத்தகும் விஷயத்தை யாத்மா அறிகின்றான். (௧0)

[illegible] ௧௧

அவ் வித்யாதத்வத்தா லபிவியக்தமான சைதன்ய சத்தியுள்ள ஆத்மா வானவன் விஷயத்தை யறிந்தபோதிலும் அபிலாஷையின்றி போகத்திற் பிரவர்த்திக்க மாட்டா னாதலாற் பிரபுவாகிய வனந்தேஸ்வரர் அந்த அபிலாஷையை யுண்டாக்கும் ராகதத்வத்தை யந்தக் கலாதத்வத்தி லிருந்தே யுண்டாக்கினார். (௧௧)

[illegible] கஎ

அவ்விராகத்தா லபிலாஷையைக்கொண்ட வாத்மாவானவன் அசுத்தமாயிருந்தபோதிலும் போக்யத்தை விரும்பிக்கொண்டு புசிக்கிறான். புசிக்கும்போது வைராக்ய மடைகிறதுமில்லை. (கஎ)

[illegible] கஅ

இவ்வாறாத்மாவானவன் தேகங்களோடுகூடிய பூததன்மாத்திரைகளையாச்ரயமாகக் கொண்ட விந்திரியாதி கருவிகளுடன்கூடி போகத்திற் பிரவர்த்தித்த போதிலும் போகபூமிகளிற் போகங்கள் காலத்தை யனுசரித்திருக்கின்றபடியால் காலமின்றி போகங்களைப் புசிக்கிறதில்லை. (கஅ)

[illegible] ககூ

தொடிக்ஷணம் நாழிகை என்பது முதலான விவகார ஞானத்திற்கு நிமித்தமான காலமென்னு மோர் தத்வம் மாயையிலிருந் துண்டாய் நியதிதத்வத்தாலே தானுதித்தகாலந் துவக்கிச் சங்காரகாலம் வரையில் நியமித் தடக்கப்பட்ட பசுவாகிய வாத்மாவைப் போகத்தி ற் பிரவர்த்திக்கச் செய்கையால் காலமென்னும் பெயர் பெற் றிருக்கின்றது. (௧௪)

சங்கை.

[illegible]
[illegible]
[illegible] ௧௫

போக்தாவான வாத்மாவிற்கு அவஶ்யமான போகமும் அதன் சாமக்கிரியையும் கன்மாதீன மாதலாற் கன்மமென்ப தவச்யம் வேண்டியிருப்பதா லதுவே போக்யமனைத்தையுஞ் செய்யட்டுமே, அதற்காக நியதி யென்னு மற்றுமொரு தத்துவ மொப்புக்கொ ள்வானேனென்கிறார்கள். (௧௫)

உத்தரம்.

[illegible]
[illegible]
[illegible] ௧௬

அப்போது சகல தத்வங்களும் போகத்திற் குப யோகப்படுவது கன்மாதீனமே யாதலாற் கன்மமொன்

றே போதும், மற்றவை யொன்றும் வேண்டாம்; அவ்வாறுகிற் சரீரேந்திரியாதிக ளெல்லாம் வியர்த்தமாக வேண்டி வரும். (கசு)

[illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ கஎ

சரீராதிகளை யபேக்ஷித்தே யந்தக் கன்மமானது புருஷார்த்தத்தைச் சாதிக்கு மென்னில்? அப்போது நியதியையு மவச்ய மபேக்ஷிக்கும் நியதியே கன்மநியாமகமா யிருக்கவேண்டும். (கஎ)

[illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ கஅ

புருடனென்னும் ஞானத்திற்கு நிமித்தமாகிய புருஷதத்துவமானது அம் மாயையிலிருந்தே யுண்டாயிற்று. அது பிரதானமுதலான தத்வங்களை யெல்லாம் வியாபித்துக்கொண்டு புவனமார்க்கத்தில் வாமதேவாதி ருத்திரர்களுக் கிடமாகவிருக்கும். (கஅ)

[illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ கசு

புருடதத்வ முண்டான பின்பு தன்மாத்திரையைந்து, மகத்து அகங்கார மிரண்டு, இவ்வேழிற்கு மாதாரமான

குணதத்வத்திற் குபாதான காரணமாகிய அவ்யக்த தத்வத்தை கலாதத்வத்திலிருந் துண்டாக்கினார். (௧௯)

[illegible] ‖ ௨௰

அவ் வவ்யக்தத்திலிருந்து புத்திக் குபாதானகாரணமாகிய சத்வம் ராஜஸ தமஸ என்னு மூக்குண ரூபமான குணதத்வத்தை யுண்டாக்கினார். அம் மூக்குணங்களின் செய்கை பிரகாசம் பிரவிர்த்தி நியமம் என்பவை பிரசித்தங்களே. (௨௰)

[illegible] ‖ ௨௧

குணங்கள் மூன்றாயிருந்தபோதிலும் அவை பிரியாமலிருப்பதால் குணதத்வமொன்றே! ஆனாற் சாத்விக ராஜஸ தாமஸம் என்று குணங்களைத் தனித்தனியாகச் சொல்வது அவ்வக் குணங்களின் செய்கை மிகுதியாலெனவறிக. (௨௧)

[illegible] ‖ ௨௨

மூக் குணங்களால் வியாபிக்கப்படாமலும் கலந்து ஒரு குணமாவ தில்லாமலும் யாதொரு ஜடபதார்த்த மு மிவ்வுலகத்தி லில்லை. (உஉ)

[illegible]
[illegible]
[illegible] ॥ உங

அந்தக் குணதத்வத்திலிருந்து மேற்சொல்லும் பாவப் பிரத்யயங்களைக் குமியாகக்கொண்ட புத்தி தத்வத்தை யுண்டாக்கிறார். அந்தப் புத்தி தத்வமானது மேற்சொல்லும் விஷயங்களோடுகூடி ஆத்மாவிற்குநேரிட போக்யமாகும். (உங)

[illegible]
[illegible]
[illegible] ॥ உச

பாவங்களாவன? புத்தியின் குணங்கள். அவை யாவன? தருமம் ஞானம் வைராக்யம் ஐஶ்வரியம் இந் நான்கும் சாத்விகங்கள். அதருமம் அஞ்ஞானம் அனை ஶ்வரியம் இம்மூன்றும் தாமசங்கள். அவைராக்கியம் இவ்வொன்றும் ராஜசம் ஆ—அ. (உச)

[illegible]
[illegible]
[illegible] ॥ உரு

பிரத்யயங்களாவன? அந்தத் தருமாதிகளா லுண்டான சித்தி முதலானவை தனித்தனி வர்க்கமாக—அ-௬-உஅ-ரு-அ௲-௫0 - விதமாக ப்ரசித்தமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. (உரு)

பாவாதிகட்கு லக்ஷணம் வருமாறு:—

ஸாம்ஸித்₃தி₄கா வைநயிகா: ப்ராக்ருதா

ஶ்ச ப₄வந்த்யமீ: | உருஉ

இந்தப் பாவங்கள் சம்சாரியான வாத்மாவிற்குச் சாம்சித்திகங்கள் வைனயிகங்கள் பிராகிருதங்கள் என மூன்றுவிதமா யிருக்கும். (உருா)

அவையாவன?—

விஶிஷ்டயத்ந ஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருத

சேதஸாம் | கு₃ணஸ்ஸாம்ஸித்₃தி₄கோ ஜ்ஞாந

தே₃ஹாந்தரேபி தீ₃பவத் || உகூஉ

சிறந்த கோயில் குள முதலானவை செய்வித்த தருமவாசனையால் நின்மலமான சித்தமுள்ளவர்கட்குத் தேகநீங்கின பின்பும் முன்போலவே பிரகாசிக்கும் குணம் சாம்சித்திக மென்னப்படும். (உகூா)

லோகயுக்தி கு₃ருஶாஸ்த்ரேப்₄யோ ஜா

தோ வைநயிகோ கு₃ண: | ஸாம்ஸித்₃தி₄கா

வைநயிகோ ஜ்ஞாநாத்₃யா: ஸ்வபா₄வஜா: || உஎஉ

லோகத்தார் புத்தியாலும் குருமுகத்தாலும் சாஸ்திரத்தாலும் பிரகாசிக்குங்குணம் வைநயிக மெனப்

படும். அது, மநோ வாக்குக் காயங்களின் வியாபாரங்களால் வருவது. (௨எ)

𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍋 𑌦𑍇𑌹𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 [illegible]

𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌦𑌿𑌵𑌦𑌯𑌵𑌤𑌃 । ௨அ

ஸ்வப்ந முதலானவற்றைப்போல் தேகமிருக்கும்போது மாத்திரம் தோற்றிக்கொண்டு அப்பால் தோற்றுமலிருக்குங்குணம் பிராகிருத மென்னப்படும். (௨அ)

அவைகளின்பயன் வருமாறு:—

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑍌 [illegible]

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] ॥ ௨௯

வைநயிகப் பிராகிருத தருமாதி குணங்களால்வரும் பயன்களாவன? தருமத்தால் ஸ்வர்க்கமும் ஞானத்தால் முத்தியும் வைராக்யத்தாற் பிரகிருதி லயமும் ஐஸ்வரியத்தால் தடையில்லாமையும் அதருமத்தால் திரியக்கு முதலான யோநிப்பிராப்தியும் அஞ்ஞானத்தால் நரகமும் அவைராக்யத்தால் பந்தமும் அநைஸ்வரியத்தால் தடையு முண்டாகின்றன. (௨௯)

[illegible]

ஸோமாத்ஸ்யாவிர்ப்பவாத்யபாய: | ஸோ
மாஸக்தி ந்ருக்ப்ரஸித்தி ஸ்வைஸ்யமதி விப்ரபா
ஸ்யா ஸ்வஷ்டு ஸாம்ஸித்திகஷ்டு || ௩0

சாம்சித்திக தருமாதி குணங்களால் வரும் பயன்களாவன? தருமத்தால் தேவதா வசீகரணமும் ஞானத்தால் அவ்விஷயஞானயோகமும் வைராக்யத்தால் போகத்தி லிச்சையில்லாமையும் ஐஸ்வரியத்தால் விக்நங்களின் நீக்கமும் அதருமத்தால் போகத்தி லிச்சையும் அஞ்ஞானத்தால் தாழ்வும் அவைராக்யத்தால் தேகப்பிராப்தியும் அநைஸ்வரியத்தால் விக்நமு முண்டாகின்றன.

பத்தாவது,

கலாதி (காரிய நிரூபண) ப்ரகரணம்

முற்றிற்று.

ஆப்லோகம்—கஅ௩0.

சிவமயம்.

கக—வது, பிரத்யயாதி ப்ரகரணம்.

அஸுவிஜ்ஞாநாம் வர்ணாநாம் ஸேவ்யாஸ்
ஸாமாந்யலக்ஷணம் | ஸம்க்ஷிப்தே விஸ்தரேண
மாஸம்ஸ் ஸமாஸோக்தே: ப்ரவக்ஷ்யாம: || க

இனி, சித்தி துஷ்டி அசக்தி விபர்யயம் என்னு நான்கு பிரத்யய வர்க்கங்களையும் முன் சுருக்கமாகத் தொகையாகக் கூறியபடியால் நன்றாகத் தெரியும்பொருட்டு விரிவாய் அவைகளின் பொதுவிலக்கணஞ் சிறிது சொல்லப்படுகிறது. (க)

பும்ஸ்வ்யக்தவ்யக்தவிஷயா புத்திர்
ஸித்திருக்தா | துஷ்டிரலப்தார்த்தஸ்யாபி
ஸ்வக்ருதார்த்தஸ்யாத்மந: ப்ரதீதி: || உ

புருடன் அவ்யக்தம் வியக்தம் இவைகளின் விஷயமாகத் தோற்றும் புத்தியானது, சித்தியென்றிவ்விடத்திற் சொல்லப்படும். தான் பயன்பெறுமை யிருக்கையிலும் பெற்றதாக ஆத்மாவிற்குத் தோற்றும்புத்தி துஷ்டியென்னப்படும். (உ)

அஶக்தி: காரணாபாயே ஸத்யபி ப்ர
ஹவிஷ்ணுதா | ஜ்ஞாநஸ் ஸமாந்யேதாந்த்
மஜ்ஞாந்யா விபர்யய: || ங

அந்தக்கரண பஹிஷ்கரணங்க ளில்லாவிடில் விஷய மிருக்கையிலுங் கண்டறியாமை அசக்தியென்னப்படும். சிறிது பொதுவான தருமத்தைக்கொண்டு வேறொன்றை வேறொன்றாக அறிவது விபர்யய மென்னப்படும்.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑌯𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵
𑌭𑌾𑌵𑌜𑌾 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌰
𑌜𑍋𑌂𑌶𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌪𑌿 𑌚 ॥ ௪

அவற்றுள் சித்தியானது விடக்கரூதலானவற்றைப் பிரகாசிப்பிக்கையால் பிரகாசமான சத்வரூபமாகவும் பிரகாசார்த்தத்திற் பிரவர்த்திக்கிறபடியால் பிரவர்த்திரூபமான ரஜோம்சமாகவு மிருக்கும். (௪)

𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌮𑍃𑌷𑌾𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌮𑍋
𑌗𑍁𑌣𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌨𑌾 । 𑌸𑍁𑌖𑌰𑍂𑌪𑌤𑌯𑌾
𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀𑌤𑍍𑌯𑌵𑌸𑍀𑌯𑌤𑍇 ॥ ௫

துஷ்டியென்பது பொய்யாகையால் தாமசமாகவும் சுகரூபமாகத் தோற்றுவதால் சாத்விகமாகவு மென்னப்படும். (௫)

𑌅𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑍀 𑌦𑍁𑌃𑌖
𑌭𑌾𑌵𑌤𑌃 । 𑌰𑌾𑌜𑌸𑍍𑌯𑌪𑌿 𑌗𑍁𑌣𑌾𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌃
𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌕𑌾𑌰𑌣𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ॥ ௬

அசக்தியென்பது விஷயப் பிரவர்த்தி யில்லாமையால் தாமசமாகவும், துக்கமாவதால் ராஜஸமாகவும்

சொல்லப்படும். காரணத்தின் குணங் காரியத்தில் தோற்றுமாதலால் ரஜசின் குணமாகிய துக்கம் அசக்தியில் தோற்றுவதால் ராஜசமென்றுஞ் சொல்லவேண்டும். சு

विपर्ययस्तमोयोनिर्दुःखान्त
प्रत्ययः स च । सामान्यात्तु प्रकाशा
त्मा सात्त्विकः इति विनिश्चितः ॥ ७

விபர்யயமென்பது பொய்யுருவமாகையால் தாமசமென்னப்படும். பின்னும் பொதுப்பட பிரகாசரூபமாகையாற் சாத்விகமென்று நிச்சயிக்கப்படும். (எ)

इति भेदी प्रकाशोऽयं भावप्रत्य
यलक्षणः । बोध इत्युच्यते
बोधवृत्तिसंज्ञितयापरः ॥ ८

இந்தப் பிரகாரஞ் சொல்லப்பட்ட பாவப் பிரத்யய ரூபமான புத்தியின் பிரகாசமானது சம்சாரியானவாத்மாவிற்கு அறிவுதோற்று மிடமாகையாற் போதமென்று சொல்லப்படும். (அ)

காபிலமதத்தை யனுசரித்துச் சங்கை.

बुद्धिर्बोधाय निमित्तं चेद्विद्या त
त्र किमिष्यते । नामोहि सत्त्वे
नाम्ना कलायोनिः कलेति चेत् ॥ ९

சொல்லியவழியாய்ப் புத்தியே போதத்திற்கு நிமித்தமாகுமேயாகில் அப்போது வித்யாதத்வமும் போ

தநிமித்தமாதலா லது மிகையாகவேண்டும். பின்னும் புத்தியின் தருமமாகிய அவைராக்யமென்னும் பாவமே அபிலாஷையைத் தரும்போது கலாதத்வத்தி லுதித்த ராகதத்வ மென்ன செய்யவேண்டும்.　　　(௯)

இதற்குத்தரம்.

வ்யஞ்ஜகாந்தர ஸத்த்வேபி வ்யஞ்ஜகத்வம் யதி³ த்⁴ய:
போ³த⁴ஸ்ய து | இந்த்³ரியாணாம் ஸத்த்வே
ஸத்³தி⁴யோ வ்யஞ்ஜகதா ||　　　௧0

போத வியஞ்சகமாகிய புத்திதத்வத்தால் வித்யாதத்வம் வியர்த்தமென்று சொல்லில்? அப்போதுன் மதத்திலும் மனதோடுகூடிய இந்திரியங்களாலேயே போத முண்டாகும்போது புத்தி வியர்த்தமாகவேண்டும். ஒரு காரியத்திற்கு வியஞ்சகங்களான பதார்த்தங்களில் ஒன்றொன்றை வேண்டாமென்னில்? எங்குமிப்படி வருமாதலால்.　　　(௧0)

அந்யே த்வேவம் ஶ்ருதவதே கேசித் காரண
ஸ்வ விவக்ஷயா | போ³தே⁴பி வித்³யாக்ஷ
பக்ஷே தஸ்மிந் காஞ்சித் ஸம்ப்ரதாய: ||　௧௧

சிலர் புத்தியை வியஞ்சகமென்னாமல் கரணமென்று சொல்லி வித்தையும் போதகரணமென்று சொல்லப்பட் டிருக்கையால் புத்தியாகிய கரணத்தால் வித்தையாகிய கரணம் வியர்த்தமாகு மென்கிறார்கள். அந்

தப்பக்ஷத்திலும் இந்திரியங்களாகிய கரணங்களாற் போத முண்டாகும்போது மனதாகிய கரண மென்னத்திற் கென்று மாக்ஷேப மிப்படியேவரும்.

ஆகையாற் சுரோத்திராதி பஞ்சேந்திரியங்க ளிரு க்கையிலும் மனதும் வேண்டியிருப்பதுபோல் புத்தி தத்வ மிருக்கையிலும் வித்தியாதத்வமும் வேண்டுமெ ன்பதற்கு யாதொரு குற்றமுமில்லை. (௧௧)

[illegible]

[illegible] ௧௨

மேலும் ஒருகாரியவிஷயத்தி லிரண்டுவஸ் துப யோகப்படும்போது ஒன்று மிகையென்று சொல்லில்? அப்போது புருடனுக்கு போக்யார்த்தத்தைச் சாதிக்கு ம்விஷயத்தில் காது கண் கை கால் இவைமுதலானவை வெவ்வேறு அர்த்தத்தைச் சாதிக்கிறதாகவேண்டி வ ரும். சப்தாதிவிஷயம் வெவ்வேறுதானே யெனில்? அ வைகளாற் புருஷனுக்கு வரும்போக மொன்றுதானா லென்றது. (௧௨)

[illegible]

[illegible] ௧௩

மேலு மவ்வாறிக்க வித்தை புத்தி தத்வங்கள் ஒ

ருவிஷயத்தி லுபயோகிக்கவில்லை. அதற்கு வெவ்வே றுபயோகமிருக்கும்போது அநேக சாதனங்களால் ஒருகாரியஞ் சாதிப்பதில் குற்றமில்லை. (கஉ)

அஃதெங்ஙனமென்னில் ;—

[illegible]

[illegible] ॥ கஉ

[illegible] கசஙஉ

அணுவினது சிற்சக்தியை வியக்தமாக்குவதே வித்தையின்காரியம், பின்புபிரேரிக்கப்பட்ட இந்திரிய விஷயங்களைத் தனதாக்கிக்கொண்டு புத்தியானது புருஷனோடுகூடிய காரணமாகிய வித்தையாற் கிரகிக்கப்படுகின்றது? ஆகையால் வித்தையைவிட புத்தி வேறேயாக வேண்டும். (கச—கசஙஉ)

இதுவரையிற் புத்திக்கும் வித்தைக்கும் பேதத்தைச்சாதித்து, இனி அவைராக்யமென்னும் புத்திதருமத்திற்கும் ராகதத்வத்திற்கும் பேதஞ்சாதிக்கின்றார்.

[illegible] ।

[illegible]

[illegible] ॥ கரு

அபிலாஷையையுண்டாக்கும் ராகதத்வமானது புத்திதருமமான அவைராக்ய மாகமாட்டாது, தன்மைவேறுபட்டிருப்பதால். அதாவது புஷ்பசந்தன ஸ்திரீரூப

மான போக்யமாயிருக்கை அவைராக்யம். அதற்குபோ
ஜகமா யபிலாஷையைக்கொடுப்பது ராகதத்வம். ஆகை
யால் அவைராக்யம் பாஹ்யவிஷயாகாரமா யிருக்கிறது,
ராகதத்வம் ஆந்தரமா யாத்மாவி லிருக்கிறது. அதுவு
மிதுவென்னில் விஷயமிருக்கும்போது ராக மவச்ய மி
ருக்கவேண்டும். அப்போது வீதராகனென்னும் ராகமி
ல்லாத புருஷனே யில்லாமற்போகவேண்டிவரும்; ஆ
கையால் வேறே. (கரு)

[illegible]
[illegible] கரு௨

சிருக் சந்தனாதி விஷயங்களி லபிலாஷை ஹேதுவா
ன ராகமென்பது புத்திதருமமான அவைராக்யமாகவும்
பாஹ்யவிஷயமான சந்தனாதியாகவு மாகமாட்டாது. பு
த்திதருமமானால் போக்ய மாகும், விஷயாகாரமானால்
பாஹ்யமாய் ராகமில்லாதவனேயில்லாமற் போகவேண்
டிவரும்; ஆதலால். (கரு௨)

[illegible]
[illegible] கரு௩

ராகதத்வ மேற்பட்டிருக்கையிலும் கன்மமானது
போகாதி விசேஷத்திற்காக ஒப்புக்கொள்ள வேண்டிய
தா யிருப்பதா லந்தக் கன்மமே அபிலாஷை ஹேதுவாக
ட்டுமே, ராக மேகிற்கென்னில்? (கரு௩)

[illegible]
[illegible] கரு௪

கன்மமானது தனித்தொரு காரியசாதகமாகமாட்டாதென்று நியதி தத்வஞ் சாதிக்கும்போதே சொல்லியாயிற்று. ஆகையாற் கன்மமானது தநு கரணாதிகளை வேறுவேறு விசித்ரமாக்க மாத்திரம் ஏதுவே யல்லது ராககாரியமான அபிலாஷையை யுண்டாக்க மாட்டாது. ஆகையா லபிலாஷை ஏதுவாக்க லானன்யமான ராக தத்வ மவச்ய மொப்புக்கொள்ளவேண்டும். (கசா௨)

ஆனால் ராகத்தைப்போல த்வேஷமும் வேறுதத்வ மாகட்டுமென்னில் அவ்வாறன்று. ராகத்தால் விரும்பப்பட்ட ஒருவஸ்து தடைபட்டால் த்வேஷமுதலானவை யுண்டாவதால் த்வேஷமென்பது ராகத்தால் வந்த பிரவர்த்தி விசேஷமே, வேறுதத்வ மல்ல; ராகமுந் த்வேஷமு மொன்றுக்கொன்று விரோதியாகையால் ஒரு புருஷனிடத்திற் கூடியிருப்பது கூடாதென்னில்.

𑌦𑍍𑌵𑍇𑌷 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌨 𑌰𑌾𑌗𑌸𑍍𑌯
𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑍋𑌃 । கஎ

ராகமுந் த்வேஷமு மொரேகாலத்தி லுண்டாகிறதில்லை யாதலால் ஓரிடத்தி லிருப்பது குற்றமில்லை.

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌕𑍍
𑌤𑌿𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑍍𑌯𑌜𑌾 । 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍
𑌵𑌸𑍍𑌯 𑌶𑍋𑌷𑌾 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑌾𑌯
𑌤𑍇 ॥ கஅ

ஏனெனில்? எல்லோருக்கு மெப்போது முண்டா கும் விஷயப் பிரவர்த்தியெல்லாம் சுகமென்கிற புத்தி யாலேயே யுண்டாகிறது. பிரவர்த்தித்த பின்பு காலகன் மாநுகுணமாகச் சுகமாவது துக்கமாவது மோகமாவது உண்டாகிறது. (கஅ)

ப்ரவ்ருத்தே ரஞ்ஜநம் த்வேஷோ ராகஸ்ய
ஸ ப்ரதிபக்ஷஜ꞉ | த்வேஷாபாயே ப்ர
வ்ருத்தஸ்ய வீர்யவத் ப்ரகாரணம் ||ககூ

பிரவர்த்தித்த பின்பு த்வேஷ முண்டாகிறது. முன்னமே ராக முண்டாயிருக்கிறது. த்வேஷம் போனவுடனே மீட்டும் ராகமுண்டாகிறது. இவ்விரண்டி லெது வலியதோ வது தோற்றுகிறது. ஆகையா லோரிடத்தி லிருப்பது குற்றமென்பது கூடாது. (ககூ)

இதுவரையிற் பிரசங்க சங்கதியால் ராகதத்வத்திற் குபபத்தி கூறி, இனிப் பிரகிருதமான ஆங்கார தத்வத்தைக் கூறுகின்றார்.

ஸம்வேத்ருஜ்ஞாநாத் ஸம்ரம்பவ்ருத்தே
ரஹங்கரணம் விது꞉ | வ்யாபாரா ரூட்யா
ஸந்தி ப்ராணா꞉ பஞ்சவாயவ꞉ || உ0

புத்திதத்வத்தி லிருந்து சேதனனுக்கு முயற்சி யுண்டாகக் கருவியான ஆங்காரமென்னுந் தத்வ முண்டாகின்றது. அவ் வாங்கார தத்வத்தின் வியாபாரத்

னாற் சரீரத்தி லுண்டான பிராணாதி யைந்துவாயுக்களு
மசைகின்றன. (௨௦)

அந்தப்பிராணாதி வாயுக்களாவன?—

[illegible] ॥ ௨௧

பிராணன் அபானன் வியானன் உதானன் சமான
ன் என்று வியாபாரபேதங்களாலைந்துவித மாகிறது.
அந்த வியாபாரத்தைச் சிறிது சுருக்கமாகச் சொல்லு
கிறேன்; கேளும் பாரத்வாஜ மஹாருஷியே! (௨௧)

[illegible] ॥ ௨௨

[illegible] ॥ ௨௩

அவற்றுள் பிராணவாயுவின் வியாபாரமாவது, இ
ருதயத்திலிருக்கும் வாயுவை வெளியில் துவாதசாந்த
ம் வரையிற் கொண்டுபோகுதல் ஜீவித்தல் புருடன் ஆ
லோசிக்கும்போது குருடுபோல புத்தி தேடுதல் சரீர
பலம் சைதன்யத்திலும் கலாதி க்ஷித்யந்த தத்வசரீரத்
திலும் பலரூப சத்தியிலும் சூரியகலை சந்திரகலைகளி

லும் வர்த்திப்பித்தல். இவை பிராணவாயுவின் வியா
பாரம். (௨௨—௨௩)

ததா(அ)ந்நபாநஹ்ருத் நீதவிண்மூத்ர-
ரேதஸாம் | குர்வந்நபாநஸம்ஜ்ஞேந ஶீ
யதே தத்த்வதர்ஶிபி: || ௨௪

புசித்ததினுடையவும் குடித்ததினுடையவும் வி
காரமாகிய விஷ்டை மூத்திரம் சுக்லம் இவைகளைக் கீ
ழேதள்ளுதல் அபானவாயுவின் வியாபாரம். (௨௪)

ஸமந்தாத் அந்நபாநஸ்ய ஸமத்வேந
ஸமர்பணாத் | குர்வந்து ஸமாந இத்யு-
க்தோ வ்யாநோ விநமநாத்ததா: || ௨௫

அன்னபானங்களை நான்கு பக்கத்திலும் சரிப்படு
த்தல் சமானவாயுவின் வியாபாரம். சரீரத்தைச் சந்தி
களில் வணங்கும்படிச் செய்தல் வ்யானவாயுவின் வியா
பாரம். (௨௫)

விவக்ஷா யத்நவேந கோஷ்ட-
வ்ருத்தி ஸ்வரவ்யஞ்ஜந: | வாக்யஞ்ச ஸ
ஹாயேந க்ரியதே யேந வணுதா || ௨௬

ஸமீரண ப்ரீணநஸ்து ஸ்தாநம் யஸ்ய
ஸ்யாநநே | ஜபம் ஹோமம் வாக்யஸ்ய
ஷட் வக்த்ர ஸந்தாநநேந ரம்ஹிதம் || ௨௭

ஹ்ருதயாகாசத்தி லுண்டாகிய வோசையை வசனிக்கவேண்டுமென்னு முயற்சியை முன்னிட்டு வாக்கு இந்த்ரியத்தோடு கூடி அக்ஷரரூபமாகச் செய்தல் உதானவாயுவின் வியாபாரம்.

இந்தப் பிராணாதி வாயுக்களின் ஸ்தானமும் தாரணத்தில் இவைகளின் ஜயமும் பயனும் மற்றுஞ் சொல்லவேண்டிய விசேஷமும் வேறுபாகத்தில் யோகயாதத்திற் சிவனாலே சொல்லப்பட் டிருக்கிறது.

(உக—உஎ)


பதினோராவது, பிரத்தியயாதி ப்ரகணம்

முற்றிற்று.

அ்லாஸ்லோகம் - உகஉ௦.

சிவமயம்.

கஉ—வது இந்த்ரியாதி ப்ரகரணம்.



அதேஷாமநந்தாதி விஜ்ஞாநாம் ஸுநாத-
ஸ்வார்த்த ஸம்பந்: । த்ரிதைஸ்மிந் அஹங்காரே
ஸத்வாதி ஸம்யதிஷ்டாத் ஸமுத்த்ருத: ॥ க

இனி இந்திரிய தன்மாத்திரை முதலானவற்றை யுண்டாக்கும்பொருட்டு மாயாகர்ப்பாதிகாரிகளான அனந்தாதி யீசர்களை யதிஷ்டித்த பதியானவர்; சத்வாதி முக்குணங்கள் மிகுந்த இவ்வகங்காரத்தின் முக்கூட்டங்களை யிதிலிருந்தே பிரித்தேற்படுத்தினர். (க)

அவை யாவையெனின் ?—

தைஜஸோ வைக்ருதோ யோ
ந்யோ பூதாதிரிதி ஸம்ஸ்தித: । தே
ப்யோ ஜ்ஞாநேந்த்ரியாணி கர்மேந்த்ரியாணி பூத
தந்மாத்ராணி ॥ உ

தைஜஸம் வைகாரிகம் பூதாதி என மூன்றுகணங்கள். அவற்றிலிருந்து ஞானேந்திரிய கன்மேந்திரிய தன்மாத்திரைகளுண்டாயின. தன்மாத்திரைகளிலிருந்து ஐந்துபூதங்களு முண்டாயின. (உ)

ஶ்ரோத்ரம் த்வக்சக்ஷுஷீ ஜிஹ்வா நா
ஸா ச ஜ்ஞாநஸஂஜ்ஞகா:| ப்ரகாஶாத்வாத் ஸத்த்வ
கார்யா தைஜஸஸ்ய ஸாத்த்விகா: || ௩

ஶ்ரோத்ரம் த்வக்கு நேத்ரம் ஜிஹ்வை நாசிகை இவ்வைந்து ஞானேந்திரியங்களும் மனதும் பிரகாச ரூபமாகையாற் சாத்விகங்கள். இவற்றிற்குக் காரணமாகிய வாங்காரமுஞ் சாத்விகமே! அதற்குத் தைஜஸமென்று பெயர். (௩)

வாணீ பாணீ பத: பாயு: பாயூ
பஸ்தமிதி கர்மாக்யா:| கர்த்ருத்வாத் ராஜ
ஸாஸ்தாஸ்து வைகாரிகோத்பவா: || ௪

வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தம் இவ்வைந்து கன்மேந்திரியங்களும் செய்கையுள்ளவைகளாகையால் ராஜஸங்கள். இவற்றிற்குக் காரணமாகிய வாங்காரமும் ராஜஸமே! அதற்கு வைகாரிகமென்று பெயர். (௪)

ஶப்த ஸ்பர்ஶ ரூப ரஸ கந்தாக்ய
பஞ்சகா: | தந்மாத்ரா விஶிஷ்டாஸ்தந்மாத்ரா
ஸ்தந்மாத்ர பஞ்சயோஜிதா: || ௫

ப்ரகாஶ கர்த்ருத்வ ஶூந்ய வைலக்ஷண்யா
த்தாமஸா: | ப்ரகாஶ்யத்வாச்ச ஶப்தாதி
ரஹங்காரோऽபி தாமஸ: || ௬

சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவ்வைந்தும் தத்தங் குணவிசேடங்களைக் காட்டாமற் சூக்குமங்களாய்ப் பூதப் பிரகிருதியாக மாத்திர மிருப்பதால் தன்மாத்திரையென்னும் பெயருடையன. இவை பிரகாசரூப ஞானேந்திரியங்களையும் செய்கையுள்ள கன்மேந்திரியங்களையும் விட வேறாய்ப் பிரகாசிக்கப்படுவதா யிருப்பதால் தாமசங்கள். இவற்றிற்குக் காரணமாகிய வாங்காரமுந் தாமசமே; அதற்குப் பூதாதியென்றுபெயர். (ரு-சு)

தச்ச ப்ரவர்த்தகம் ஶீக்ரசாரிஸங்கல்ப
தர்மி ச। ஶப்தாதி விஷய க்ராஹகா
ஶ்ரவணாதய: ॥ ௭

ஸ்ரோத்ராதி யிந்திரியங்களை விஷயத்திற் பிரவர்த்திக்கச் செய்துகொண்டு சீக்ர சஞ்சாரியாய்ச் சங்கற்பமென்னும் நினைப்பைக் குணமாகக் கொண்டிருப்பது மனது. சுரோத்ர முதலான யிந்திரியங்கள் சப்தாதி விஷயங்களைக் கிரகிக்கும். (எ)

வசநாதாநஸம்ஹார விஸர்காநந்த
க்ரியா: । வாகாதீநாம் பஞ்சகம் ச
தேஷாம் பஞ்சத்வகர்மணா: ॥ ௮

வசனித்தல் எடுத்தல் நடை மலவிசர்க்கம் ஆனந்தம் இவை வாக்குமுதலான கன்மேந்திரியங்களின் தொழில்கள். இந்த ஞானேந்திரிய கன்மேந்திரியங்களெல்லாம் தத்த மாதாரமான விடங்களைவிட வேறாக விருக்

கின்றன. ஏனெனில் அவ்விடங்க ளிருக்கையிலும் புருடர்கட் கவ்விந்திரிய சத்தி யில்லாதபோது அவ்வவ்விஷயப் பிரவர்த்தி யில்லாததினாலே. (௮)

[illegible] ॥ ௯

ஆத்மாவிற்கு மிந்திரியார்த்தங்களுக்கு மெப்போதுஞ் சேர்க்கை யிருக்கையிலும் விஷயப் பிரவர்த்தி யெப்போது மில்லாமல் ஒவ்வோர்கால் வருகிறபடியால் அந்தப் பிரவர்த்திக்குச் சாதகமாய் மனதுண்டென்று யுக்தியாலும் நிச்சயிக்கப்படுகிறது. (௯)

[illegible] ॥ ௧0

கலைமுதலான மற்றத் தத்வங்களின் வியாபாரங்களை விடச் சங்கற்பமென்னும் வியாபாரம் வேறுபட்டிருப்பதால் இதற்குக் காரண மொன்றுண்டென் றேற்படுகிறது. அது மற்றவற்றால் முடியாததினாலே பாரிசேஷாநுமானத்தால் மனதென்று நிச்சயிக்கப் படுகிறது. (௧0)

[illegible]

[illegible]

[illegible] ௧௧

அந்த மனதிற்கு மிந்திரியங்கட்கு முண்டாகிய சம்யோகத்தாலே சப்தாதி ஞானமுண்டாகிறது. அதுவும் கிரமமாய்ச் சேருகிறபடியாற் கிரமமாகவே யுண்டாகும். ஒருக்கா லுண்டாவதுபோலத் தோற்றுவது மனதின் சீக்கிர வேகத்தா லல்லது வேறில்லை. (௧௧)

இந்திரியங்கள் பூதங்களி லுண்டாகின்றன, ஆங்காரத்தி லல்லவென்று சொல்லும் வாதியை யநுசரித்து ஆக்ஷேபிக்கிறார்,

[illegible]

[illegible]

[illegible] ௧௨

ஶ்ரோத்ராதி யிந்திரியங்கள் தனித்தனியே ஒவ்வோர் விஷயங்களைக் கிரகிப்பதால் வெவ்வேறு காரணங்களிலிருந் துண்டானவைகளாகச் சொல்லவேண்டுமென்றும், கந்தமுதலான குணங்களைத் தோற்றுவிக்கிறபடியால் அவைகட் காதாரமான பிருதிவியாதி பூதமயமாகுமென்றும் ஒருவாதி சொல்கின்றான். (௧௨)

இதற்குத்தரம்.

[illegible]

[illegible]

[illegible] ௧௩

தெஜொவாஸி ஜஹீக்ஷா வம் ஜூமாக

தெ ஸாலவகூ| தக்ஷிக்ஷா வ்ஜாஸா

ஸ்ரா ஞவரெ ணஷெதெ தயா || ௧௪

இந்திரியங்கள் தன்காரணமான பூதந்தவிர மற்றொரு பூதத்தைக் குணத்துடன் கிரகிக்காமலிருக்குமாயின் அது சரியாகும்; அவ்வாறில்லையே. ஏனென்னில் த்வக் கிந்திரியம் பரிசத்துடன் பிருதிவி முதலான நான்கு பூதங்களையுங் கிரகிக்கிறது. நேத்திரம் ரூபத்துடன் மூன்று பூதங்களையுங் கிரகிக்கிறது. அப்போது மூன்று திரவியத்திலிருந்து நேத்திர முண்டானதாகச் சொல்லவேண்டும். அவ்வாறங்கவாதியே ஒப்புக்கொள்ளவில்லை.　　(௧௩ - ௧௪)

யெநாவஹெ தெயொஷ ஸத

ஸாஷ ஸாகாணூ| நஸாஹெ ஜவி

கூஜாதி ஸெயவெ ஸநஸஞதி || ௧௫

பின்னும் எப் பூதத்திலிருந்து எவ் விந்திரிய முண்டாயிற்றோ அவ் விந்திரிய மப் பூதத்தைக் கிரகிக்குமென்னில்? அப்போது அப் பூதங்களின் கிரியை ஜாதி சமவாய சம்பந்த முதலானவற்றை இந்திரியங்கள் கிரகிக்காமலிருக்கவேண்டும்; ஆகையா லிவ்வாறு சொல்வதில் வீணான பிரயாசமிவ்வா றுயுண்டாகிறது.

காயாநு விஸிஷ்டஂவஂ ஹவேவதாவ

ஸாவகாஶா நாஸாஸ்யா விஶிஷ்டம் கஸ்மாச்ச்ரோ
த்ரேண நிவாய்யதே ॥ ௧௬

தத்ராத்ருஷ்டாவஶாச்சேத்வா தத்ஸ்ரோத்ர
கிம் க்ருதம் । ப்ராத்தம் க்ருஹ்ணாதி நாதோதா
த்ருஶ்யம் கேந வியுஜ்யதே ॥ ௧௭

பின்னும் சரீர த்வாரத்தி லாகாசம் சப்தத்தைக் கிரகிக்கு மென்னில்? ஶ்ரோத்திர த்வாரத்தைப்போல் நாசித்வாரமும் கிரகிப்பதற்கு என்னதடை. அப்போது நாசாதித் துவாரத்திற்குச் சப்தத்தைக் கிரகிக்கும்படியான அதிருஷ்ட மில்லையெனில்? அப்போது ஆங்காரத்தி லுண்டான இந்திரியங்களும் மற்றொரு பூதாதிகளைக் கிரகிப்பதற்கு அதிருஷ்ட மில்லாததால் கிரகிக்கவில்லை யென்பதற்கு என்ன விரோதம். இதற்காக அவ்வப் பூதத்திலிருந்து வந்ததென்று ஒரு நியமஞ் சொல்வானேன். அவ்வாறொப்புக்கொள்ளாவிடில் நாசாதி த்வாரமும் சப்தத்தைக் கிரகிக்கட்டுமென்று மாக்ஷேபத்திற்கு ஒருத்தரமுமில்லை. (௧௬—௧௭)

யத்ர ஹேதுர்விஶாகாங்க்ஷா ப்ரதீதி
ஶப்தவர்த்மனா । ஜ்ஞாயதே ஜ்ஞாயதே
ஸம்ஜ்ஞாயஸ்ஸ்வஜிதி ஸம்ஶயஃ ॥ ௧௮

இவ்வாறு யுக்திசொல்லக் கூடாத விடங்களிலும் ஆப்தவாக்யமான ஆகமத்தா லறிவதற்கு யாதொரு

குற்றமுமில்லே. அற்பமான அர்த்தத்தைத் தெரிவிக்கு மநுமானுதிப் பிரமாணங்களைவிட சர்வஞ்ஞனை வீஸ்வரனுற் கூறப்பட்ட ஆகமமே மேலான பிரமாணமென்று பெரியோர் சொல்கின்ருர்கள். (கஅ)

தன்மாத்திரைகளி லிருந்து ஐந்து பூதங்களு முண்டாயிற்றென்று சொல்லியதை விசேஷித்துச் சொல்கின்ருர்.

> வெ்ராஜ ெவ்ஷஜ்நாந்ர் ்ேவ ஷுஜ
> வொ ஷுதவஞுகஃ। ஶூவாஜெ்ரா ெகா
> த்ரமஹண ஜவகாஶாஜி வர்க்திஜக॥ ககூ
>
> யஞநந ஜஹூவ்வாவ வாசவா வெஜ
> ெநாமஹணாஃ। ஶூவா வாயூாஜிஷுவெ்ரா
> ஜீ் ஷவண ெவ்திஶூமாஃ॥ உ0

ஆகாசம் வாயு தேஜசு ஜலம் ப்ருதிவி என பூதங்கள் ஐந்து. இவை சப்தமுதலாக ஒவ்வொரு குண மதிகமாகவுடையன. இடங்கொடுத்தல் முதலான வியாபாரமுள்ளன. ஒவ்வொரு குண மதிகமா யிருப்பதாவது? ஆகாசத்திற்குச் சப்தமாத்திரமும், வாயுவிற்குச் சப்தத்துடன் பரிசமும், தேஜசிற்கு அவற்றுடன் ரூபமும், ஜலத்திற்கு அவற்றுடன் ரசமும், ப்ருதிவிற்குச் சப்த பரிச ரூப ரசகந்தம் ஐந்து முண்டென் றறிக. ஆகாசத்திற் சப்தம் எதிரொலி யாகவும், வாயுவிற் சக

சலவென்று அசைவைக் காட்டுவதாயும், தேஜஸில் தமதமவென்று எரிதலைக் காட்டுவதாயும், ஜலத்திற் சலசலவென்று ஓட்டத்தைக் காட்டுவதாயும் பிருதிவியிற் கடகடவென்று கடினத்தைக் காட்டுவதாயு மிருக்கு மென் றறிக. (௧௯—௨௦)

வ்யோமாவகாஶதாநந்து வாயோஸ்ஸம்
வ்யூஹகாரணம் । பாகோவஹ்நேஸ் ஸந்
தாநமம்பஸோ தாரணீநாந்து வ்ருத்தய: ॥ ௨௧

இடங்கொடுத்தல் கும்பலாகக் கூட்டுதல் சமைத்தல் உண்டையாகச் சேர்த்தல் தரித்தல் இவை ஆகாசாதி பஞ்சபூதங்களின் வியாபாரங்க ளெனவறிக. (௨௧)

சங்கை.

ஶப்த: ஸம்பந்நவாநேவ தேஶாந்தர
வேத்யத: । ஶ்ரூயதே ஸர்வபூதேஷு
ஸ வ்யோம்நோ குண: கதம் ॥ ௨௨

சப்தமானது ஆச்ரயமான பேரிமுதலானதை விட்டு வேறிடத்திற் றோற்றுகிறபடியால் ஆகாசத்தின் குணமேயென்று சிலர் சொல்கிறபடியால் எல்லாப் பூதங்களின் குணமென்று எப்படிச்சொல்லலாம். (௨௨)

உத்தரம்.

ஸ்வாநந்த்ரம் ஶ்ரவணாகாரோ குணோநந்த்
ஸ்தகுண: । ஸம்ஸ்காரஶ்ரோத்ர
த்ருத்திலேநாஸ்த ஸமவாயிநா ॥ ௨௩

வேறிடத்தில் தோற்றுகிறதென்பது எவ்விடத்தில், சுரோத்ராகாசத்திலெனில்? ஆகாசத்தின் குணமங்கே யெவ்வாறு தோற்றலாம். அதுவு மாச்ரயமென்றே யொப்புக்கொண் டிருக்கிறபடியா லெனில்? அவ்விஷயத்தில் மனிதர்களுடைய அநுபவமே பிரமாணமாகும். ஆதாவது இம்மதத்தளத்தில் இவ்வீணையில் இப்பேரியிற் சப்த முண்டாயிற்றென்று பிரத்யக்ஷமாகத் தோற்றுமெபடியால். (உங)

ஶ்ராவிஷ ஶண-ஜ-முெஷி ஸம்விதி த்
யஜந ரெஸை। செஶ்ரா-த் வஜீ ஷஷஸாவி
வெரிணாமெஜா ஸு-ப ஶா ஞ்ஷ-தி:॥ உச

ஆனால் ஒருவேளை சுரோத்ரத்திலும் தோற்றுகிறதே யென்னில்? அவ்விடத்திலும் இந்தச் சப்தம் பரிணமித்துத் தோற்றட்டுமே! என்னவிரோதம். (உச)

ஶுஜாஷ்ராக்ஷ விஷ-த ஷெஷதமெ நா
ஶய-ஜெவராயகாஃ। காணா-த்யாவ ஷிஷே்கவா
ஷிதிந த்ராய விஷெ விஷ-ஃ॥ உரு

மேலும் பிரத்யக்ஷத்தாலு மாகமத்தாலு மடிபட்டுப்போன ஏது துஷ்டமாகையாற் காரியசாதக மாகமாட்டாதென்று நியாயந்தெரிந்தவர்கள் சொல்கின்றார்கள். ஆகமத்தில் ஐந்துபூதங்களினும் சப்தமுண்டென்ற படியாலும் பிரத்யக்ஷ மாகவும் பரிசத்தைப்போல மற்ற

நான்கு பூதங்களிலும் தோற்றுகிற படியாலும் இதற்கு விரோதமான ஹேது துஷ்டமே. (உரு)

அல்லது ஆச்ரயத்தை விட்டு வேறிடத்தில் தோற்றுகிற படியால் சப்த மாகாசத்தின் குணமேயென்று பிடிவாதமாகச் சொல்வா யானல், அப்போது,

இத்யுக்திர் தூஷிதைவாயம் ப்ரோக்தா வ்ருத்திஸ்ஸ
நஹோமாண: ॥ உரு௧

தாழைபின்பூ சண்பக முதலானவற்றின் கந்தமானது ஆச்ரயத்தை விட்டு வெகுதூரத்தில் தோற்றுகிற படியாற் கந்தமு மாகாசத்தின் குணமாகட்டுமென்று வரும். அதற்கெவ்வாறு பிரத்ய க்ஷாகம விரோதமோ, அவ்வாறே யிங்குச் சப்தத்திற்கு மறிக. (உருஉ)

இதி வக்தவ்யம் ஏவாயம் வ்யோம்நா
ஹ்ருதவதோச்யதே । க்ஷிதௌ தோயௌ ஜலே
வாயௌ வ்யோம்நி தோயௌ வாயுதேஜஸோ: ॥ உகூ௧

ஹ்ருஸ்வத்வேந ஜடத்வம் க்ஷிதௌ ப்ர
காசந்த்ரிகயா । ருக்ஷம் க்ஷாந்த்யம் ர
ஸோஹம்ஸ்ய ப்ரத்யக்ஷய: க்ஷிதௌ ॥ உஎ௧

ஸ்பர்ச: க்ஷிதாவஸம்பந்தி ஸம்பந்தோ ஜ
லாபஸ்மியோ: । உஅ

ஐந்து பூதங்களின் விசேஷ குணங்களாவன? சப்

த மாகாசமுதலைந்திலும், பரிசம் வாயுமுதல் நான்கிலும், ரூபம் தேஜசுமுதல் மூன்றிலும், ரசம் ஜலமுதலிரண்டிலும், கந்தம் பிருதுவி யொன்றிலு முண்டென்றறிக. அவற்றுள் வாயுவிலும் பிருதிவியிலும் அநுஷ்ண சீத ஸ்பரிசம், ஜலத்திற் சீதஸ்பரிசம் அக்னியிலுஷ்ண ஸ்பரிசம். ஜலத்திற் சுக்கிலரூபம், அக்நியில் ஒளியுள்ள சுக்லரூபம், பிருதுவியிற் சுக்கிலமுதலேழுவித ரூபமும். ஜலத்தில் மதுரரசமும், பிருதிவியில் மதுரமுதலாறு ரசமும். பிருதிவியிற் சுரபி அசுரபி யிரண்டுவித கந்தமு முண்டென்று தெரிந்தவர் சம்மதம். (௨௬௫-௨௭௦-௨௮)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௯

தேகத்தி லைந்துபூதங்களு மிருக்கும் விதமாவன? எலும்பு மாம்ஸம் மயிர் தோல் நகம் பல் இவை பூமியினம்சம். மூத்திரம் ரக்தம் கபம் வேர்வை சுக்லம் இவை ஜலத்தி னம்சம். (௨௯)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௩௰

இருதயத்திலும் பாகஞ்செய்யும் ஜாடராக்நியிலும் நேத்ரங்களிலும் பித்தத்திலும், உஷ்ணம் சமைத்த

ல் பிரகாசம் எரிதல் இவ்வித அக்நியின் தன்மை தோ ற்றுகிறபடியால் அவை யக்நியி னம்சம். பிராணாதி வி யாபார பேதத்தால் வெவ்வேறு பேர்கொண்டு தேகத் தில் வாயு இருப்பது முன்னமே சொல்லியாயிற்று.

[illegible]

ஆகாசமானது ஆங்கார விருத்தியை யநுசரித்துச் சகல நாடிகளிலு மிருக்கும். (௩0)

[illegible]

கலைமுதற் பூமிவரையி லிந்தத் தத்வங்கள் புருட னுக்குப் போககாரிய சாதகங்களா யிருக்கின்றன. போ கஞ் சாதாரண மாகாமல் வேறுபட் டிருப்பதால் இந் தத் தத்வங்களு மாத்மாக்கள்தோறுந் தனித்தனி யுண் டென்று நிச்சயிக்கப்படும். (௩௧)

ஆனாற் போகபேதத்திற்குக் கன்ம நிமித்தமாகு மென்னில்? சரியே. ஆனா லந்தக் கன்மம நேரிட நிமித் தமாகாது தத்வசரீரங்களைப் பேதப்படுத்தி அதன்வழி யே போகங்களையும் வேறுபடுத்தும்.

[illegible]

இந்தச் சூக்ஷுமமான தத்வமய சரீரமானது கன்மபல போகரூபமான தனது வியாபாரமொருக்காலிலெங்குந் தோற்றுதபடியால் வியாபகமன்று. மகத்து ஆங்கார முதலான வநேக காரணத்திலிருந் துண்டானபோதிலு மிந்தச் சரீரம் கன்மபோக ரூபமான ஓரோபலமுள்ளதென் றறிக. அஃதெவ்வாறென்னில்? அநேக விதமான வத்தி எண்ணெய் பாத்திர முதலானதி லுண்டான தீபமானது பிரகாசரூபமான ஓரோபல முள்ளது போல. (ருஉற)

[illegible]

இவ்வா றிந்தச் சம்சாரியான வனுயிற்குக் கன்மங்களைப் புசித்துக் கழிப்பதாயும் சேதனனுடைய சேர்க்கையாற் சேதனரூபமாயும் மாயாகார்ப்ப விருத்தியாயு மிருக்கின்ற விந்தத் தத்வசரீரமானது சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இதுவே போதாதென நினைத்து ஆச்ரயம் தூலதேகம் விஷயங்கள் இவைகளினுற்பத்தியின்பொருட்டுப் புவன தத்வ பரம்பரையை யினிச் சொல்லுவாம். (ருருற)

பன்னிரண்டாவது, இந்த்ரியாதி ப்ரகரணம்

முற்றிற்று.

ஆம் ஸ்லோகம்—உசக.

அ

சிவமயம்.

௧௩—வது, அத்வ ப்ரகரணம்.

அஶுத்தாத்மனாம் ப்ரபுஶ்ஶ்ரேயஸே புவ
நானி விநிர்மமே । ஸாதனான்யதோ
போக்யானி போகஸ்தானானி வை ப்ரபு: ॥ ௧

அசுத்தர்களான வாத்மாக்களுக்கு மேலான சிரேயஸிற்குத் தடையான கன்ம பாச பந்த நீங்கும்பொருட்டு அவ்வப்போகங்கட்குச் சாதனங்களான தநுகரண புவனங்களைச் சிருஷ்டிக்க நினைத்தபின் அனந்தேஸ்வரர் ஆத்மாவிற்குச் சொல்லிப்போந்த விஷய போகரூபமான காரியம் நன்றாகச்சித்திக்கும் பொருட்டுச் சாதாரணங்களான கலைமுதலான காரணங்களிலிருந்து புவனங்களை யுண்டாக்கினார்.

இவ்விடத்தி லுண்டாக்குவது ஜகத்ரூபமான காரணத்திலிருந்து காரியம் வியக்தமாகச் செய்வதென வறிக. (௧)

தானி காரணாத்மானி ப்ராக்தானி ச
ஞ்சை । ஸம்ஸார ஸ்திதிக்ஞா ஸோத்யா
நம் ப்ரவக்ஷ்யதே । ௨

அந்தப் புவனங்கள் காலாக்னி புவனமுதல் கலாபுவன பரியந்தமென் றறிக. இதைத்தான் தத்வ மறிந்தவர்கள் போகஸ்தானமான சம்சார மண்டலமென்று சொல்கிறார்கள். (உ)

முன் சொல்லிய தத்வங்க ளியாவையும் கலைமுதலான காரணங்களில் தோற்றினவை; மாயையிலிருந்தல்ல. மாயை நிஷ்களமென்று ஸ்வாயம்புவாதி யாகமங்களிற் சொல்லியபடியால் மாயையி லுண்டாயிற் றென்னில்? மாயையும் புவனாதிகளைப்போல சந்நிவேச முள்ளதாய்ப் போக்யமாகும். அவ்வாறாகிற் கடாதிகளைப் போல் அநித்தியமாகும். மாயை போக்ய மாகாவிடில் மாயாகாரியமன்றிப் போக்யமே யில்லாமையாற் புருடனுக்குப் போக்யமில்லாமற் போக்த்ருத்துவ மில்லையாமென்னில்? சரியே. ஆனால் அதன் காரியமெல்லாம் வியக்திரூப மாகையால் அப்போது போக்யமாகும்; சக்திரூபமா யிருக்கும்போது அல்லவென்று சொல்லப் பட் டிருக்கிறது.

இவ்வாறாகில் மாயாகர்ப்பத்தில் புவனங்க ளிருக்கின்றன வென்கையாற் புவனங்களெல்லாம் சந்நிவேசமுள்ளதாய்ப் போக்யமா யிருப்பதால் மாயையு மவ்வாறாகுமென்னில்?—

[illegible]

யோநிவா: । தத்வஶுத்திஶ்ச தீக்ஷாயாம்
ஸர்வம் தத் கார்யகல்பிதே ॥ ௩

நித்யத்வ வ்யாபகத்வாப்யாம் ஶ்ரவணாத் பவ
வீயதே । த்ருஷ்டம் போகாதி யஸ்மாத்தேஹாத்ரம்
உக்தம் ப்ரஜ்ஞேயமிஷ்யதே ॥ ௪

மாயையிலும் மண்டலேச்வரர் கஹநேச்வரர் முதலான ருத்ரர்கள் புவனபதிகளாய்ச் சொல்லப்படுகிறார்கள். கிரியாபாதத்தில் தீக்ஷையிலும் தத்வசுத்தி சொல்லியிருக்கிறது. ஆகிலுமிவைகளெல்லா மதன்காரியமான கலாமஸ்தகத்திலென் றறியவேண்டும். ஏனெனில்? மாயை நித்தியமென்றும் வியாபகமென்று மாகமங்களிற் சொல்லி யிருக்கிறபடியால், புவனமுதலானவை யுருப்பட்டுப் போக்யமாக விருப்பனவெல்லா மறியக் காண்கையால்; இஃ தவ்வா றல்லவென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையாற் காரியமாகிய கலைமுதலானவையே புவனகாரண மென்னில்? ஒரு குற்றமு மில்லை. (௩-௪)

இந்நியாயம் மஹாமாயையென்னும் வித்யா தத்வத்திலு மறியவேண்டு மென்கிறார்.

ஶுத்தாத்வந்யபி வித்யேஶா: பரேஶ்வரா:
பதய: க்ருதா: । யதஸ்த்வேஷாம் ப்ரோக்தா
ஜ்ஞே தேவீஶக்ருத்ஸ்வகே ॥ ௫

சுத்தாத்வாவிலும் பரமான வித்தையென்னு மஹாமாயையின் காரியாதிகாரிகளாய் யாதொரு பதிக ளதிற்

சொல்லப்பட் டிருக்கிறார்களோ அவர்களு மதன் காரி
ய மஸ்தகத்திலென் றறியவேண்டியது. (௫)

இனி, கீழ் அத்வாவி லேகதேசத்தி லிருக்கும் பிர
மாண்டத்தின் அகல வுயரங்களையும் அதற்குட்பட்ட பு
வனங்களின் அளவையும் சொல்லும்பொருட்டு யோஜ
னப் பிரமாணத்தைப் பரமாணு முதலாகச் சொல்கின்
றார்.

ரஜோவிஶோக்ருதே த்ரிபஞ்சஜாலா வி-
ஷ்டாக்ஷ ரோமவிஷ்டௌ । தத்ஷ்டாஷ்டா ம-
ணம் [illegible] ॥ ௬
லிக்ஷா யூகா யவோ [illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ ௭
[illegible]
[illegible] । [illegible]
[illegible] யோஜநம் ॥ ௮

சாலகத்தின் வழியாகவருஞ் சூரியகிரணத்தில் தோற்
றும் பரமாணுரூபமான சூக்குமப் பொடியை மும்மு
றை யெட்டிற்பெருக்க ஒரு (கசாக்ரம்) மயிர்முனை என்
னும் பிரமாணமாகும். அது எட்டு கொண்டது ஒரு லி
க்ஷை. அது எட்டு கொண்டது ஒரு யூகை. அது எட்டு

கொண்டது ஒரு யவம். அது எட்டு கொண்டது ஒரு அங்குலம். அது இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம். அது நான்கு கொண்டது ஒரு வில்லு. அது இரண்டு கொண்டது ஒரு கோல். அது இரண்டாயிரம் கொண்டது ஒருகுரோசம். அது இரண்டு கொண்டது ஒரு கவ்யூதி. அது இரண்டு கொண்டது ஒரு யோஜனை யென்று தெரிந்தவர் சொல்கின்றார்கள். (௬—௭—௮)

[illegible]
[illegible]
[illegible] ௯

அவ்வித யோஜனங் கோடிகொண்டது பிரமாண்ட கபாலத்தின் பருமன். அப் பிரமாண்டத்திற்குள் காலாக்நி ருத்ரருடைய ஸ்தானம் பொன்மயமா யிருக்கிறது. அதே கோடியோஜனப் பிரமாணங் கொண்டது. (௯)

[illegible]
[illegible]
[illegible] ௧௦

அவ்வாலயத்திற் பிரளயகாலத்தி லுண்டாகிய கோடிசூரியப் பிரகாசமுள்ள காலாக்நி யென்னும் பிரசித்தரான ருத்ரர் அவ்வித அநேக ருத்ரர்களாலே சூழப்பட் டிருக்கிறார். (௧௦)

[illegible]
[illegible]

[illegible]
[illegible] கக

அந்தக் காலாக்நி ருத்ரர் பரமேஸ்வரனுடைய ஸங்கார சக்தியினாலே பிரேரிக்கப்பட்டு ஜ்வலிக்கின்றதேஜசுள்ளவ ராகும்போது சகலாத்வாவிலு மிருக்கின்ற சர்வப் பிராணிகட்கும் பயமுண்டாகிறது. (கக)

[illegible]
[illegible]
[illegible] கஉ

அவருடைய ஜ்வாலையானது ஸ்வபாவமாகப் பத்துக்கோடி யுயரம் ஜ்வலிக்கின்றது. அதன் புகை திட்டமாய்ப் பயங்கரமா யைந்துகோடி யுயர மிருக்கின்றது.

[illegible]
[illegible]
[illegible] கங
[illegible]
[illegible] கங௨

அதன்மேல் நரகங்களின் விஸ்தாரமாகிய (புடங்கள்) ஸ்தானங்கள் முப்பத்துமூன்று. தனித்தனியே தொண்ணூறு லக்ஷயோஜனையுள்ளன. அவைகளிலொன்றுக்கொன்றந்தரம் முப்பத்திரண்டு லக்ஷயோஜனை, அவை யாவு

கள் நரகபாதனை யநுபவிக்கும்பொருட்டு அத்வாவை யுண்டாக்கின வனந்தேச்வரராலே செய்யப்பட்ட ஸ்தானங்கள். (கங.—கங½)

தாநி தே நாமபிர்வக்ஷ்யே த்விஜஶ்ரே
வ்ருணுஷ்வ தாந் ॥ கச

அந்த நரகங்களைப் பெயரிட்டுச் சொல்கின்றேன் கேளும் பரத்வாஜருஷியே! (கச)

ரௌரவத்வாந்த ஶீதோஷ்ண ஸந்தாபாம்
புஜஸம்புஜா: । காலஸூத்ராஷ்டமாஶ்சைதே நரகா: ப்ரதிஷ்டிதா: ॥ கரு

ரௌரவம் த்வாந்தம் சீதம் உஷ்ணம் சந்தாபம் அம்புஜம் மகாம்புஜம் காலசூத்ரம் இவை எட்டும் நரகங்களென்று பிரசித்தங்களா யிருக்கின்றன. (கரு)

ஸூசீமுகஶ்ச காலாக்நிர்ஜ்வாலாக்ஷாரபயா
நகாம்பரீஷகா: । த்ராம்ஸ தரா மஹாதா
ஹ ஸந்தாபாக்யோ பிசஞ்சக: ॥ கசு

மஹாநரகாஸ்தேஷு மஹாநரகா
பஞ்சமா: । கசு½

சூசிமுகம் காலகட்கம் க்ஷாரதாரம் அம்பரீஷம் தப்தாங்காரம் மஹாதாஹம் சந்தாபம் பிபச்சம் இவை எட்டும் மகாநரகங்கள். (கசு—கசு½)

லாக்ஷாப்ரலேபோ மாம்ஸாதோ நிருச்ச்வா
ஸஶ்ச ஸோச்ச்வாஸ: | யுக்மாத்ரி: சால்மலீ
லோஹப்ரதீப்தக்ஷாரஶ்ச பிபாஸக: || ௧௭
க்ருமிநிசய இத்யஷ்டௌ ராஜாந: ப்ர
கீர்த்திதா: | ௧௮

லாக்ஷாப்ரலேபம் மாம்ஸாதம் நிருச்வாஸம் ஸோச்வாசம் யுக்மாத்ரி சால்மலீ லோஹபிரதீப்தக்ஷாரத்பிபாஸம் க்ருமிநிசயம் இவை எட்டும் ராஜநரகங்கள். ௧௮

லோஹஸ்தம்போ விண்மூத்ர ஸ்ததா
வைதரணீ நதீ | தாமிஸ்ரமந்ததாமி
ஸ்ர: கும்பீபாகமஹாரௌரவ: || ௧௯
அவீசிரிதி ராஜராஜே
ஶ்வரா: ஸ்ம்ருதா: | ௨௦

லோஹஸ்தம்பம் விண்மூத்ரம் வைதரணீநதி தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம் கும்பீபாகம் மகாரௌரவம் அவீசி இவை எட்டும் ராஜராஜேச்வரநரகங்கள். இவ்வாறு நான்கு வகையாய் முப்பத்திரண்டு நரகங்களென வறிக. (௧௯—௨௦)

ஏஷாம் [illegible] நரகே [illegible]

[illegible]

[illegible] || உ0

இந்த முப்பத்துமூன்று நரக புடங்களினளவு அந்தராளத்தோடு சேர்ந்து முப்பது கோடியும் இரண்டு லக்ஷமும் ஆகிறது. (உ0)

[illegible]

[illegible]

[illegible] || உக

[illegible]

[illegible] | உக½

அந்த நரகபுடங்களின்மேல் முப்பதினாயிர யோஜனை வெளி. அதன்மேற் பூமி ஒன்பது லக்ஷயோஜனை யுள்ளது. அதன்மேற்பாதி பொன்மயமாயிருக்கும், கீழ்ப் பாதியிற் பாதி இரும்புமயமாயும் பாதி மண்மயமாயு மிருக்கும். (உக—உக½)

[illegible]

[illegible]

[illegible] || உஉ½

அவ்விடத்திற் கூறிப்போந்த முப்பத்திரண்டு நரகங்கட்கு மதிபதியாகிய கூஷ்மாண்டரென்று பிரசித்த

ரான ஈஸ்வரர் பிரளயகால சூரியனைப்போலவு மக்கி யைப்போலவுந் தேஜசுள்ளவரா யிருப்பர். (௨௨)

[illegible]

௨௩

அந்தக் கூஸ்மாண்டர் பயங்கரமான முகமுள்ளவ ராயும் கோபிஷ்டராயும் உருட்சியான கண்விழி யுள்ள வராயும் பாசாயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டும் தன்னைப்போலொத்த அநேக பூதங்களாற் சூழப்பட்டு மிருப்பர். (௨௩)

[illegible]

௨௪

இரும்பு மயமாயும் பொன்மயமாயு மிருக்கும் புட த்திற்கு மேல் நாமிருக்கும் பூமி எட்டாவதாகும். கீழ் ஆறுபூமிகள் ஆயிர ஆயிர யோஜனையுள்ளன. அதற்கு மே லிந்தப் பூமிக்குக் கீழ்ப்பட்ட ஏழாவதுபூமி மாத்தி ரம் இரண்டுகோடி எண்பத்தெட்டுலக்ஷ யோஜனை யுள் ளது. (௨௪)

[illegible]

ஸஹஸ்ரகீ । தஸ்மாத்ஸம்ஸ்ருஷ்டகம்ஹாடகீ:

வ்ருதம் பாதாலஸம்ஸ்ருஷ்டகம்|| உரு,அ

இந்த வெட்டுப் பூமிகட்கு நடுவிலுள்ள விடங்கள் ஒவ்வொன்று ஒன்பதினாயிர யோஜனை யுள்ளவை. எல்லாவற்றிற்கு மேலாயும் பொன்மயமாயும் மேற்சொல்லு மாடகேச்வரா திஷ்டிதமாயுமிருக்கு மிடமாத்திரம் பதினாயிரயோஜனை யுள்ளது. இவ்வேழுபூமிகளையு மே மூபாதாளமென்பர். (உரு,அ)

தஸ்மிந்நாபி வசநத உத்ராந்த நி

வோதத । ஆபஸம் பாதாளாக்யம்

நிதலஞ்ச கபஸ்திமத் || உசு

மஹாதலம் ரஸாதலஞ்ச பாதாலம் ஸ

ப்தமம் ததா । உஎ

அந்தப் பாதாளங்களின் பெயர்களாவன? ஆபாசம் பாதாளாக்யம் நிதலம் கபஸ்திமத் மகாதலம் ரசாதலம் பாதாளம் எனவேழு. (உசு—உஎ)

ஸர்வேஷ்வேதேஷு தைத்யேந்த்ரா ஸ்

ஸம்ரக்ஷணதத்பரா:। ஸர்வஸ்ஸர்வே ஸம்வ்ரு

தா ஸ்தாநவ்யய நிவோதத|| உஅ

இந்த வேழு பாதாளங்களிலும் அசுரர் நாகேச்வரர் இராக்கதர் இவர்கள் அதிபதிகளாக வவ்வேழுபெய

ரிருக்கிறார்கள்; அவர்களின் பெயர்களை மேற்சொல்லு வாம். (உஅ)

शङ्कुश्रुतिश्च प्रह्लादः शिशुपालश्च
कर्कन्धुकः । हिरण्याक्षो बृहत्कर्पो बलिश्चेति व्यवस्थया ॥ उकூ

அசுரர்கள் பெயர், கீழ்ப்பாதாளத்திற் சங்குஶ்ருதி அதன்மேல் பிரஹ்லாதன் சிசுபாலன் கர்க்கந்துகன் இரண்யாக்ஷன் பிரகத்கர்ப்பன் பலி இவ்வா றேழுபெயர் வரிசையா யிருப்பர்கள். (உகூ)

कुटिलो वासुकिश्चैव कम्बलश्च
कार्कोटश्च कालाङ्गो दुर्धर्षस्तक्षकस्तथा ॥ ௩0

நாகேஶ்வரர் பெயர், குடிலகன் வாசுகி கம்பலன் கார்க்கோடகன் காளாங்கன் துர்த்தர்சன் தக்ஷகன் என வரிசையா யேழுபெய ரிருப்பர்கள். (௩0)

विकटो लोहिताक्षश्च यमो वै
विकटाननः । करालो भीमनिर्ह्रादः
पिङ्गलश्चेति राक्षसाः ॥ ௩க

இராக்கதர்பெயர், விகடன் லோஹிதாக்ஷன் யமன் விகடானனன் கராளன் பீமநிர்ஹ்ராதன் பிங்களன் என வரிசையா யேழுபெயரிருப்பர்கள். (௩க)

தேஷாமுபரி நிர்திஷ்டபாதாளாதி
பதீஶ்வர: । ஹாடகேஶ: காஞ்சநே யோஜ
நஸஹஸ்ரே ஹாடக: ஸ்தித: ॥ ௧௨

அவ் வேழுபாதாளங்கட்குமேல் அந்தந்தப் பாதாளாதிபதிகட் கெல்லா மீஸ்வரரான ஆடகேஸ்வரர் ஆயிரயோஜனையுள்ள பொன்மயமான வாலயத்தி லிருக்கின்றார். (௧௨)

யம் ஸ்துவந்தி ஸ்வபதை: ப்ரீத்யா யதா
யதி விஹங்ஷேணை: । தைத்ய யக்ஷ
ஸுராஹீந்த்ர கந்யாஸங்கை: ஸுதேஷ்டை: ॥ ௧௩

அவ் வாடகேஸ்வரரை அசுர யக்ஷ தேவ நாக கன்னிகைகள் தங்க ளிஷ்ட நிறைவேறும் பொருட்டு நியமத்துடன் தாள லயாதிகளா லழகாய்ப் பதங்களினால் துதிக்கின்றார்கள். (௧௩)

தத: கோடிப்ரமிதம் பஹுஜீவ நாநாஜந
ஸமாஶ்ரயா । த்வீபஶைல ஸரித்ஸாகர
பரிக்ஷிப்தா ॥ ௧௪

அதன்மேற் கோடியோசனை விசாலமுள்ளதாய்ப் பலவித ஜனங்கட் காதாரமாய் மேற்சொல்லும் த்வீபம் மலை ஆறு சமுத்ரம் இவைகளாற் சூழப்பட்டதாய் பூமி யிருக்கின்றது. (௧௪)

ஜம்பூஶாககுஶக்ரௌஞ்சஶால்மலீகோமேத
புஷ்கரா: । லக்ஷாதி த்விகுணா த்வீ
பா: க்ஷாராத்யப்திபிராவ்ருதா: ॥ ௧௫

த்வீபங்களாவன? ஜம்பூ சாகம் குசம் கிரௌஞ்சம் சால்மலி கோமேதம் புஷ்கரம் என வேழு த்வீபங்கள் லக்ஷமுத லிரட்டிப்பான யோஜனப்பிரமாண முள்ளவைகளாய்த் தங்கட்குச் சரியான அளவுள்ள உப்புமுத லான வேழு சமுத்திரங்களாற் சூழப்பட் டிருக்கும்.

ததோ ஹிரண்மயீ பூமிர் லோகாலோ
கஸ் ததஸ் தம: । ததோ கர்ப்போதஸ்ததோ
ऽண்டகடாஹ இதி பூஸ்திதி: ॥ ௧௬

அதற்கப்பாற் பொன்மயமான பூமி. அப்பால் லோகாலோக பர்வதம். அப்பால் இருள். அப்பால் கர்ப்போதமென்னும் சமுத்ரம். அப்பால் அண்டகடாகம். இப்படி பூமண்டல மிருக்கிறது. (௧௬)

ப்ரச்னை.

[illegible] ॥ ௧௭

[illegible] ॥ ௧௮

தேவேஸ்வரனாகிய தேவேந்திரனே! சகலமுந் தெரிந்த நீரே வக்த்தாவாய்ச் சொல்லும். முழுதுமறிய வேண்டுமென் றென்மனங் கேட்க முயல்கின்றதாதலால் ஆச்சரியமான மலை ஆறு த்வீபம் காடு கடல் இவைகளா லலங்கரிக்கப்பட்ட சிறந்த பூமியினளவை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். (௧௭—௧௮)

உத்தரம்.

வர்ஷத்வீபாத்ரி ஸரிதாம் வ்யாஸம்
தோயசைலவநஸ்ய ச | த்வீபாப்தி வர்ணநாதோ(அ)ஹம்
ஸ்ருணு ப்ரோச்யமாநமிஷ்டகாமார்ணவ: || ௧௯

கூறிப்போந்த கிரமமாக த்வீபம் ஆறு காடு முதலானவற்றை விஸ்தாரமாகச் சொல்கின்றேன், ஜாக்ரதையாகக் கேளும் பரத்வாஜ மகாருஷியே! (௧௯)

ஜம்பூத்வீபம் க்ஷிதேர்நாபிர் வ்ருத்
தம் லக்ஷயோஜநம் | க்ஷாராப்திநா பரி
வ்ருதம் பரிவ்ருத்தேந தாவதா || ௨௦

ஜம்புத்வீப மென்பது பூமியின் நடு. அது வ்ருத்தமாய் லக்ஷயோசனை யளவுள்ளதாய் அவ்வள வளவுள்ள வ்ருத்தமான உப்புசமுத்திரத்தாற் சூழப்பட் டிருக்கும். (௨௦)

தஸ்ய மத்யஸ்தித ஸ்ரீமாந் ராஜராஜோ ஹிரண்மய: | த்ரிதஸ்ய தாம்ஸ
ஜ்யோதிஸ்சக்ர ப்ரதக்ஷிணீக்ருத விசேஷித: || ௨௧

அந்த ஜம்பூ த்வீபத்தி னடுவில் மலைகட் கெல்லா மதிபதியாயும் பொன்மயமாயும் சூரியனைவிட அதிக காந்தியுள்ளதாயும் தேவதைகட்கு வாசஸ்தானமாயு மிருக்கிற மேருவென்னு மலை யிருக்கின்றது. (௪௧)

ஸர்வேஷாம் ஸஹஸ்ராணி க்ஷிதௌ வி
ஷ்டோ ஜம்பூத்வீபஸ்ய | தஸ்ய மத்யே ஸ்திதோ
க்ஷேத்ரே மேருஸ்ஸர்வேஷாம் விஸ்ருத: || ௪௨

அந்த மேரு உயரம் லக்ஷயோஜனை. அதிற் பதினாறாயிரம் பூமிக்குள்ளிருக்கிறது, பூமிக்குமேல் எண்பத்துநாலாயிரம். அடியில் அகலம் பதினாறாயிரம், தலையில்முப்பத்திராயிரம். (௪௨)

த்ரிஷஷ்டி ஸாஹஸ்ர உச்ச்ரய:
ஷோடஶ ... | மேருஶ்ச ...
... || ௪௩

... ஸஹஸ்ரம் ... ஸாஹ
ஸ்ரிகா: | ௪௩ ௧

அந்த மலையில் இருபத்தையாயிர விருபத்தையாயிர யோஜனைக்குமேல் ஒவ்வொரு கனுவுள்ள மூன்று கனு மூவாயிர மூவாயிர யோஜனை யுடர முள்ளவைகளா யிருக்கும். அவைகளில் முதற் கனுவில் பதினாயிர யோஜனை யகலமுள்ள ஒரு மேகலையும், இரண்டாவதிற் பதினாலாயிர யோஜனை யகலமுள்ளவொரு மேகலையும்,

மூன்றுவதிற் பதினெண்ணாயிர யோஜனை யகலமுள்ள வொருமேகலையும் தேஜோமயமாக வெளிப்புறப்பட்டிருக்கும். (௪௩—௪௩,ம)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௪௪௨

தலையிலிருக்கு மேகலையானது சகல ரத்னகாந்தியுள்ளதாய்த் திக்குப்பாலர்கட் காச்ரயமா யிருக்கும். அதைச் சக்ரவாடையென்று ஆகம மறிந்தவர்கள் சொல்வார்கள். (௪௪,ம)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௪௫௨

[illegible]
[illegible] । ௪௯

அந்த மேகலைக்குக் கீழ்ப்பட்ட மேகலைகளிற் சித்தர் காந்தருவர் முதலானவ ரிருப்பர்கள். அந்த மேல் மேகலையில் எட்டுச் சிகரங்களுண்டு. அவைகளிற் கிழக்குமுதலாக இந்திராதி திக்குப் பாலகர்களுக்குப் பட்டணங்கள் எட்டிருக்கும். அவைகளின் பெயர்களைச் சொல்கின்றேன் கேளும், (௪௫,ம—௪௯)

[illegible]

ஸௌரை: | ஸித்தாத்யை ஜுஷ்டா ஸத்க்ஷ
ஸா ஸாமராவதீ | சஎ

பலவித மணிகளின் காந்திகளா லலங்கரிக்கப்பட்டுச் சித்தாதிகளா லடையப்பட்டுப் பொன்மய பூமியாயி ருப்பது தேவேந்திரனுடைய அமராவதியென்னும் பட்டணம். (சஎ)

ரக்தபீத மணிவ்ராத ஹேமப்ராகார
தோரணா | வஹ்நேஸ் தேஜோவதீ வஹ்நி
துல்யபூத நிஷேவிதா || சஅ

சிவந்தும் பொன்னிறமாயு மிருக்கும் மணிகளா லிழைக்கப்பட்ட பொன்மயமான மதிள் கோட்டை வாசலுள்ளதாயும் அக்நிக்குச் சமானமான வநேக பூதங்களா லடையப்பட்டு மிருப்பது, அக்நியினுடைய தேஜோவதி யென்னும் பட்டணம். (சஅ)

யமஸ்ய ஸம்யமநீ தாம்ரலோஹ
ப்ராகார ஸம்வ்ருதா | காலபாஶ பித்ருவ்யாதி
ப்ரேதமாரி நிஷேவிதா || சகூ

யமனது சம்யமனி யென்னும் பட்டணம் உயர்ந்த இரும்புமயமான மதிள்சூழ்ந்து காலபாசம் பித்ருக்கள் வியாதிகள் பிரேதகணங்கள் மாரியென்னும் லோக க்ஷயகரமான வுற்பாதரோகம் இவைகளாற் சூழப்பட்டிருக்கும். (சகூ)

க்ருஷ்ணாம்போதப்ரதீகாஶா
யமஸ்யேவாஸுரஸேவிதா । நீலாப்ர
ப்ராஸாதவிதாநவதீ க்ருஷ்ணா ॥ ௫௦

நிருதியினது க்ருஷ்ணையென்னும் பட்டணம் யமனதுபோற் கறுத்தும் இந்திரநீலமணி காந்தியுள்ள மேற்கட்டுகளா லலங்கரிக்கப்பட்டும் அசுரர்களா லடையப்பட்டு மிருக்கும். (௫௦)

ஶுத்தவதீ ஸ்படிகோபலா
வருணஸ்ய ப்ராஸாதமேக
யாதோ ஸேவிதா ஶாரதாபை: ॥ ௫௧

வருணனது சுத்தவதியென்னும் பட்டணம் படிகமணிகளா லிழைக்கப்பட்டும் மகரமாதி ஜலஜந்துக்களாலடையப்பட்டும் வெளுந்தமேகத்தையொத்த கிரகங்களினாற் பிரகாசமாயு மிருக்கும். (௫௧)

வாயோர்கந்தவதீ துங்காஸ்வேத
த்வஜாகுலா । ஸர்வரத்நமயீ பூதை
ஸேவிதா பூரிபி: ॥ ௫௨

வாயுவினது கந்தவதியென்னும் பட்டணம் உயர்ந்து வெண்மையாயும் பொன்னிறமாயு மிருக்குந் த்வஜங்களோடு கூடினதாயும் பலவுள்ள பூதங்களா லடையப்பட்டும் சகல மணிகளா லிழைக்கப்பட்டு மிருக்கும்.

[illegible] ‖ ருங

சோமனது மஹோதயையென்னும் பட்டணம் வெண்மையாய் முத்து சந்திரகாந்தமணிகளாற் செய்யப்பட்டுப் பிராம்மண கணங்களால் துதிக்கப்பட்டு இமயமலைக்குச் சமானமான காந்தியுள்ள கிரகங்களாற் பிரகாசித்திருக்கும். (ருங.)

[illegible] ‖ ருச

எரியாநின்ற நெற்றிக் கண்ணினால் மன்மதனையும் யமனையு மெரித்து அதனாற்கீர்த்திபெற்ற ஈசானருடைய யசோவதியென்னும் பட்டணம், சகல மணிகளாலு மிழைக்கப்பட்டு ருத்ரகணங்களாற் சேவிக்கப்பட்டிருக்கும். (ருச)

[illegible] ‖ ருரு

[illegible] ‖ ருசு

இவ்வாறெப்போதும் சுகத்தையே கொடாநின்றும் காற்றினு லிறைக்கப்பட்ட கற்பகத்தின் பூப்பொடிகளாற் சிவந்து மிருக்கின்ற திக்குப்பாலகர். பட்டண மெட்டும் பிரமாவினாற் செய்யப்பட்டன. இவைதான் லோகபாலகர்கட்கும் அவரை யநுசரித்தவர்கட்கும் மேன்மையின்பொருட்டுச் சுவர்க்கமென்று கவிகளாற் சொல்லப்படுகின்றன. (௫௫—௫௬)

[illegible]
[illegible]
[illegible] ௫௭

[illegible]
[illegible]
[illegible] ௫௮

இந்தப்பட்டணங்கட்கு நடுவில் பிரமாவினது மனோவதியென்னும் பட்டணம் பதினாலாயிர யோஜன விசாலமுள்ளதாய் லோகபாலர்களால் வணங்கப்பட்டிருந்த ரத்னகாந்திகளா லாகாசமார்க்கத்தையெல்லாஞ் சிவக்கச் செய்துகொண்டு ஸ்வர்க்கேச்சையை யதிசயித்துப் பிரமபதப்பிராப்தி யேதுவாகையாற் சாவித்ரியோடு போட்டிசெய்வதுபோ லிருக்கும். (௫௭—௫௮)

[illegible]

[illegible]
[illegible] ॥ ௫௯

அந்த மனோவதிபட்டணத்தில் இருந்த தேஜோபலமுள்ள தேவர்களும் முனிவர்களும் யோகிகளால் த்யானிக்கத்தக்க பிரமாவைத் தங்களபீஷ்டசித்தியின் பொருட்டு இயம நியமாதிகளா லுபாசிக்கின்றார்கள்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ௬௦

அந்தப் பிரமபட்டணத்திற் கீசான பாகத்தி லந்த மேருமலையின் கொடிமுடி யொன்று சூரியப் பிரகாசமா யிருக்கிறது. அதைப் பரமேஸ்வரனுக் கெப்போது மிஷ்டமான ஜோதிஷ்கமென்னும் ஸ்தானமென்பர்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ௬௧

அந்த ஜோதிஷ்கத்தின் பொன்மயமாயும் மணிகளாற் சித்ரங்களாயு மிருக்கின்ற சம பூமிகளிலே ஸ்கந்தர் நந்தி மகாகாளர் கணேசர் முதலாகிய சதாசிவ தத்வத்திற்குக் கீழ்ப்பட்ட கணங்க ளிருப்பார்கள். (௬௧)

[illegible]

[illegible]
[illegible]
[illegible] ௬௨

பிரமேந்திராதி தேவர்கட் கெல்லாம் நியந்தாவாய்த் திரிபுர சங்காரியான பரமேஸ்வரனது ஸ்தானமானது அநேக ருத்ரகணங்களாலும் பிரமாதி தேவர்களாலுஞ் சூழப்பட்டிருக்கும். (௬௨)

[illegible]
[illegible]
[illegible] ௬௩

இவ்வாறு மேருபர்வதஞ் சொல்லப்பட்டது. இனி, இதற்குக்கீழிதற்குப் பிடிப்பாகச் சில மலைகளுண்டு. அந்தந்த மலைகள்வரையி லிருக்கும். இந்த ஜம்பூ த்வீபத்தில் ஒன்பது கண்டங்கள். அவை யாவுங் கேளும். (௬௩)

[illegible]
[illegible]
[illegible] ௬௪

[illegible]
[illegible]
[illegible] ௬௫

மேருவிற்குத் தென்புறத்தில் நிடதம் ஏமகூடம் இமயம் இம்மூன்றுமலைகளும், வடபுறத்தில் நீலம் ஶ்வேதம் ச்ருங்கவான் இம்மூன்றுமலைகளும், இரண்டாயிர யோஜனைப் பருமனும் பதினாயிர யோஜனை யுயரமும் ஒன்பதினாயிர யோஜனை யொன்றுக்கொன்று நடுவிலிடைவெளிகளு முள்ளவைகளாய்க் கிழக்குமேற்கு நீளமாயிரண்டுப்புச்சமுத்திர பரியந்தம் நீண்டழகான விடமுள்ளவைகளா யிருக்கும். (௬௪—௬௫)

[illegible] ௬௬

மேருவிற்குக் கிழக்கும் மேற்கும் மால்யவான் கந்தமாதனம் என்னு மிரண்டு மலைகளும், தெற்குவடக்கு நிடத நீல பரியந்த நீண்டு அவைகட்குப் பாதியான ஆயிரயோஜனை பருமனுள்ளவைகளாய் அவ்வளவுயரமு மிடைவெளியு முள்ளவைகளா யிருக்கும். (௬௬)

[illegible] ௬௭

மால்யவானுக்கு மேற்கு கந்தமாதனத்திற்குக் கிழக்கு நீலமலைக்குத் தெற்கு நிடதமலைக்கு வடக்கு இக

ன் மத்தியிலிருக்குங் கண்டத்திற் கிளாவிருதமென்று பெயர். (௫௭)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௮

மால்யவானுக்குக் கிழக்கே பத்ராச்வ மென்னுங் கண்டம் அழகாய் ஜனமுள்ளது. கந்தமாதனத்திற்கு மேற்குக் கேதுமாலமென்னுங் கண்டம் அழகாய் கிரகங்களுள்ளது. (௫௮)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௯

நிடதமலைக்குத் தெற்கு அரிவருஷம், ஏமகூடமலைக்குத் தெற்குக் கிம்புருஷவருஷம், இமய மலைக்குத் தெற்கு பாரதவருஷம். (௫௯)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௭௦

நீலமலைக்கு வடக்கு ரம்யகவருஷம், ச்வேதமலைக்கு வடக்கு இரண்யகவருஷம், ச்ருங்கவான்மலைக்கு வடக்குக் குருவருஷம். (௭௦)

[illegible]

ஸெஶ்யாய வெயவா | ஶக்ஷாஸெனாஞ
தய: கராந்தா ஸெஷாம் வப்ரவெண ஸம்ஹ
ர: ||　　　　　　　　　　　　　　　　　எக

ஶ்வேதோ மந்தர: ஸுவர்ணாபோ
யாம்யோ தோ கந்தமாதந: | நீலோ வி
புலோ நாம ஶோணவர்ணஸ் ஸுபார்ஶ்வஶ்சோத்தரோ (அ)ண: || எஉ

பஞ்சாஶத்யோஜனோச்ச்ராயா ஸ்ருஷ்டா
ப்ரஹ்மணா விஷ்கம்பகிரய: | கதம்போ ஜம்பூ
ரஶ்வத்தோ ந்யக்ரோதா: கல்பபாதபா: || எங

மேருமலைக்குக் கிழக்குமுதல் நான்குபக்கமும் வரிசையாக வெண்மையான மந்தரமலையும், பொன்னிறமான கந்தமாதனமலையும், கறுத்தவிபுலமலையும், சிவந்தசுபார்சுவமலையும் ஐம்பதினாயிர யோஜனை யுயரமுள்ளவைகளாய் மேருவிற்குப் பிடிப்பாக பிரமாவினாலே சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றன. அம்மலைகளின்மேற் கிழக்குமுதல் வரிசையாகக் கடம்ப நாவல் அரசு ஆல் இந்நான்கு கற்பக விருக்ஷங்களு மாயிரயோஜனை யுயரமுள்ளவைகளா யிருக்கின்றன.　　　(எக—எஉ—எங)

ஜம்பூவ்ருக்ஷ ரஸோ ஸர்வே தா ஜ
ரஸம் ப்ரபத்ய நிஷ்டா | விஶ்வஸ ஜ
லேவாஸ்ய ஸுகீ ஷாதாம் ஜவீஷ || எச

அந்த நாவல் மரத்தின் பலசாரமானது ஆறாக

மேருமலையைச்சுற்றி அந்தப் பூமியெல்லாம் பொன்னாக்கி அந்த மேருவினடியிற் போகிறது. (எச)

தாம் வீக்ஷ்யா பக்ஷிஸவ்ருந்தா ப்ரமரா
வா ப்ரமாதய:। ஸஹவ்ருந்தை: காஞ்சநாபே
வ ஸக்ஷாஸ்ஸஸ்த்ராம் க்ருதஜ்ஞேஷா: ॥ எரு

அந்த நதிஜலத்தில் ஸ்நாநபானஞ் செய்யும் பக்ஷிகள் சர்ப்பங்கள் எலி மிருகங்கள் குரங்குகள் முதலான பிராணிக ளியாவும் பொன்மய மாகின்றன. (எரு)

ஜீவகேதுர் ஹி ஜம்பூ: கல்பா
விஷ்ணு ஸத்வீ। ப்ரஹாவாதி ஸயாஸ்வ்யா
தம் ஜம்பூர்ஜீவ நிஷ்தத: ॥ எசு

மற்றக் கற்ப விருக்ஷங்க ளிருக்கையிலு மந்த நாவல்மர மிந்த த்வீபத்திற்குத் த்வஜமானபடியா லதன் மகிமையா லிந்த த்வீபத்திற்கு ஜம்பூத்வீபமென்று பெயராயிற்று. (எசு)

ப்ராசுஸ்யாம் விஷ்கம்ஹ மௌஸவ்ய சைத்
ரௌ சைத்ரரதம்வநம்। ஸரோ ரு
ணோதகாநாம தத்ர ஹேமாப்ஜ ஜுஷ்டம்॥ எஎ

மேருவிற்குக் கிழக்கே பிடிப்புமலையான மந்தரத்தி னடியில் சைத்திரதமென்னும் உத்யான வனமும் பொற்றாமரையா லலங்கரிக்கப்பட்ட அருணோதக மென்னும் தடாகமு மிருக்கின்றது. (எஎ)

[illegible]
[illegible]
[illegible] ॥ எஅ

தென்புறத்திற் கந்தமாதனமலையி னடியிற் கந்தருவர் தேவர் சித்தர் அப்ஸரஸ் இவர்களாற் சூழப்பட்ட நந்தனமென்னும் வனமும் மனோகரமாகிய மானஸமென்னுந் தடாகமு மிருக்கிறது. (எஅ)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ எகூ

மேற்கே விபுலமலையி னடியில் வைப்ராஜ மென்னும் வனமும், சூர்யனுக்குச் சமானகாந்தியுள்ள தாமரைகள் சூழ்ந்த சிதோதமென்னும் தடாகமும் தேவர்களா லடையப்பட்டிருக்கும். (எகூ)

[illegible]
[illegible]
[illegible] ॥ அ௦

வடபுறத்திற் சுபார்ஸ்வமலையி னடியில் த்ருதிமத்தென்னும் வனமும் செங்கழுநீர் தாமரைசூழ்ந்த பத்ரகமென்னுந் தடாகமும் பித்ருக்களா லெப்போது மடையப்பட் டிருக்கும். (அ௦)

[illegible] ॥ அக

இளாவிருத கண்டத்தில் ஜனமானது பதின்மூவாயிர வயசுள்ளதாயும் நாவற்பழ ரசம் புசித்துக்கொண்டும் மேருவின்பிரகாசத்தாற் பதார்த்தங்களை யறிந்துகொண்டும் அழகான காந்தி யுள்ளதாயு மிருக்கும். (அக)

[illegible] ॥ அஉ

கேதுமால கண்டத்தில் ஜனமானது பதினாயிர வயதுள்ளதாயும் கருநெய்தல் நிறமுள்ளதாயும் பலாப்பழரசம் புசித்துக்கொண்டும் திவ்யமான சரீரயந்தம் சுகம் பலம் இவைகளுள்ளதாயு மிருக்கும். (அஉ)

[illegible] ॥ அங

பத்ராசுவ வருஷத்தில் ஜனமானது பதினாயிர வயதுள்ளதாயும் சந்திர நிறமுள்ளதாயும் கருநெய்தலைப் புசித்துக்கொண்டும் துக்கம் சோகம் பயம் இவைகளில்லாததாயு மிருக்கும். (அங)

[illegible] ॥ ௮௪

குருவருஷத்தில் ஜனமானது முப்பதினாயிர வயதுள்ளதாயும் இச்சைப்படி விருக்ஷபலங்களைப் புசித்துக்கொண்டும் பிரயயகுவென்னும் கொடியினுடைய புஷ்ப நிறமுள்ளதாயும் (அதாவது வெண்மை) ஸ்திரீபுமானாக இரட்டையாகவே பிரசவித்துக்கொண்டிருக்கும். ௮௪

இந்தக் குருவருஷத்தைச் சார்ந்திருக்கு மிரண்டு த்வீபங்களைச் சொல்கின்றார்.

[illegible] ॥ ௮௫

[illegible] ॥ ௮௬

[illegible] । ௮௭

குருவருஷத்திற்குச் சமீபத்தி லுப்புச்சமுத்திரத்தில் வரிசையாக ஐயாயிர நாலாயிர யோஜனைவரையில் வியாபித்துக்கொண்டு ஒரு திக்குமூலையால் தெரிந்து

கொண்டு வடபுறமாகவும் வாயுமூலையாகவும் சித்த யோக சாரணர்களாற் சூழப்பட்டுச் சந்திர த்வீபமென்றும் பத்திராகர த்வீபமென்று மிரண்டு த்வீபங்களிருக்கும். அவ்விரண்டு த்வீபங்களிலும் ஜனங்கள் கிரமமாகச் சந்திரநிறமும் செந்தாமரை நிறமு முள்ளவையாயும் இளாவிரத வருஷத்தைப்போல் வயதுள்ளவையாயும் பலமூலங்களைப் புசித்துக்கொண்டும் இருக்கும். இவை யிரண்டும் குருவருஷ சமீபமாதலாற் சொல்லப்பட்டனவென் றறிக. (அ௫—அ௬—அ௬உ)

ஸார்த⁴த்³வாத³ஶ ஸாஹஸ்ராணி ஆயுஷ்யாயு-
ர்ஹிரண்மகே । ஜநாஶ்சந்த்³ரப்ரபா⁴காரா
லகுசாஹாரதத்பரா: ॥ அஎஉ

இரண்யக வருஷத்தில் ஜனமானது பன்னீராயிரத்தைந்நூறு வயதுள்ளதாயும் சந்திரகாந்தியுள்ளதாயும் எலுமிச்சம்பழம் புசித்துக்கொண்டிருக்கும்.

நீலநீரஜஸங்காஶா ரம்யகே ஆயுஷி
ஸ்தி²தா: । ஜநா த்³வாத³ஶஸாஹஸ்ராணி ந்
யக்³ரோத⁴ப²லபு⁴ஜ: ॥ அஅஉ

ரம்யகவருஷத்தில் ஜநமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் கருநெய்தல் நிறமாயும் ஆலின் பழம் புசித்துக்கொண்டிருக்கும். (அஅஉ)

[illegible]

அரிவருஷத்தில் ஜனமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் வெள்ளிநிறமாயும் கரும்பைப் புசித்துக்கொண்டிருக்கும். கிம்புருட வருஷத்தில் ஜனமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் பொன்னிறமாயும் பிலக்ஷமென்னுங்கல்லாலின் பழத்தைப் புசித்துக்கொண்டிருக்கும். (அகூ௰)

[illegible]

இவ்வாறு கூறிய கிம்புருஷை முதலான எட்டுவருஷங்களிலும் ஜனங்களுக்கு மாறிமாறிவருங் கிருதாதியுகங்களில் அவஸ்தாபேத மில்லை. (கூ0௰)

[illegible]

ஆனா லிந்தப் பாரதவருஷத்தில் ஜனமானது யுகங்களுக்குத் தக்கபடி அறிவு ஆயுசு தேஜசு பலம் அர்த்தம் பிரஜை இவை மாறிக்கொண்டு உழுது முழாமலு மு

ண்டானதைப் புசித்துக்கொண்டு தாபத்திரயத்தால் வருத்த மடைந்திருக்கும். (௯௧)

குணவத்வேதத் ஸ்ரேஷ்டம்
கிஞ்சிந் ஸாத்யதே | ஸர்வாஸாம் ஹ்ய
ஸ்ரீநாம் கர்மபூ: காரணம் யத:|| ௯௨

ஆனா லிந்தப் பாரதவருஷத்தில் ஒரு குணமுண்டு. அதாவது, இவ்விடத்தில் முயற்சிசெய்கிறவன் பயனி யாவும் பெறுவான்; பலபூமிகளுக்கெல்லாம் கன்மபூமி காரணமாதலால். (௯௨)

கர்மபூமிரியம் ஹநு பலபூமி
ரித:வரா | இஹயத் க்ரியதே கர்ம த
த்ர தத்ரோபயுஜ்யதே || ௯௩

இதுதான் கன்மபூமி, மற்றவையெல்லாம் பலபூமி. இவ்விடத்திற் செய்யுங் கன்மமானது மற்றவிடத்திற் பலங்கொடுக்க வுபயோகமாகிறது. (௯௩)

நவாஸ்ய த்வீபஸ்ய நவதா
த்ராஜக ஸமே| ஜம்பூத்வீபே ப்ரஹ்ருத
யோ நாஜதஸா லிலேயம் || ௯௪

இந்த ஜம்பூத்வீபத்திற் சமுத்ரமான தொன்பது பிரிவாகிப் பாதிபூமியும் பாதிஜலமுமாகச் சூழ்ந்திருக்

யதால் ஒன்பது த்வீபங்களுண்டு. அவைகளின் பெயர்களைக் கூறுகின்றேன் கேளுங்கள். (௧௪)

இந்த்ரத்வீப: கஶேருஶ்ச தாம்ரவ
ர்ணோ கபஸ்திமாந் | நாகத்வீபஶ்சாந்த்ர
மஸோ காந்தர்வோ வாருணஸ்ததா || ௧௫

குமாரிகாத்வீபோ நவமோ நாநாப
ர்வத நதீமத: | நாநாஜாதி ஜநாகீர்ணோ
ஸாகரைர் வ்ருக்ஷைர் வ்ருதா: || ௧௬

இந்திரத்வீபம் கசேருத்வீபம் தாம்ரபர்ண த்வீபம் கபஸ்திமான் த்வீபம் நாகத்வீபம் சாந்திரமஸ் த்வீபம் காந்தருவத்வீபம் வாருணத்வீபம் குமரித்வீபம் என ஒன்பது த்வீபங்கள். இவையாவும் பலவிதமலை ஆறுகளாலும் பலஜாதிஜனங்களாலுஞ் சூழப்பட்டிருக்கும். (௧௫—௧௬)

அக்நீத்ரோ நாம ந்ருபதிர் ஜம்பூத்வீபேஶ்வரோ
மநோ: குலே | தஜ்ஜாத ந்ருபஸம்
ஜ்ஞாபி: கண்டாஸ்ஸந்தி பாரதாதய: || ௧௭

மனுவம்சத்தில் அக்நீத்திரனென்னு மொருராஜன் ஜம்பூ த்வீபத்திற் கதிபதியாக விருந்தான். அவனுக்குப் பாரதன்முதலாகப் பிள்ளைகள் ஒன்பது. அவர்களின் பெயர்களாலே இந்தக் கண்டங்கள் பாரதமுதலான பெயருள்ளன வாயின. (௧௭)

க்ஷாரக்ஷீர ததிஸ்நேஹ ரஸேக்ஷுத்³ர ஐ
தோயகை: | லக்ஷாத் த்³விகு³ணாஸீவா
ஜம்பூ³த்³வீபாத்³யா வ்ருதா: || ௧௮௰

இந்த ஜம்பூமுதலாக வேழு த்வீபங்களும் வரிசையாக லக்ஷமுதல் இரட்டித்தயோஜனை விசாலமுள்ள உப்பு பால் தயிர் நெய் கருப்பஞ்சாறு கள் சுத்தஜலம் இவ் வேழுசமுத்திரங்களாலும் சூழப்பட்டிருக்கின்றன. (௧௮௰)

ஶாகே ஶாக த்³ருமஸ்தோம ஶாகஸம்
ஜ்ஞாதிவந்நத: | குஶே ப்³ரஹ்மா ஸ்தம்ப³
நத: குஶோ ஸ்வயம்பு³விர்யக்ஷதி || ௧௯௰

அப்பாற் சாகத்வீபத்திற் சாகமென்னு மோர்மரமுயர்ந்து பிரசித்தமாக விருக்கிறபடியா லந்த த்வீபத்திற்குச் சாகமென்று பெயராயிற்று. அப்பாற் குசத்வீபத்தில் பிரமா யாகஞ் செய்யும் போது பொன்மயமாக வோர் குசமென்னும் தர்ப்ப முண்டானபடியா லந்தத்வீபத்திற்குக் குசமென்று பெயராயிற்று. (௧௯௰)

க்ரௌஞ்சே க்ரௌஞ்சோ மஹாஶைலோ
த்ரோ க்ரௌஞ்சோ மஹாஶைலஸ்ருங்கதோ | ஸ்கந்
நேந யஸ்யாஸ்வோஸ்திவித்ர ஜாயஸ்ய
ஜாயிநா || ௧௦௰

அப்பாற் க்ரௌஞ்ச த்வீபத்திற் பொன்மயமான ருகையுள்ள கிரௌஞ்சமென்னு மலையிற் பலவிதமா யையுள்ள க்ரௌஞ்சனென்னு மோரசுரன் மஹாமா யையுள்ள சுப்ரமணியரால் வெகுவாய்ச் சண்டைசெய் து அடிக்கப்பட்டான். (க00ற)

[illegible]
[illegible]
[illegible] || க0கற

அவராலந்த வசுரனுடைய வாசமான க்ரௌஞ்ச மலை யோட்டையாகச் செய்யப்பட்டதென்று பிரசித் தமா யிருக்கிறது. அம்மலை யந்த த்வீபத்திற்கு அடை யாளமா யிருந்தபடியா லதற்குக் கிரௌஞ்சமென்று பெயராயிற்று. (க0கற)

[illegible]
[illegible]
[illegible] || க0உற

அப்பாற் சால்மல த்வீபத்திற் பொன்மயமாயும் சூரியப் பிரகாசமாயும் தேவர்கட்குப் பிரியமாயும் ஆயி ரயோஜனை யுயரமுள்ளதாயு மிருக்கிற ஓர் சால்மலமெ ன்னு முள்ளிலவமர மந்த த்வீபத்திற் கடையாளமாக விருந்தபடியா லதற்குச் சால்மல த்வீபமென்று பெய ராயிற்று. (க0உற)

[illegible] ॥ ௧௦௩

[illegible] ॥ ௧௦௪

[illegible] ॥ ௧௦௫

அப்பாற் கோமேதக த்வீபத்தில் மனுவம்சத்து ராஜனொருவன் கோபதியென்பவன் அக்நிபோல் தேஜசுள்ள உதத்ய வம்சத்து ருஷிகளுக்குச் சிஷ்யன், பசுமேத யாகஞ்செய்ய ஆரம்பித்தான். அப்போதவன் குருக்கள் தேவேந்திரன் செய்யும் யாகத்திக்குப் போயிருந்தமையாற் பிருகு வம்சத்தாரைக் குருக்களாக வரித்துக்கொண்டான். பின்பு கௌதமர் கோபத்தா லவனைச் சபிக்க அவன் க்ஷயமடைந்தான். அவனியாகசாலையிற் பசுக்களெல்லா மவருடைய கோபாக்நியாற் கொளுத்தப்பட்டன. அப் பசுக்களின் மாம்சங்களாலே யக்தப் பூமியெல்லா மறைக்கப்பட்ட படியா லந்த த்வீபத்

திற்குக் கோமேத மென்று பெயராயிற்று. (க0ஙஉ—
கபசஉ—க0௫உ)

நதீ புஷ்கரிணீ நாம ஸௌவர்ணபுஷ்கரா
ந்விதா । தயாஸௌ புஷ்கரத்வீபஃ ப்ர
திதஸ் ஸுரஸேவிதஃ ॥ க0௫உ

அப்பாற் புஷ்கர த்வீபத்திற் பொன்மயமான தாமரைகளா லலங்கரிக்கப்பட்ட புஷ்கரணீயென்னும் பெயருள்ள ஓர் நதி யுண்டு. அதனா லந்த த்வீபம் புஷ்கரமென்று ப்ரசித்தமாய்த் தேவர்களா லடையப்பட் டிருக்கும். (க0௫உ)

யதா கிம்புருஷாத்யேஷு க்ருதா
வஸ்தா ஸதாஜநஃ । ஶாகத்வீபாதிஷு ததா
க்ஷீராதி க்ருதபோஜநஃ ॥ க0௭உ

ஹிமசந்த்ர ஹிமநீலாப்ஜ ஸஸ்ய ஸ்படி
காந்திபிஃ । உபலக்ஷித ஸமாஸ்யா
ஷ்டவர்ணகாஃ ॥ க0அஉ

ஜம்பூ த்வீபத்திற் கிம்புருஷ முதலான வெட்டுக் கண்டங்களிலு மெவ்வாறு ஜனங்களுக்கு யுகங்கடோறும் நிலைமாறுகிற தில்லையோ, அவ்வாறே சாகமுதலான மற்ற ஆறு த்வீபங்களிலு மறிக. மேலும் அவ்விடங்களில் ஜனங்கள் க்ரமமாக பால்முதலான ஸமுத்திர ஜலங்களை யாகாரமாகக் கொண்டு பனிச்சந்திரன் பனி கருநெய்தல் பயிர் படிகம் இவைகளின் காந்தியு

ள்ளவைகளாய்ப் பதினாயிரவஞ் துள்ளவைகளாய் துக்க வேச மில்லாம லிருக்கும். (க0எ—க0அ)

[illegible] க0௯

மேருமலையி னடுவிலிருந்து ஏழாவது சமுத்ரம் வரையி லளவு இரண்டுகோடியே யைம்பத்துமூனறு லக்ஷத்து ஐம்பதினாயிர யோஜனையென் றறிக. (க0௯)

[illegible] கக0

அப்பாற் பலவித ரத்னங்களும் மரங்களும் மலைகளு நிறைந்த பொன்மயமான பூமி பத்துகோடி யோஜனை தேவர்கட்கு விநோத நிமித்தம் பிரமாவினாற் சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறது. (கக0)

[illegible] ககக

அப்பால் வெளியில் அலோகமு முள்ளேலோகமு மாகிய லோகாலோகமென்னு மலை பதினாயிர யோஜனை யகலமுள்ளதாயு முயர்ந்த கொடுமுடிக ளுள்ளதாயு மிருக்கும். (ககக)

தஸ்ய ஶ்ருங்கேஷு தீக்ஷ்ணாம்ஸோர் ஹ்ரா
ஸ்வந்த்யாதபசக்தய: | ந தாபயந்தி
வைக்ருஷ்டாநாநாந்யாஸாஹார்தாநி ஹி ||ககஉ உ

அந்த லோகாலோக மலையின் கொடுமுடிகள் மிக வுயர்ந்திருக்கிற படியா லவ்விடத்திற் சூரிய கிரணங்கள் நிலாவைப்போலக் கொடுமையின்றிப் பிரகாசமுள்ளதாக மாத்திர மிருந்துகொண்டு திக்குப்பாலகருடைய விநோதஸ்தானங்களைத் தபிக்காயிருக்கும். (ககஉ உ)

தம: பரஸ்தாத்விஸ்தீர்ணம் லக்ஷாண்யேகோ
நவிம்ஸதி: | சத்வாரிம்ஸத்ஸஹஸ்ராணி ப
ஞ்சத்ரிம்ஸச்ச கோடய: ||　　　ககங உ

அப்பா லந்தகார பூமி முப்பத்தையாயிர கோடியே பத்தொன்பது லக்ஷத்து நாற்பதினாயிர யோஜனையுள்ளது. (ககங உ)

ஸப்தவிம்ஸதிலக்ஷாணி கோடிரேகா
ஸமுத்ரக: | ஹைமாண்டகடாஹக: கோ
டிமாத்ரோ ஹி ஸுஸம்ஸ்தித: ||　　　ககச உ

அப்பாற் கர்ப்போத மென்னும் பெருங்கடல் ஒரு கோடியே இருபத்தேழுலக்ஷ யோஜனை யுள்ளது. அப்பாற் பொன்மயமான வண்டகடாக மொருகோடி யோஜனை யுள்ளது. இவ்வாறே மேருவி னடியிலிருந்து நா

ன்கு பக்கமு மறிக. ஆகக் கூடிய பூலோகத்தி னகலம் நூறுகோடி யோஜனையென் றறிக. (ககச-உ)

இதுவரையிற் பூலோகப் பிரமாணஞ் சொல்லியது. இனி; புவர்லோக முதல் மே லுலகங்களினளவு சொல்கின்றார்.

க்ஷிதிமெக்ஷா ஸுவமெயாகொ ப்ருவ
வ்ராஜொ ஜஹீதமாஸ் | தக்ஷந கொடிஃ
ஸ்வைராக்ஷ ஸ்விதி யவர்ஸாப்யஃ || ககரு-உ

பூதலத்தி லிருந்து துருவமண்டல பரியந்தம் புவர்லோகத்தி னுயரம் பதினைந்து லக்ஷம். அப்பால் தேவதைகளுக் கிடமான சுவர்லோகம் எண்பத்தைந்து லக்ஷ யோஜனை யுயரமுள்ளது. (ககரு-உ)

ஜமொ திகொடியத்ராத்ஸெ ஜஸீசஹ்ரா
தி ஜஸவிவ்ருஜஃ | ஜநா ஷகொடிர்வதிஜஃ
விதத்ர ஜஹ்நஜநாப்யஃ || ககசா-உ

அப்பால் மரீசிமுதலான முனிகளுக் கிடமான மகர்லோகம் இரண்டுகோடி யுயரம். அப்பாற் பிதுருக்களும் ஜன்ஹுமுதலான ருஷிஜனங்களும் வாசஞ்செய்யும் ஜனலோகம் எட்டு கோடி யுயரமுள்ளது. (ககசா-உ)

தபொலாகஸகொடி யத்ராஸெ ஜமா
யொமஸநந்நஃ | ஜிஸ்ஸநக்ஷஸாப்ய
ஸநகப்ய ஜமாதபொஃ || ககஎ-உ

அப்பால் மிகுந்த தவமுள்ள சனந்தன ருபு சன
த்குமார சனகயோகிகள் வாசஞ்செய்யுந் தபோலோக
ம் பன்னிரண்டு கோடி யுயரமுள்ளது. (ககஎ)

தத ஸ்த த்ரியஸ்தாநம் ஸத்யலோகஃ
ஸ்வயம்பூவஃ । ஸாக்ஷாத் ஸரஸ்வதீவேதாஃ கோ
டயோ நவஸப்த ச ॥ ககஅ

ஸாவித்ரீ ச த்ருதி ச த்ராஷ்ட்ரே யத்ர வை
ஊர்த்வ ஸாநுகாஃ। கக௯

அப்பாற் சத்ய ஞானமுள்ள பிரமாவினுடைய ஸ்
தானமாகிய சகலைஸ்வரிய சம்பத்தும் நிறைந்த சத்தி
யலோகம் பதினாறு கோடி யுயரமுள்ளது. அவ்விடத்தி
ற் சரஸ்வதியும் வேதோபவேதங்களும் மூர்த்தியுட னி
ருப்பார்கள். (ககஅ—கக௯)

ததஸ்து தஸ்து ஷட்கோடி உபர்யுபரி
ரவிஷ்ணோஃ । ஸ்தாநே ஜ்யோதிஷ்மதீ வி
தே கோடிரர்த்தகடாஹகஃ ॥ கஉ0

அப்பாற் காந்தியுள்ள விஷ்ணுவினுடைய ஸ்தா
னம் நான்கு கோடி. அப்பால் விசித்ரமான சிவனுடை
ய ஸ்தானம் ஆறு கோடி யுள்ளது. அப்பால் அண்டக
டாகம் ஒருகோடி கனமுள்ளது. (கஉ0)

[illegible]
[illegible]
[illegible] ॥ க௨க

இவ்வாறு பிரமாண்ட கோளத்தி னுயரம் நூறு கோடி யோஜனை. இவ்வளவு கீழும் மேலும் நான்கு பக்கமும் சரியாக நூறு கோடி அண்டகோளமென் றறிக. (க௨க)

[illegible]
[illegible]
[illegible] ॥ க௨௨

அண்டத்தின் கிழக்கை தேவேந்திரனும், தென்கிழக்கை அக்நியும், தெற்கை யமனும், தென்மேற்கை நிருதியும் ரக்ஷிக்கின்றனர். (க௨௨)

[illegible]
[illegible]
[illegible] ॥ க௨௩

அதன் மேற்கே வருணனும், வடமேற்கே வாயுவும், வடக்கே சோமனும். குபேரனும், வடகிழக்கே ஈசானனும் ரக்ஷிக்கின்றார்கள். (க௨௩.)

[illegible]
[illegible] । க௨௩-௭

அதன்மேல் பிரமாவும், கீழே விஷ்ணுவும் இவ்வாறெல்லாரும் சாவதானமாக வெப்போது மதை ரக்ஷிக்கின்றார்கள். (௧௨௩௯)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௨௪௯

இந்தப் பதின்மருக்கும் நியாமகராய்ப் பத்துத் திக்கிலும் பத்து ருத்திர ரிருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஐச்வரியவான்களா யிருந்தபோது அவ்வருத்திரர்களின் பயத்தினாலே தந்தம் ஸ்தானத்தை விட்டு அசையாம லிருக்கிறார்கள் (௧௨௪௯)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௨௫௦

அந்த ருத்ரர் பதின்மரும் பலவித ரூபமுள்ளவர்களாயும் மிகுந்த சக்தியுள்ளவர்களாயும் சூரியகாந்தியுள்ளவர்களாயும் பலவித ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிற அநேக பரிவாரங்களினாலே சூழப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் பெயர் சொல்லக்கேளும்.

[illegible]

[illegible]
[illegible] ௧௨௬

புத்தர் அஜர் வஜ்ரதேகர் கபாலீசர் பிரமர்த்தனர் விபூதி அவ்யயர் சாஸ்தர் பிநாகி திரிதசாதிபர் இப்பதின்மரும் இந்திர நாயகர்கள். (௧௨௬)

[illegible]
[illegible]
[illegible] ௧௨௭

பஸ்மாந்தகர் க்ஷயாந்தகர் ஹரர் ஜ்வலனர் அக்நி உதாசனர் பிங்கலர் காதகர் பப்ருதகனர் இப்பதின்மரும் அக்நிநாயகர்கள். (௧௨௭)

[illegible]
[illegible]
[illegible] ௧௨௮

விதாதா தாதா கர்த்தா யாம்யர் மிருத்யு வியோக்தா தருமபதி அதருமபதி சம்யோக்தா ஹரர் இப்பதின்மரும் யமநாயகர்கள். (௧௨௮)

[illegible]
[illegible]
[illegible] ௧௨௯

நிருதி மாரணர் ஹந்தா க்ரூராக்ஷர் தூம்ரர் லோஹிதர் ஊர்த்வலிங்கர் விரூபாக்ஷர் தம்ஷ்ட்ரீ பீமர் இப்பதின்மரும் நிருதிநாயகர்கள். (கஎகூ)

[illegible]

[illegible] || கஅ0

பலர் அதிபலர் பாசஹஸ்தர் ஸ்வேதர் பத்ரர் ஜலாந்தகர் மகாபலர் மகாபாகு சுநாதர் மேகநாதர் இப்பதின்மரும் வருணநாயகர்கள். (கஅ0)

[illegible]

[illegible] || கஅக

லகு சீக்ரர் வாயுவேகர் சூக்ஷ்மர் தீக்ஷணர் க்ஷயாந்தகர் கபர்த்தி மேகவாகனர் பஞ்சாந்தகர் பஞ்சசிகர் இப்பதின்மரும் வாயுநாயகர்கள். (கஅக)

[illegible]

[illegible] || கஅஉ

நிதிசர் ரூபவான் தன்யர் சௌம்யர் லக்ஷ்மீதரர்

ஜடாதரர் பிரஹ்மதர் ஸ்ரீதரர் ரத்னதரர் பிரசாதர் இப்ப
தின்மரும் சோமகுபேரநாயகர்கள். (க௧௩ உ)

ஸர்வவித்யாதிப ஸர்வஜ்ஞ ஜ்ஞானி ஜ்யே
ஷ்டோ வேதபாரக:। பலிப்ரிய ஸுரேஸ
ஸ்ச பூதேஸா ஈஸநாயகா:॥ க௧௫ உ

சர்வவித்யாதிபர் ஸர்வஞ்ஞர் ஞானி ஜ்யேஷ்டர்
ஈசர் வேதபாரகர் பலிப்பிரியர் சுரேசர் பூதேசர் இப்ப
தின்மரும் ஈசானநாயகர்கள். (க௧௪ உ)

ஸம்புர்விபுர்கணாத்யக்ஷ ஸ்த்ர்யக்ஷ
ஸ்த்ரிதஸேஸ்வர:। த்ரிலோசநோ நபோ
விப்ரேஸ ஸம்வாஹ விவாஹ ஊர்த்வகா:(?)॥ க௧௬ உ

சம்பு விபு கணாத்யக்ஷர் த்ரியக்ஷர் த்ரிதசேஸ்வரர்
திரிலோசனர் நபஸ் விப்ரேசர் சம்வாகர் விவாகர் இப்ப
தின்மரும் ஊர்த்வபாகத்தில் பிரமநாயகர்கள். (க௧௫ உ)

க்ரோதநோ மாருதாஶீ க்ரஸ
நோ பணீந்த்ரஸ்ச ஔதும்பரேஸ்வர:(?)। வ்ருக்ஷோ வ்ருக்ஷ
தரோநந்தோ வஜ்ரதம்ஷ்ட்ரீச விஷ்ணு
கா:॥ க௧௭ உ

குரோதனர் மாருதாசனர் பணீந்திரர் க்ரசனர் உ
தும்பரேஸ்வரர் விருக்ஷர் விருக்ஷதரர் அனந்தர் வஜ்ரர்
தம்ஷ்ட்ரீ இப் பதின்மரும் கீழே விஷ்ணுநாயகர்கள்.

[illegible]

[illegible] ||கரு-சுஉ

அப்பாற் பிரமாண்டத்திற்கு மேல் ஜலமுதலான போகபூமிகள். அவ்விடங்களில் அவ்வவ் ஸ்தானங்களிற் கிடைக்கும் பலங்களை நியமிக்கிற ருத்ரர்கள் எட்டெட்டிப்பெயராக ஐந்துகணங்க ளிருப்பார்கள். (கரு-சுஉ)

[illegible]

[illegible] || கரு-எஉ

பாரபூதி ஆஷாடர் டிண்டி லகுளீசர் அமரேசர் புஷ்கரர் பிரபாசர் நைமிசர் இவ்வெட்டுப்பெயரும் ஜல தத்வத்திற் குஹ்யாஷ்டக மென்று பெயருள்ளவர்கள்.

[illegible]

[illegible] || கரு-அஉ

ஸ்ரீசைலர் ஜல்பர் கேதாரர் பைரவர் ஆம்ராதகேச்வரர் அரிச்சந்திரர் மஹாகாளர் மத்யமர் இவ்வெட்டுப்பெயர்களும் தேஜஸ் தத்வத்தில் அதி குஹ்யாஷ்டக மென்னப்படுவர்கள். (கரு-அஉ)

[illegible]

ஜயாவஹாஃ । ஸநாவஹொத்ரா ஸாடு

ஹாஸா ஸநவஹாஃ வமெ ॥ கநகூ௭

மஹேந்திரர் பீமர் விமலர் குருக்ஷேத்ரர் கயர் நாகலர் அட்டகாசர் நகலர் இவ் வெட்டுப்பெயரும் வாயு தத்வத்தி லிருப்பார்கள். (கநகூ௭)

ஸாணு ஸுவணாக்ஷ ெகாகணு ஹஐ

கணு உஹாலயாஃ । வஸ்த்ராஉா விமுக்தா

ஹ ரு ஐ கொடிஃ வஐெ ॥ கசா௦௭

பவித்ராஷ்டகிதெ ஹா மநவா

தெ ஜி யொஐெ । ஸாணுஷ்டகம் ஆ

ஜெஷ்டு நாமதஃ கயாமிெத ॥ கசாக௭

ஸ்தாணு ஸ்வர்ணாக்ஷர் கோகர்ணர் பத்ரகர்ணர் மஹாலயர் வஸ்திரபாதர் அவிமுக்தர் ருத்ரகோடி இவ் வெட்டுப்பெயர்களு மாகாச தத்வத்திற் பவித்திராஷ்டகரென்னப்படுவர்கள். இனி அகங்கார தன்மாத்திரேந்திரிய தத்வங்களில் ஸ்தாணு வஷ்டகரென்பார்கள். அவர்களின்பெயர் சொல்கின்றேன். (கசா௦௭—கசாக௭)

ஊமிகாட ஐணுமெஸா நு ஆிரணுஉமு

ணகாஃ । ஸுஸுெமஸாள ஸகணு

காலாஜநாவலி ॥ கசாஉ௭

மாகோடர் மண்டலேஸ்வரர் தவிரண்டர் சகலண்டர் ஸ்தலேஸ்வரர் ஸ்தூலேஸ்வரர் சங்குகர்ணர் காலாக்நிசனர் இவ்வெட்டுப்பெயரும் ஆங்கார தத்வத்திலும் தன்மாத்திரையிலும் இந்திரிய தத்வத்திலும் ஸ்தாணுவஷ்டகரென்னப்படுவர்கள். (கசஉ௲)

[illegible]
[illegible]
[illegible] ॥ கசங ॥
[illegible]
[illegible] । கசச

பைசாசம் ராக்ஷஸம் யாக்ஷம் காந்தர்வம் மாஹேந்திரம் சௌம்யம் பிராஜேசம் பிராம்ஹம் இவ்வெட்டும் புத்தி தத்வத்திற் சூக்ஷ்மபுவனாஷ்டக மென்னப்படும்.

[illegible]
[illegible] ।
[illegible] ॥ கசரு

குணதத்வத்தில் யோகீசர்களுடைய ஸ்தானங்கள் அக்ருதம் க்ருதம் பைரவம் பிராம்ஹம் வைஷ்ணவம் கௌமாரம் ஔமம் ச்ரீகண்டம் என எட்டுப் புவனங்கள். (கசரு)

[illegible]

ஸ்திதம் | ஸர்வாதிகாரயோக்யைஸ்ச ஸ
ர்வானுக்ராஹிகைஃ ஸ்ரியஃ || கசாரு

அப்பால் தமது ஸ்தானத்திற்குக் கீழ்ப்பட்ட அதி காரத்தி லிருக்கும் சகல ருத்திரரைவிட மேலான ஐஸ்வரியமுள்ள வீரபத்திரருடைய காந்தியுள்ள ஸ்தானம் யோகீசர்களால் துதிக்கப்பட் டிருக்கின்றது. (கசாரு)

வாமதேவோ பவாநந்தௌ பீமோமாபதிரஜே
ஸ்வராஃ | ஸர்வேஸாநேஸ்வரைகவீ
ரைகஸிவஸம்ஜ்ஞிதாஃ || கசாஎ

உக்ரஃ ப்ரசண்டத்ருஷ்டீஸா
நாம் பங்க்திஸ்ஸம்ஸ்திதாஃ | கசாஎ,ற

வாமதேவர் பவர் அனந்தர் பீமர் உமாபதி அஜேஸ்வரர் ஸர்வேசானர் ஈஸ்வரர் ஏகவீரர் ஏகசிவர் உக்ரர் பிரசண்டதிருஷ்டி ஈசர் இவர்கள் இந்த ருணதத்வ மூர்த்தாவிலே யிருக்கிறார்கள். (கசாஎ—கசாஎ,ற)

தத்ஸாரமஹாரூபமண்டவாஸ்ச
கோட்யாதீதமஹாரூபமதா | ஸர்வாதிகா
ரவிநிர்முக்தைஃ ரூபைஃ ஸர்வார்த்தி
க்ரியாஃ || கசாஅ

இவர்கள் மிருந்த தவத்தினல் மேலிருக்கும் குரோதேசாதிகளை யுபாசித்து அநுக்கிரக கர்த்தாக்களா

ய்த் தங்களதிகாரத்திற் சமர்த்தாளாய்ச் சர்வவிஷய ஞா
னக் கிரியை யுள்ளவர்களா யிருப்பார்கள். (கசஅஅ)

தேஷாமைச்வர்யஸம்பந்நா: ஸ்ரீகண்டாத்யா: ப்ரயா
நாயிகாஸ்தேஷு ஸர்வேஷு । ருத்ரோ ரோதேச
சண்டச்ச ஸம்வர்த்தோ ஜ்யோதிபிங்கல: சூர
ஸா: ॥   கசகூ

பஞ்சாந்தகைகவீரச்ச சிகேதச்ச
தேஷூத்தமா: ।   கருo

ருத்ரோ ரோதேசர் சண்டர் சம்வர்த்தர் ஜோதி பிங்கலர் சூர
கர் பஞ்சாந்தகர் ஏகவீரர் சிகேதர் இவர்கள் முன்சொன்
ன வாம தேவாதிகளுக்குப் பத்துப்பங் கதிகமான ஐ
ச்வர்ய முள்ள பிரதானேச்வரர்கள். (கசகூ—கருo)

ஸர்வேந்த்ரிய ஸ்வதந்த்ர ஸர்வாந்த
ர்யாமீ காரணாச்ரய: । புருஷே நிய
திர்யஸ்ய காலே வசநஸக்திமாந் ।   கருக

புருஷ தத்வத்திற் சகல இந்திரியங் களையுந் தநு
க்களையுந் தனதாகக் கொண்டு சர்வாந்தர்யாமியான ஈச்
வரர் அதிஷ்டாதா, நியதி தத்வத்தில் நியமிக்கின்றவர்
அதிஷ்டாதா, காலத்தில் எண்ணுஞ் சத்தியுள்ளவர் அ
திஷ்டாதா. (கருக)

ஸம்வர்த்த ஜ்யோதிர்வ ஸ

வோத்பவா: | ஏகபிங்கேக்ஷணேசா

நாங்குஷ்டாக்யாஸ்ச ஸம்ஸ்ம்ருதா: || ௧௫௨

மிகுந்த காந்தியுள்ள புவனேசர் மகாதேவர் வாமதேவர் பவோத்பவர் ஏகபிங்கர் ஏகேக்ஷணர் ஈசானர் அங்குஷ்டமாத்ரர். (௧௫௨)

பரமேசஸமாநாஸ்தே ராகவித்யாமத்ய

கலாபதே | அஷ்டாஷஷ்டி ஸ்தாநம்

தே ஸ்தாநாதிபா: || ௧௫௩

இவ்வெட்டுப் பெயரும் பரமேஸ்வர சமான சக்தியுள்ளவர்கள். ராக தத்வம் வித்தியா தத்வம் இவ்விரண்டையு முள்ளே கொண்ட கலாதத்வத்தில் மதங்காதி யாகமங்களிற் கூறியபடி யெட்டெட்டாக விருக்கும் அறுபத்து நான்குபுர மண்டலங்களுக்கு மதிபதிகள்.

அநந்தஸ்த்ரிகலோ கோப்தா க்ஷேமேஶோ

ப்ரஹ்மண: பதி: | த்ருவஸ்தேஜோ

திபஶ்சாந்யோ கஹநேஶஸ்ததா பர: || ௧௫௪

அனந்தர் த்ரிகலர் கோப்தர் க்ஷேமேசர் பிரமபதி த்ருவர் தேஜோதிபர் கஹனேசர். (௧௫௪)

மாயாயாம் காலிகாநாக்யா ஷஞ்சாதி

பதயஸ்ஸ்ம்ருதா: | ஸம்ஹாரசக்ரகாரேண

ஸம்ஸ்திதாஷ்ட விவர்த்திந: || ௧௫௫

இவ்வெட்டுப் பெயரும் மாயையில் அதிகாரிகள், முன்சொன்ன மண்டலேசர்களுக் கதிபதிகள், சம்சார மாகிய சக்ரத்திற் சுழலும் பிராணிகளைத் திருப்புகிற வர்கள். (௧௫௫)

[illegible]
[illegible]
[illegible] ௧௫௬

ஞானமில்லாதவர்கள், சேற்றிற் காலிட்ட பசுக்களைப்போல அகப்பட்டுக் கொண்டு அசக்தர்களாய்த் துக்கப்படுகின்ற பயங்கரமான சர்வப்பிராணிகளுமுண்டா கும்பூமி யிவ்வளவே. (௧௫௬)

[illegible]
[illegible]
[illegible] ௧௫௭
[illegible]
[illegible] ௧௫௭௨

அப்பாற் சுத்தவித்தையிற் பிருகுணீ பிரமவேதா வீ ஸ்தாணுமதி அம்பிகை ரூபிணீ நந்தினீ ஜ்வாலை இவ்வேழு வித்யேஸ்வரிகளும் கீழ்ச்சொன்ன மண்டலேஸ்வரர்களாலே துதிக்கப்பட்டிருப்பர்கள்; இவர்கள் சப்தகோடி மந்திரங்களுக்கு மீஸ்வரிகள். (௧௫௭—௧௫௭௨)

[illegible]

[illegible] ॥ ௧௫௮

அப்பாலீஸ்வர தத்வத்தில் இவ் வித்தியேஸ்வரிகளுக்கு மேற் பிரகாசமான காந்தியுள்ள வித்யேஸ்வரர் அனந்தாதிகளைப் பிரேரிக்கு மீஸ்வரராலே யபிவியக்தமான ஞானக்கிரியை யுள்ள ருத்ரகணங்க ளெல்லெட்டுப் பெயராற் சூழப்பட்டிருப்பர்கள். (௧௫௮)

[illegible] ॥ ௧௫௯

அங்குள்ள ருத்ரகணங்களாவன ? உச்சுஷ்மர் அம்பார் சண்டர் மகாவீரியர் முதலானவர்கள். அவ்விடத்தில் திக்குப்பாலகர்கள் தேவிஸ்கந்தர்சண்டேசர் விருஷபேஸ்வரர் முதலானவர்கள். சாஸ்திரங்கள் நிஸ்வாசகாரிகை முதலானவை. பதிகள் அனந்தாதிகள். (௧௫௯)

[illegible] ॥ ௧௬௦

அந்த அனந்தாதிகளின் பெயர்களும் ஸ்வரூபங்களும் முன்னமே பிரஸ்னை செய்யும்போது சொல்லியாயிற்று. (௧௬௦)

𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍇 𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌕𑌲𑌾𑌦𑌿 𑌚

𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌽𑌷𑍍𑌟𑌧𑌾 𑌨𑌿

𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌕𑌲𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ॥ ௧௬௧௭

அப்பாற் சதாசிவ புவனத்திற் பஞ்சப்ரம்ஹ ஷடங்கங்களையும் சதாசிவர் ஜ்வாலினிமுதலான சகள நிஷ்களரான வெட் டுருத்திரர்களையும் பரிவாரமாகக் கொண்ட சதாசிவதேவ ரிருக்கின்றார். (௧௬௧௮)

அப்பால் பிந்துவில் நிவ்ருத்தி முதலான கலாதிபதிகள் நால்வரு மிருக்கின்றார்கள்.

𑌨𑌾𑌦𑍇 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌕𑌲𑌾 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍀 𑌚

𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑌾𑌃 । 𑌤𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌾𑌮𑍀𑌶𑌾𑌃

𑌶𑌕𑍍𑌤𑌯𑌃 𑌶𑌾𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌃 ॥ ௧௬௨௭

நாதபுவனத்தில் ஸ்வதந்த்ராகமத்திற் கூறியபடி கோடிசந்திரப் பிரகாசராயும் பத்துக்கை மூன்று நேத்திர முள்ளவராயும் வெண்டாமரை யாசனத்தி லிராநின்றும் சந்திர சூடராயும் ஐந்துமுக முள்ளவராயு மிருக்கின்ற நாதேச்வரரிருக்கின்றார்.

சத்தியிற் சகலமான சத்தியுள்ளவர்களுக்குந் தலைவரான பரமேச்வர ரிருக்கிறார். அங்கேயே நாதபிந்துவாதிக் கிரமமாகச் சகலஜகதுற்பத்தி யேதுவான குண்டலினீ சத்தியும் புவனபதிகளான வாகீசர்களு மிருக்கின்றார்கள்.

அப்பாற் சகல காரணங்களையுங் கடந்து நிஷ்கள மாய்ப் பரமான சிவஸ்வரூப மிருக்குமென்றறிக. கசுஉ௰

பிரச்னை.

ஸதாசிவ சிவாந்தாயாம் க்ஷிதௌ தாணுவ
வைஷ்ணவீக்ஷு । ஸர்வாதிசய விஶ்ராந்தௌ
அத்வனாம் வததாந்தகம் ॥ கசுஙஉ

சதாசிவ தத்வத்திற்கு மேற் சிவதத்வம் வரையி லிருக்கு மத்வாவில் நிவிர்த்தியாதி கலேஶ்வரர்களுக் கும் நாதேஶ்வரர் முதலானவர்களுக்கும் திவ்ய தேக யோகஞ் சொல்லியது, அந்தச் சதாசிவ தத்வத்தில் தானே சர்வாதிசயங்களுக்கு முடிவு. அதற் கப்பால் நிஷ் கள சிவந் தவிர வேறொரு அதிசய தாரதம்ய மில்லை யே! அவ்வாறிருக்க அப்பாற் பதிபேதங்க ளெப்படிச் சொல்லலாம். (கசுஙஉ)

உத்தரம்.

ஶம்ஶாந்தாதீத ஶாந்தம் தத்வம் ஸதா
ஶிவம் ஸ்ம்ருதம் । ஸ்வ நாநாவித நாதா
தி கலாநாம் பதிஶ்சிவாத் ॥ கசுசஉ

அனந்தேசாதி வித்யேஶ்வரரோடு கூடிய ஈஶ்வ ர தத்வத்தைக் கடந்து நிஷ்கள தத்வம் வரையிற் சதா சிவ தத்வமென் றறிக. இவ்விடத்திற் புவனங்களும் நாதபிந்துவாதி கலைகளே; சிவனன்றி வேறொரு பதி யுமில்லை. (கசுசஉ)

யஃ பதிபேதோஸ்தி ஸமா
ஸே ஶக்திபேதவத் । க்ரியாபேதா
துபசாரேண தத்பேதஸ்தாநபேதஜ: ॥ கருரு௨

ஆறு லிவ்விடத்திற் பதிபேதஞ் சொல்லியது இ
ந்தச் சாஸ்திரத்திற் சத்திபேதஞ் சொல்லியதுபோற்
செய்கையின் பேதத்தாலும் ஸ்தான பேதத்தாலும் உ
பசாரமாகச் சொன்னது. (கருரு௨)

அந்தச் செய்கைபேதத்தைத் தெரிவிக்கும்பொரு
ட்டு பிந்துபுவனத்தி லிருக்கும் நிவ்ருத்தியாதி கலேஶ்
வரர் நால்வருக்கும் பொதுவான வுருவஞ் சொல்கின்
ருர்.

கலாத்ரயீஸம் யாபி: ஶக்திபி: பும
தேஜஸாம் । தா நிவ்ருத்யாதிஸம்ஜ்ஞாஸ்யு:
ஸ்தச்சக்தாஸ்தத்புவேஶ்வரா: ॥ கருரு௨

எந்தச் சத்திகளாலே புருஷசத்திகளைப் பிரகாசிக்
கச்செய்கிருரோ அவைகள் நிவ்ருத்திமுதலான பெயரு
ள்ளவைகள். அந்தச்சத்தியுள்ளவர்கள் அந்தப் புவனே
ஶ்வரர்கள். (கருரு௨)

இனி தனித்தனி ரூபஞ்சொல்கிருர்.

நிவ்ருத்யதி ஹ—ஞதாநி யயா ஸாஸ்ய

நிவர்த்தகா | நிவ்ருத்திரிதி தஸ்யாஸ்தானம் ச
தேஷோபி நிவ்ருத்திமான் || க௱எ௨

எந்தச் சத்தியினாலே பதினான்குவித பூதசர்க்கத்தையும் ஜனனமார்க்கத்தி லாசையையும்விட்டுக் கைவல்யாபிமுகமாகச் செய்கிறாரோ அவ்வாறு திருப்புகிற சத்திக்கு நிவ்ருத்தியென்று பெயர். அந்தப் புவனமும் நிவ்ருத்திபுவனம். அங்கிருக்கு மீஸ்வரனுக்கும் நிவ்ருத்திமா னென்று பெயர். (க௱எ௨)

இவ்வாறு ஸ்தானபேதத்தாலும் கிருத்ய பேதத்தாலும் பதிபேதமென்றறிக.

நிவ்ருத்தஸ்ய ஸம்ஸாரே யயா ப்ர
த்யவரோதனா | ப்ரதிஷ்டேதி ப்ரதிஷ்டா
ஸா ஸ்தானம் தஸ்யாஸ்ச தத்பதி: || க௱அ௨

இவ்வித கைவல்யாபிமுகனைத் திரும்பினவனுக்கு மீட்டுந் தாழ்ந்த சம்சார மார்க்கத்திற் கதியில்லாமல் தடுத்து நிறுத்துகிற படியால் அந்தச் சத்திக்குப் பிரதிஷ்டையென்று பெயர். அந்த ஸ்தானமும் பிரதிஷ்டையே! அதற்கதிபதியும் பிரதிஷ்டாவா னென்னப்படுவார். (க௱அ௨)

த்ருஷ்டாத்ருஷ்டவிஷயம் யயாஜ்ஞானம் ததா
த்மன: | ஸா வித்யாஸ்தானமேஷைவ
வித்யேஸ்வரஸ் ததீஸ்வர: || க௱௯௨

எந்தச் சத்தியால் அணுவிற்குச் சப்தாநுமானங்களை விட்டு நேரிட ஸ்வரூப சாக்ஷாத்காரத்தைக் கொடுக்கிறதோ அந்தச் சத்திக்கு வித்தையென்று பெயர். அந்த ஸ்தானமும் வித்தையே! அதிபதியும் வித்யேசர்.

[illegible] ॥ ௧௭௦

எந்தச் சத்தியினால் அணுவிற்குச் சகல துக்கங்களையுஞ் சாந்தி செய்கிறதோ அதற்குச் சாந்தியென்று பெயர். அந்த ஸ்தானமும் சாந்தியே! அதைச் செய்பவரும் சாந்திமான். (௧௭௦)

இவ்வாறு விந்துகலைகள் நாலையுஞ் சொல்லி யினிநாதகலைகளைச் சொல்கின்றார்.

[illegible] ॥ ௧௭௧

[illegible] । ௧௭௨

முமுக்ஷுவான ஆன்மாவிற்கு மேலுங் கீழு மெங்கு முண்டாகும் பிரகாசமானது எந்தச் சத்திகளாலே பெரிதாகவும் மிகப்பெரிதாகவும் மிகமிகப்பெரிதாகவும் செய்யப்படுகிறதோ அந்தச் சத்திகள் மூன்றிற்கும் வ

ரிசையாக இந்திகை தீபிகை ரோசிகையென்று பெயர். அந்த ஸ்தானங்களுக்கு மதேபெயர். அந்தச் சத்தியுள் ளவருக்கும் இந்திகாவான் தீபிகாவான் ரோசிகாவான் என்றுபெயர். (கஎக—கஎஉ)

மேல் மோசிகை ஊர்த்வகை என்னுஞ் சத்திகளி ன் வியாபாரஞ் சொல்கின்றார்.

ஸவ்ரூஜ ஸுாதிமொஷவி மியொஜஸு
ஜ்ஞாம்ஸதஃ । வ்ருஹாஷி தத்யாஸாஸ ரு
ஜொவிகா தத்ஷணுதஸ ॥ கஎங

ஜொவகஸஸ க்ரியாக்ஷத்வ யமெயஸாநல
கஸொதிதழ । ஷொய்ஷ்மா தத்கெஷுகி
தஷீஸஷொய்ஷ்மாவகிஃ ॥ கஎச

வித்யேசர் முதலான வதிகாரிகளுக்குச் சர்வஞ்ஞ த்வாதி குண மிருந்தபோதிலும் மலாம்சஞ் சிறி தி ருப்பதா லுண்டான பிரேரிக்கப்படுந் தன்மை யாதொ ருசத்தியாலே விடுவிக்கிறாரோ அதற்கு மோசிகையெ ன்றுபெயர். அந்தஸ்தானமும் மோசகமென்னப்படும். அதைச் செய்பவரும் மோசகராவர். எந்தச்சத்தியா லே அவ்வா றநுக்கிரகிக்கப்பட்ட வாத்மாவை ஊர் வரணைகச் செய்கிறாரோ அந்த சத்திக்கு ஊர்த்வகை யென்றுபெயர். அந்தஸ்தானமு மூர்த்வக மென்ன ப்படும். அதற் கதிபதியும் ஊர்த்வகேச ரென்னப் படுவர். (கஎங—கஎச)

யே தீக்ஷாஜ்ஞானயோகேப்ய: ஸாயுஜ்யம்
யோகத: | தே தத்ர புக்த்வா போகாம்ஶ்ச
ப்ராப்நுவந்தி பரம் பதம் || கஎரு

ந ச ஸ்ருஷ்ட்யாதி க்ருத்யானி ஸாதயந்தி
ஶாந்தி தே யத: | கஎருஉ

யாரொரு பெயர்கள் மேற்சொல்லும் பலவித புவ
னங்களிற் கூட்டிவைக்கும் பலவித வுபதேசரூபமான
சைவதீக்ஷா ஞானயோகத்தால் எந்தப் பதத்தைய
டைந்திருக்கிறார்களோ அவர்க ளந்தப்பதத்தி லிருக்கு
ம்வரையில் ஒப்பற்ற ஆனந்தமயமான போகத்தை ய
டைந்து பின்பு பரமான சிவசமான சாயுஜ்யபதத்தை
யடைகிறார்கள். ஆனா லவர்கள் நிரதிசய நிர்வாணாநந்த
நிஷ்டர்க ளாகையாற் சிருஷ்டியாதி கிருத்யங்க ளொன்
றுஞ் செய்கிறதில்லை. (கஎரு—கஎருஉ)

இதி ஸதாஶிவம் தத்வம் வ்யாக்யாதம்
ஸம்க்ஷேபதஸ்தவ | கஎசு

இவ்வா றீஶ்வர தத்வத்திற்கு மேல் நிஷ்கள சிவ
தத்வம் வரையிற் சதாசிவ தத்வஸ்வரூபஞ் சுருக்கமா
க வுமக்குச் சொல்லப்பட்டது. (கஎசு)

அவரது சத்திதத்வமு மதற்கு ளடங்கின தென்கி
றார்,

[illegible] கஎஎ

சத்தியு மிவ்வாறே வியாபகையா யிருக்குமென்
றறிக. இவ்வாறு சொல்லிய முறையே யிந்தச் சதாசி
வநாதர் ஸ்திதியாதி வியாபார வசத்தினாற் பஞ்சப்ரம்ம
சம்பந்தங்களான தாரை ஸுதாரை தரணீமுதலான மு
ப்பத்தெட்டு கலைகளுடன் கூடியிருப்பர். அந்த பஞ்சகி
ருத்யமு மவருடைய இச்சையினாலே முதலி லேற்பட்
டது. கிருத்ய மில்லாதவேளையி லெப்போது மவர் நி
ஷ்களரே. (கஎஎ)

[illegible] கஎஅ

ப்ருத்வீ பிரகிருதி மாயை சுத்தவித்தை விந்து நா
த கலைக ளொன்பது இவை பந்த ஸ்தானங்களாகும்.
இதிற் பார்த்திவ பிராகிருத மாயா தத்வங்கள் மூன்று
ம் பாசபந்தமா யிருக்கும். நாதகலைகளில் நடுவிலிருக்
கும் ரோசிகையென்னுங் கலைக்குக் கீழ்ப்பட்ட இந்தி
கை தீபிகை கலை யிரண்டும் பிந்து கலை நான்கும் சுத்த
வித்தைமாயை பிரகிருதி பிருத்வீ ஆகப்பத்தும் மூக்கி
யமான பந்தஸ்தானமென்று சிலர்சொல்வார்கள். விந்து
நாத கலையொன்பதும் சுத்தவித்தையும் இந்தப் பத்து

ம் முக்கிய பந்தஸ்தானமென்பர் சிலர். நாதகலை முடிவு
வரையிற் கீழ்ப்பட்ட ஸ்தானங்களெல்லாம் நிரதிசய
சர்வஞ்ஞத்வாதி பாரமேஸ்வர ஸ்தானத்திற்குப் பிரதி
பந்தக மாகையாற் பாசங்களே பந்தஸ்தானங்க ளாகு
மென் றறிக. (௧௭௮)

இனி முன்சொன்ன ககனேசர் முதலானவர்களி
ன் ஸ்தான மிவ்வளவு அளவுள்ள தென்பதைக் கூறுகி
ன்றார்.

[illegible]
[illegible]
[illegible] ௧௭௯

வித்தையென்ப திவ்விடத்தில் மாயையென் றறிக.
மாயைக்குக் கீழே கலைக்குமேலே ககனேசர்முதலான ரு
த்ரர்களின் ஸ்தானங்களென்று சாஸ்திரங்களிற் சொ
ல்லப்படுகிறது. அந்த மாயைக்குங் கலைக்கு நடுவி ன
ளவு இவ்வளவென்று புத்தியாற் குறிப்பா யறியவே
ண்டியது; மாயாதத்வ மனந்தமென்று சொல்லுகிறப
டியால். (௧௭௯)

[illegible]
[illegible]
[illegible] ௧௮௦

இவ்வாறு சொல்லிய முறையே வுற்பத்தியுள்ள சுத்
தாசுத்த மார்க்க மிரண்டிற்கு முற்பத்திக்குப் பிரதி

லோமமாகச் சுத்தாத்வாவிற்குப் பராசக்திவரையிலும் அசுத்தாத்வாவிற்கு மாயைவரையிலும் ஒடுக்க மறியவேண்டியது. (கஅ௦)

சுருக்கமாகச் சொன்ன சங்காரக்கிரம விசேஷத்தை யறிய இச்சைகொண்டு முனிவர் பிரச்னை செய்கிறார்.

வ்யஸ்தஸ்யாஸ்ய ஸமஸ்தஸ்ய விஷய ஸம்ஹ
க்ரமம் கியாந்து | கஸ்மாத்ஸம்ஹாரஸ்ய ஜகதந்து
ஸர்வஜ்ஞ ஸம்ஹாரம் க்ஷயம் ப்ரப்ரூஹி || கஅக

பகவானே! தேவரீர் சர்வாகமார்த்தமுந் தெரிந்தவராகையால் வியஸ்தமான பிரகிருதிமுதலான அசுத்த மார்க்கத்திற்கும் சமஸ்தமான சத்தி தத்வம்வரையி லிருக்கும் சுத்தமார்க்கத்திற்கும், சங்காரமானது எவ்விதமாய் எத்தனைகால முண்டாயிருக்கும்; அதைத் தெரியச் சொல்லவேண்டும். (கஅக)

இதற் குத்தரம்.

ஸஹஸ்ராப்தே ஸமஸ்தஸ்ய வ்யஸ்தஸ்யா
வாஞ்சிதோ லய: | ஸம்ஹாரே ப்ரவா ஷீ
தேஷ் காலஷ் க்ஷ்ராமோ ஜாயதேதாம் || கஅஉ

எப்போது மநேக புருஷர்களுக்குப் போகசாதனமான தநுகரண புவனாதிகளை யுண்டாக்குவதாற் குறைந்த சத்தியுள்ள மாயா தத்வத்திற்கு மீட்டும் காரியங்க

ளை யுண்டாக்கும்படியான விசித்ரசத்தி கூர்மைபாகும் பொருட்டும், சம்சார மார்க்கத்தி லிளைப்படைந்த சம் சாரிக ளிளைப்பாறும் பொருட்டும், வியஸ்தமான பிரகி ருதி முதலானவற்றிற்கு நடுவி லவாந்தரப் பிரளய மு ண்டாகின்றது. தன்னிச்சையால் பரிக்ரகிக்கப்பட்ட சதாசிவாதி சகள ரூபங்களி னுபசங்கார காலமான ம காப் பிரளயத்திற் சமஸ்தமான சத்தியந்தமான சுத்தா த்வாவிற்குப் பிரளய முண்டாகிறது. சிருஷ்டியு மிப் படியே வியஸ்த சமஸ்தக் கிரமமாக வுண்டாக்கும் பர அபரர்களான வித்யேஸ்வரர் முதலான அநேக அதிகா ரிகளாலே செய்யப்பட்ட படியால் வியஸ்தமென்றும் பரமேஸ்வரர் இச்சையாற் பிரேரிக்கப்பட்ட அனந்தா திரூபமாக விருந்து சிருஷ்டிக்கிறபடியால் சமஸ்தமெ ன்றும் சொல்லப்பட்டது. இந்தப் பிரளயத்தின் கால மெவ்வள வென்னில்? இதற்கு ஸ்திதி பூர்வமாதலா ல் ஸ்திதிகாலத்தி னளவை முன்னஞ் சொல்கின்றேன் கேளும். (௧அ௨)

சதுர்யுகஸஹஸ்ராணி ஸஹஸ்ராணி
ஶதானி ச | நிமேஷாதாவ தத்ஸம்ஸா
த்ர ஸாமான்யா பராஸ்மிகே || ௧அ௩
விஷ்ணோர்வர்ஷஶதம் ஶைவமேகவர்ஷம்
ஸ்ம்ருதம் நிமேஷம் | ௧அ௪

கிருதயுகமுதலான நான்குயுகமு மாயிரமுறை தி

ரும்பின் பிரமாவிற் கோர் பகலாகும். அவ்வளவே இ ரவும். ஆகக் கூடிய தினங்கள் முன்னூற் றறுபதானால் ஓர் வருஷம். அவ்வருஷம் ஒன்று பத்து நூறு இதுமுதலாக வரும் கணக்கில் பரார்த்தமென்னும் கணக்குவரையி லானால் இந்த வியஸ்தமான அசுத்தாத்வாவிற்குப் பிரளயமாகும். இந்தப் பிரகிருதிமுதலான வுபாதானகாரணங்கள் சிருஷ்டிக்கு விபரீதமாய்த் தலைகீழாகச் சம்ஹரிக்கப்படும். (௧௮௧—௧௮௨)

அப்போதத் ததிகாரிக ளெவ்வித மிருப்பவ ரெனில் ?

> ததா ருத்ரஶதம் வீரஶ்ரீகண்டாத்ய
> யே ऽணவா: । [illegible] ஜகத்ஸ்வம்
> ஸூக்ஷ்மம் ஸம்ருக்ஷ [illegible] ॥௧௮௨
> ப்ரக்ருதிஸ்தாஶயா [illegible]
> [illegible] ॥ ௧௮௩

அப்போது சதருத்ரர்களும் வீரபத்ர ஸ்ரீகண்டதேவரும் குரோதேசர் சண்டர் சம்வர்த்தர் முதலான அதிகாரிகளும் தங்களதிஷ்டிக்கத் தக்கதாயும் அப்போது சத்திருபமாதலாற் சூக்ஷ்மமாயுமிருக்கின்ற ஜகத்தையும் பிரகிருதியி லிராநின்ற கர்மவாசனையு முள்ளவர்களாயும் ஞானிமுதல் கலையையுடையவர்களாயு மிருக்குந் தத்வங்களா லுண்டாக்கப்பட்ட சூக்ஷ்மதேக முள்ளவர்களாயு மிருக்கின்ற அணுக்களையும் தமது சத்தியா லதி

டித்துக்கொண்டு அந்தப் பிரளயகால முடிவுவரையி லிருப்பார்கள். (கஅசு—கஅரு)

ஶ்ரீவைஷ்ணவ உகு ஹாஙு—ஙு ஜூணாயிவதீ
ரிதாஃ। காமௌஜமஷ் ஸஊ—ஷ்வாஜ ஸா
யிகாரஂ வுகு—வ—ிதெ॥   கஅசு

பின்பு அவாந்தர சிருஷ்டி யாரம்பகாலத்திற் பரமேஸ்வர னிச்சையாலேவப்பட்ட அனந்தாதி வித்யேஸ்வரர்களாற் பிரேரிக்கப்பட்ட மண்டலேசரொன்று மதிகாரி, ருத்ரர்களாலே பிரவர்த்திக்கப்பட்டவர்களாய்க் கொண்டவர்கள். அந்தக் காலத்தில் ஜகத்தை யுண்டாக்கித் தங்கள்தங்க ளதிகாரத்தைச் செய்வார்கள்.

இவ்விடத்திற் பிரகிருதியிற் கர்மவாசனை யிருக்குமென்று சொன்னதிற் சந்தேகித்து ருஷி வினவுகிறார்.

கஊ—ு யஊாஷ்கஂதஷ்வ ஶ—ணெகூஙு ஊதள
ஷிதழ்। ஶ—ணிெநா ஙஶ—ிணாெவெக்ஷி
வுகூுதா வ—வுெதகூயழ்॥   கஅள

தருமாதரும ரூபமான கன்மங் குணமாதலாற் புத்தியிலிருக்கும் குணியைவிட்டுக் குண நீங்காதாகையாற் பிரகிருதியி லிருக்குமென்று எவ்வாறு சொல்லலாம். (கஅள)

இதற் குத்தரம்.

ஸதுவெ—ஷி ஶ—ணஃகஊ—ு ஙாமெவெ

[illegible] ॥ ௧௮௮

கன்மம் புத்திகுண மென்பதும், குணியைவிட்டுக் குணம் நீங்காதென்பது முண்மை. ஆனும் சரீரேந்திரிய விஷய போக பூமிகளெல்லா மவ்விடத்தி லிருப்பதா லுபசாரமாகச் சொல்லியது. (௧௮௮)

இவ்வா றுபசாரமாகச் சொல்லுவதற்குத் திருஷ்டாந்தம்.

[illegible] ॥ ௧௮௯

முக்யார்த்தஞ் சொல்லக்கூடாத விடத்திற் கௌணவிருத்தியாகச் சொல்லு மர்த்தத்தை லக்ஷணையென்று தெரிந்தவர் சொல்கின்றார்கள். அஃதெங்ஙனே யென்னில்? கட்டில் கூப்பிடுகிற தென்னுமிடத்தில் கூப்பிடும் பிள்ளைக்குக் கட்டி லாதாரமாகையா லாதாரத்தி லக்ஷணை. நெல்லைப் பெய்தானென்னு மிடத்தில் அதற்குக் காரணமான மழையில் லக்ஷணை. பஞ்சு வஸ்திரமென்னுமிடத்துப் பஞ்சின்காரியமானதில் லக்ஷணை. கங்கையி லிடச்சேரியென்னுமிடத்துக் கங்கையின் சமீபமான கரையில் லக்ஷணை. பிக்ஷை யிருக்கச் சொல்லுகிறதென்னுமிடத்துப் பிக்ஷை யிருந்த அன்னவியஞ்சு

றுதிருப்தியேதுவாதலால் உபகாரலக்ஷணை. சிங்கம் பிள்ளை யென்றுமிடத்துச் சிங்கத்தின் தருமமான சௌரியாதிகுணமிருப்பதால் தருமாநுகார லக்ஷணை. சுமக்கிறவன் மாடென்று மிடத்து மாடுபோல் முதுகில் சுமப்பதால் ஆகாராநுகாரலக்ஷணை. இவ்வாறுமுக்கியார்த்தஞ் சொல்லக்கூடாத விடங்களிலெல்லாம் உபசாரமாக லக்ஷணை சொல்கின்றார்கள். (௧௮௯)

ஏவம் குணாதிஸர்காணாம் பரார்த்தே
குணகாரணே । கலௌ ச
மாயயா ஸாதிகாரபராக்ஷயே ॥ ௧௯௦
தந்நிவ்ருத்தௌ நிவ்ருத்தேஷு தேவாத்ய-
திகாரிணஃ । ஸ ஸ்ருஷ்டிஸ்த்யாதிகோ யஸ்ஸ்வா-
திகார ஸமாஶ்ரயஃ ॥ ௧௯௧

இப்படிக் குணமுதலான சிருஷ்டிகட்குப் பரார்த்தமென்னுங் காலமுடிவில் லயமுண்டாகிற தெப்படி யென்னில்? இந்தக் குணங்கட்குக் காரணமான அவ்யத்த மானது கலையி லொடுங்குகிறது. அந்தக் கலை தன் னதிகாரத்தை விட் டொழிந்த மாயையி லடங்குகிறது. மாயாதிகார மொழிந்தவுடனே அந்த மாயாதிகாரிகளின் சிருஷ்டியாதி யதிகாரம் மாயையை யாச்ரயித்த தாகையா லவர்களு மொழிந்திருக்கிறார்கள். (௧௯௦—௧௯௧)

இப்படி யசுத்தாத்வாவின் சங்காரஞ் சொல்லியாயிற்று. இனி, சுத்தாத்வாவின் சங்காரஞ் சொல்கின்றார்.

[illegible] ககூஉ

[illegible] ககூஉ௨

இவ்வாறு மந்திரேசர் முதலான அனந்தாதி மந்திர மகேஸ்வரர் தங்க ளதிகார மொழிந்தபடியாற் பரகைவல்யத்தை யடைந்தபோது சுத்த வித்யாதத்வ மானது சதாசிவதத்வத்தி லொடுங்குகிறது. அந்தச் சதாசிவதத்வம் விந்துவிலும், விந்து நாதத்திலும், நாதம் பராசத்தியிலு மொடுங்குகிறது. கலையின் வ்யாபாரத்தை யெல்லா மொடுக்கிக்கொண்ட அந்தச் சத்தியை சாக்ஷாத் பரமேஸ்வரர் தமக்குள்ளே உபசங்காரஞ் செய்து கொள்ளுகிறார். (ககூஉ—ககூஉ௨)

[illegible] ககூ௩

இந்தப் பிரகாரம் பரமேஸ்வரர் சம்சாரிகளுக்கும் மாயைக்கும் இளைப்பாற்றுதற் பொருட்டுத் தமது ஞானசத்தியாலே பிரளயத்தை யுண்டாக்கி மறுபடியும் முன்போலவே சிருஷ்டியிலே பிரவர்த்திக்கிறார். (ககூ௩)

[illegible]

[illegible] ॥ கக௪௨

இந்தப்படி சுத்தாசுத்தாத்வாக்களிலே தத்வங்களும் பாவங்களும் புவனங்களும் சரீரங்களும் தத்தங் காரணங்களி லிலயிக்குமென்று சுருக்கமாகச் சொன்னேன்.

பிரச்னை.

[illegible]

[illegible] ॥ கக௫௩

சுத்தாத்வாவில் பாவங்களுக்கு லயஞ்சொல்லியது, அவ்விடத்து வித்தை சதாசிவம் விந்து நாதம் பராசக்தி என்று ஐந்து ஸ்கந்தரூபமான சுத்தாத்வாவிலே பாவங்களும் பிரத்யயங்களு, மெங்கே யிருக்கும். (கக௫௪)

இதற் குத்தரம்.

[illegible]

[illegible] ॥ கக௬௨

[illegible]

நா₃த₃ப்ரத்யக்ஷஸ: | ஶக்தே ஜந்மநாஜ்ஞா
ஷ்டா₂ வைஶேஷ ஹாவாத்மக: ஸ்ம்ருதா:‖ கக௭

பஞ்சத்ர தந்மாத்ரகை: ஸ்ம்ருத ஸூக்ஷ்மா
த்ர பஞ்சகே | ஸர்வக்₃ராஹகஶக்தேஶ்ச
த்ரயா ஜாத்ரா: ஸர்வ மேகத்ர ஸம்ஸ்ம்ரு
தா: ‖ ககஅ

சுத்தாத்வா பஞ்ச ஸ்கந்தமானபோதிலும் அதில் விந்து தத்வ மடங்கி யிருக்கிறபடியால் பாவப் பிரத்தியயங்களு மிருப்பதற்கு விரோதமில்லை. அஃதெவ்வாறென்னில்? சூக்குமமாகிய பரநாதமே கலை காலம் ராகம் வித்தை புருடன் என்னும் ஐந்து தத்வங்களுக் காச்ரயமாய்ப் பஞ்ச கலையென்று பெயர்கொண்டு ஸ்தூலநாத மாகிறது. விந்துவானது அவ்வியக்தம் குணதத்வம் புத்திதத்வம் ஆங்காரம் என்னும் நான்குபாசக் கிரந்திக் காதாரமாய்ச் சதுஷ்கலை யென்னப்படுகிறது. அதில் ஆங்காரத்தில் மனமுதலான இந்திரியங்களும், புத்தியில் முன்சொன்னபடி பாவப் பிரத்யயங்களு மிருக்கும். பஞ்ச மந்திர மூர்த்தியான சதாசிவ தேவர் பஞ்ச தன்மாத்திரைகளை யதிஷ்டித்துக்கொண் டிருப்பார். சூக்குமதேகத்தை யுண்டாக்கு

ம் பூதங்களில் மந்திரேசர்கள் வியாபித் திருப்பர். பிரு
திவியாதி ஸ்தூலபூதங்களிலே மந்திரங்கள் வியாபித்தி
ருக்கும். இவ்வாறு சுத்தாத்வாவு மிவற்றையெல்லா முள்
ளடக்கிக்கொண் டிருக்குமென்பது கருத்து. (ககூகூ௦
—ககூஎ௦—ககூஅ௦)

உரைத்த வித்யாபாதத்தை முடிக்கவும், மேலு
ரைக்கவேண்டிய கிரியாபாதத்தைச் சூசிப்பிக்கவும் ஸ்
லோகஞ் சொல்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ககூக௦

இவ்வாறு சொல்லப்பட்டதாயும் பசுசாஸ்திரங்க
ளிற் பதிந்த ஞானமுள்ளவர்களா லறியப்படாததாயு
மிருக்கின்ற மலம் கன்மம் மாயை முதலான மிகுந்த பா
சங்களாகிய வலையை நீக்குவதற் கேது வேதென்னில்?
மேற்சொல்லும் தீக்ஷாக் கிரமத்தினாலே பிரகாசமான
தடையற்ற வல்லமையுள்ள சிவமந்திர சம்பத்தாகும் தீ
க்ஷாக் கிரியானுஷ்டானத்தினற் கூர்மையான தனது ச
த்தியுள்ள சிவமந்திர சம்பத்தானது மலமுதலான பா

சங்கைப்போக்கி மேலான சிரேயஸிற்கு நிமித்தமா
குமென்பது கருத்து. (கருகூ-ம)

பதின்மூன்றுவது, அத்வ ப்ரகரணம்
முற்றிற்று.

ம்ருகேந்த்ர வித்யாபாதமுடிந்தது.

ம்ருகேந்த்ராகம வித்தியாபாதம்
படலம்—கரு—கூடிய
ஶ்லோகம்—சசநிம.



சமஸ்கிருத உரையாசிரியர் வாக்யம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥ க

இந்த மிருகேந்திராகம வியாக்யானத்தில் ஏதாவ
தொருசொல் உபயோக மில்லாததாயும் பிரகிருதமா
காமலு மிருந்தபோதிலும் அது சமயத்திற்குத் தக்க

படி உசிதமான பிரகிருத வஸ்துவை விசேஷித்து விசாரிக்கும் பொருட்டாதலாற் பிரகிருதத்தில் நிஷ்பிரயோசன மாகாது. ஆதலா விதனிடத்தில் இந்தச் சாஸ்திரார்த்தந் தெரிந்தவர்களுக்கு மிகவு மன்புண்டாகக் கடவது. (க)

𑌶𑌾𑌙𑍍𑌕𑌰𑌕𑌣𑍍𑌠𑍇𑌃 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌣𑍍𑌠𑌾𑌦𑌵𑌾-
𑌪𑍍𑌤𑌸𑌂𑌵𑌿𑌦𑌾 । 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌕𑌣𑍍𑌠𑍇𑌨 𑌜𑌾𑌤𑍇𑌨
𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 𑌕𑍃𑌤𑌾 ॥ ௨

சங்கரகண்டருடைய குமாரராகிய பட்டவித்தியாகண்ட ரிடத்தி லநுக்கிரகம்பெற்ற அவர் குமாரரான பட்டநாராயணகண்ட ரென்பவ ரிந்த மிருகேந்திராகமத்திற் குரைசெய்தார். (உ)

இவ்வாறு பட்டவித்யாகண்டருடைய குமாரர் பட்டநாராயணகண்டர் செய்த மிருகேந்திர விருத்தி முற்றிற்று.